உதயனுடன் கிரிக்கெட் கொண்டாட்டம்!
இன்றைய உதயனுடன் நான்கு வர்ணத்தில் அழகிய இணைப்பு!
உதயனுடன் தினமும் இணைந்திருங்கள்!

உதயன்
Uthayan - A lively National Tamil Daily
சுடர்: 30 கதிர்: 071 வள்ளுவர் ஆண்டு: 2046 தை 22, வியாழக்கிழமை 05.02.2015

வானிலை
மழையுடன் கூடிய வானிலை காணப்படும் இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

# தமிழர் மனங்களை வெல்ல நடவடிக்கை

## சுதந்திர தின உரையில் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு



கொழும்பு, பெப். 5
போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் வடக்கு – கிழக்கு மக்களின் மனத்தில் இன்னமும் சந்தேகங்கள் நிலவுகின்றன. வடக்கு – தெற்கு மக்களின் இதயங்கள் ஒன்றிணையவில்லை. நாம் அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம்.– இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

"அற்புதமான நாடு – ஒளிமயமான நாளை" என்ற தொனிப்பொருளின் இலங்கையின் 67ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"காலனித்துவ ஆட்சியிலிருந்து எமது நாடு இன்றைய தினமே விடுதலை பெற்றது. இந்த தினத்தை வரலாற்று முக்கியத்துவமிக்க இடமான சிறி ஜயவர்த்தனபுரவில் கொண்டாடக் கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"நாட்டில் 30 வருடகாலமாக காணப்பட்ட பயங்கரவாதம் 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனாலும் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மக்களின் இதயங்களை வெல்லவில்லை. அவர்களின் மனத்தில் இன்னமும் சந்தேகங்கள் நிலவுகின்றன. வடக்கு மற்றும் தெற்கு மக்களை இணைக்கும் வகையில் தேசிய நல்லிணக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டியுள் பக்.25

## கச்சதீவு திருவிழா; இலங்கை அகதிகளுக்கு தடை!

இராமநாதபுரம்,பெப்.5
கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கு இந்தியாவில் உள்ள ஈழ அகதிகள் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 2 நாள்கள் நடைபெறவுள்ளது. கச்சதீவுக்கு செல்லும் இந்திய யாத்திரிகர்கள் தங்களுக்குரிய புகைப்படத்துடன் கூடிய அடையாள பக்.25

## சொந்த நிலத்தை தராவிடில் தேர்தலை புறக்கணிப்போம்

### எச்சரிக்கின்றனர் வலி.வடக்கு மக்கள்

யாழ்ப்பாணம்.பெப்.5
எமது நிலங்களில் எம்மை மீள்குடியமர அனுமதிவழங்க புதிய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை புறக்கணிப்போம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர் வலி.வடக்கு மக்கள்.

"புதிய அரசால் 100 நாள் வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் நாங்கள் எதிர்பார்ப்பது எமது நிலங்களில் நாங்கள் குடியமர வேண்டும் என்பதே. 100 நாள் வேலைத்திட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றி மக்களை குடியமர்த்த வேண்டும்."– என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வலி. வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. அதிலேயே வலி.வடக்கு மக்கள் இவ்வாறு பக்.25

## சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கெடுத்தார் சம்பந்தன்!

### 1972 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பங்கெடுத்த முக்கிய தமிழ் அரசியல் தலைவர் இவரே



யாழ்ப்பாணம், பெப்.5
நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற இலங்கையின் 67 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் மற்றும் பக்.25

## பிரதான கட்சிகள் இணைந்து தேர்தலின் பின்னர் கூட்டரசு

### அதில் எந்த மாற்றமும் வராது என்கிறார் சந்திரிகா



கொழும்பு, பெப். 5
நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இரு பிரதான கட்சிகளும் இணைந்து கூட்டு அரசையே அமைக்கும். அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை – இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்தவுடன் இணைந்து ஒரு போதும் செயற்படப்போவதில்லை என்றும் பக்.25

## நிறைய சவால்கள் காத்திருக்கின்றன



### இலங்கை வெற்றிபெற கைகொடுப்போம் என்கிறது அமெரிக்கா

கொழும்பு, பெப். 05
இலங்கைக்கு இன்னமும் நிறைய சவால்கள் இருக்கின்றன. அந்த சவால்களை வெற்றி கொள்வதற்கு, இலங்கையுடன் இணைந்து அமெரிக்கா இணைந்து செயற்படும். பக்.25

## அமைதிக்கு வந்த பங்கம் என்ன?

முப்படையினரையும் பயன்படுத்தும் அளவுக்கு நாட்டின் பொது அமைதிக்கு என்ன பங்கம் ஏற்பட்டுள்ளது? என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்க்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன். பக்.02

## தமிழர் வழங்கிய சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது புதிய அரசு

### மாவை. சேனாதிராசா எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.5
சர்வதிகார ஆட்சி ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே தமிழ் மக்கள் தேர்தலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். புதிய அரசு இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தமிழ் மக்களால் கடந்த கால அரசியல் சூழல்கள் மாற்றப்பட்டுள்ளது. பக்.25

# செய்திகள்

# பொது அமைதிக்கு எவ்வாறு பங்கம்?

## முப்படையை பயன்படுத்தும் அளவுக்கு என்ன நடந்தது மைத்திரிபாலவிடம் கேட்கின்றார் சுரேஷ் எம்.பி



யாழ்ப்பாணம், பெப். 5
முப்படையினரையும் பயன்படுத்தும் அளவுக்கு நாட்டின் சகல மாவட்டங்களிலும் பொது அமைதிக்கு என்ன பங்கம் ஏற் பட்டுள்ளது என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
நாட்டின் சகல மாவட்டங்களினதும் பொது அமைதியை நிலை நாட்டுவதற்காக ஆயுதம் தாங்கிய முப்படையினரையும் வேண்டுவதாகக் கோரும் வர்த்தமானி பிரசுரம் ஜனாதிபதி மைத்திரிபாலவினால் கடந்த 2 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
நாட்டில் – அதுவும் சகல மாவட்டங்களினதும் பொது அமைதிக்கு என்ன பாதிப்பு வந்து விட்டது என்று தெரியவில்லை. சில வேளைகளில், தற்போதைய அரசு சொல்வதைப் போல, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவின் சதித் திட்டங்கள் ஏதாவது முன்னெடுக்கப்பட்டுள்ளதா என்று தெரியவில்லை.
எதுவானாலும், ஏன் இவ்வாறு செய்யப்பட்டது என்பது தொடர்பில் ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் ஜனாதிபதி தெரியப்படுத்தவேண்டும். திடீர் என்று இவ்வாறு அறிவித்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை மக்களுக்கு நிச்சயம் காரணம் தெரியப்படுத்தப்பட வேண்டும் –என்றார். (த–5)

# சுதந்திர தினத்துக்கு 557 பேர் விடுதலை

யாழ்ப்பாணம், பெப் 5
67 ஆவ்து சுதந்திர தினத்தையொட்டி நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளிலிருந்து நேற்றுப் புதன்கிழமை 557 பேர் விடுதலைசெய்யப்பட்டனர் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.
யாழ். சிறையிலிருந்து 3 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டதாக யாழ். சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.
வருடாந்தம் சுதந்திர தினத்தையொட்டி நாடளாவிய ரீதியில் சிறைச்சாலைகளிலுள்ள சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் விடுதலை செய்ய்ப்பட்டு வருவது வழமையானதே. இம்முறையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கு அமைவாக கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
சிறு குற்றங்கள் புரிந்து நீதிமன்றினால் அபராதம் விதிக்கப்பட்ட போதும் அதனைச் செலுத்த முடியாத கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிறுஅபராதம் விதிக்கப்பட்ட, நன்னடத்தையை வெளிக்காட்டும் கைதிகளே விடுதலை செய்யப்பட்டனர் என்று அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.
(த–4–106)



# வல்லைக் கடலுள் பாய்ந்தது ஓட்டோ

சாரதி படுகாயம்





அச்சுவேலி, பெப்.5
வல்லைப் பாலத்துக்கு அருகில் ஓட்டோவைப் பிக்கப் வாகனம் மோதியதால் ஓட்டோ கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது . ஓட்டோச் சாரதி படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று புதன். கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்றது.
ஓட்டோச் சாரதியான மந்திகையைச் சேர்ந்த துரைராசா சாரங்கன்(வயது–25)காயமுற்றநிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேல திக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.
வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த ஓட்டோவை பிக்கப் ரக வாகனம் முந்திச் செல்லும்போது கொழுவி இழுத்ததாக வும், இதனால் ஓட்டோ சுழன்று கடலுக்குள் பாய்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.
கடலில் தூக்கி வீசப்பட்ட ஓட்டோவில் படுகாயமடைந்த நிலையில் இருந்த ஓட்டோச் சாரதி பொதுமக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சம்பவ இடத்துக்குச் சென்ற அச்சுவேலி பொலிஸார் பொதுமக்களின் உதவியுடன் பாரம் தூக்கி மூலம் ஓட்டோவைக் கடலில் இருந்து மீட்டு வெளியே எடுத்ததோடு மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.
(த–11–422)

# எளிமையாக நடந்த சுதந்திரதின நிகழ்வு



சுதந்திரதின நிகழ்வுகள் இடம் பெற்றன.

யாழ்ப்பாணம், பெப். 5
முப்படையினரின் சாகசங்கள், படைப்பலத்தை வெளிப்படுத்தும் இராணுவ தளபாடங்களின் அணிவகுப்புக்கள் எதுவுமின்றி மிக எளிமையாக இலங்கையின் 67 ஆவது சுதந்திரதினம் கொண்டாடப்பட்டது.
இதேவேளை, வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினரின் பலவந்த திணிப்பு எதுவுமின்றி அரச அலுவலகங்களில் மாத்திரம் சுதந்திர தினநிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.
இலங்கையின் 67 ஆவது சுதந்திரதினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதன் பிரதான தேசிய நிகழ்வு சிறி ஜெயவர்த்தனபுர கோட்டையில் அமைந்துள்ள நாடாளுமன்ற விளையாட்டு மைதானத் திடலில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோர் கலந்து கொண்டனர். அவர்களுடன் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
முப்படையினரதும் எளிமையான அணி வகுப்பு, ஒவ்வொரு மாகாணத்தையும் பிரதிநிதித்துவப்படுத்திய கலாசார அணி வகுப்பு என்பன இடம்பெற்றன.
கடந்த காலங்களில் இடம்பெறும் விமானப் படையினரின் சாகசங்கள், கடற்படையினரின் சாகசங்கள் என்பனவும், இராணுவத் தளபாடங்களின் பிரமாண்டமான அணி வகுப்புக்கள் எவையும் இந்தத் தடவை இடம்பெறவில்லை. போர்ப் படைப் பலத்தை வெளிக்காட்டும் எந்தவொரு நிகழ்வும் நடக்கவில்லை.

### வடக்கில்

வடக்கில் 19 வருடங்களின் பின்னர் இராணுவத்தினரின் பலவந்த திணிப்பு எதுவுமின்றிச் சுதந்திர தினம் இடம்பெற்றது. 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை இராணுவத்தினர் கைப்பற்றியிருந்தனர். 1996 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை பொது மக்களைப் பலவந்தப்படுத்தி, தேசியக் கொடியைப் பறக்க விடச் செய்யும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர்.
2002 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை அந்த நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மீண்டும் 2006 ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஆண்டு வரையில் இராணுவத்தினர் சுதந்திர தினத்தைக் கொண்டாடுமாறு வடக்கில் பொதுமக்களை பலவந்தப்படுத்தியிருந்தனர்.
பிரதான வீதிகளில் அமைந்துள்ள வீடுகள், வர்த்தக நிலையங்களில் தேசியக் கொடியை ஏற்றுமாறும், வாகனங்களில் தேசியக் கொடியைப் பறக்க விடுமாறும் இராணுவத்தினர் பலவந்தப் படுத்தியிருந்தனர். ஆனால் இந்த ஆண்டு அவ்வாறான எந்தவொரு பலவந்தப்படுத்தல்களும் மேற்கொள்ளப்படவில்லை. அரச அலுவலகங்களில், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபத்துக்கு அமைய சுதந்திரதின நிகழ்வுகள் இடம் பெற்றன.

### யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்ட செயலகத்தில் தேசிய கொடி ஏற்றும் நிகழ்வு காலை 9 மணிக்கு இடம்பெற்றது. தேசியக் கொடியை யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஏற்றி வைத்தார். பாடசாலை மாணவிகள் தேசிய கீதத்தை இசைத்தனர்.

### கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. தேசியக் கொடியை அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஏற்றி வைத்தார். இதன் பின்னர் பொதுமக்களுக்கு மரக்கன்று வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

### மன்னார்

மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற பிரதான நிகழ்வில் தேசியக் கொடியை, மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லிடிமெல் ஏற்றி வைத்தார். இதன் பின்னர், மன்னார் மாவட்ட கிரீடாசக்தி விளையாட்டு வீரர்களுக்கிடையில் விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றன. முதலில் இளைஞர் – யுவதிகளுக்கான வீதியோட்டப்போட்டி இடம் பெற்றது.
மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் ஆரம்பமான குறித்த வீதி ஓட்டப்போட்டி மன்னார் பிரதான பாலத்தினூடாக சென்று தள்ளாடி மாதோட்ட விளையாட்டரங்கை சென்றடைந்தது. அங்கு கபடி, வலைப்பந்து உட்பட பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளும் இடம் பெற்றன.

### கிழக்கு மாகாணம்

காத்தான்குடி நகர சபை ஏற்பாடு செய்த சுதந்திர தின வைபவம், ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது இலங்கையின் தேசியக் கொடி ஏற்றப்பட்டு அதற்கான மரியாதை செலுத்தும் நிகழ்வும் இடம் பெற்றது.
காத்தான்குடி நகர சபை ஏற்பாடு செய்த சுதந்திர தின வைபவத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போஷாக்கு உணவு வழங்கி வைக்கப்பட்டது. காத்தான்குடி கலாசார மத்திய நிலையத்தில் கல்வி கற்ற மாணவர்களுக்கான சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.
காத்தான்குடி பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த சுதந்திர தின நிகழ்வு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் அதன் பொறுப் பதிகாரி ஏ.பி.வெதகெதர தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த–5–9–10–21–56–86)

## கிண்ணத்தை வெல்லுங்கள் இந்தியாவுடன் தோற்கலாம்

இந்தியாவுடனான லீக் ஆட்டத்தில் வென்றாலும், தோற்றாலும் பரவாயில்லை. உலகக் கிண்ணத்தை பாகிஸ்தான் வெல்ல வேண்டும். அதிலே உறுதியாக இருக்க வேண்டும். இவ்வாறு பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித் தலைவர் இன்சமாம் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். இது தற்போது பாகிஸ்தானில் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது. நடைபெறப் போகும் உலகக் கிண்ணத் தொடரில், இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இன்சமாம், 1992 ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடருக்கு ஒரு மாதம் முன்பு ஆஸ்திரேலியா சென்றோம். 6 பயிற்சி ஆட்டங்களில் விளையாடி அனைத்திலும் தோல்வியடைந்தோம். ஆனால் கிண்ணத்தை வென்றோம் என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், 'அங்கு உள்ள ஆடுகளங்களுக்கு ஏற்ப தகவல் அமைத்துக் கொள்வது முக்கியம். இந்த விதத்தில் இந்தியாவுக்கு கூடுதல் அனுகூலம் உள்ளது. அணித் தலைவர் டோனி இந்திய அணியின் மிகப்பெரிய பலம். இந்தியாவுடனான ஆட்டத்தில் பாகிஸ்தான் தோற்றாலும் பரவாயில்லை. ஆனால் கிண்ணம் வெல்ல வேண்டும்' என்றார்.

இது தற்போது பாகிஸ்தானில் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது. இதுவரை உலகக் கிண்ணத் தொடரில் இந்தியாவை ஒரு போதும் பாகிஸ்தான் வீழ்த்தவில்லை. இந்தத் தொடரிலாவது இந்தியாவை வீழ்த்த வேண்டும் என்று கங்கணம் கட்டியிலுள்ள பாகிஸ்தான் வீரர்களுக்கு இன்சமாமின் கருத்து கடுப்பைக் கிளப்பியுள்ளது. (5–ரி)



## இந்திய அணிக்குள் பனிப்போர்! கிண்ணம் வெல்ல வாய்ப்பு இல்லை!!

### கவலைப்படுகின்றார் கபில்தேவ்




இந்திய அணியின் இளம் வீரர்களிடையே பனிப்போர் வெடித்துள்ளது. இது அணியின் வெற்றி வாய்ப்பை பாதிக்கும். தற்போதைய நிலையில் இந்தியா கிண்ணம் வெல்லும் வாய்ப்பு 25 சதவீதம்தான் என்று கவலையுடன் தெரிவித்துள்ளார் கபில்தேவ். இந்திய அணி நடப்புச் சம்பியன் பட்டத்தை தக்கவைக்குமா என்பது குறித்து கபில்தேவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. 'உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா கிண்ணம் வெல்ல வாய்ப்புள்ளதா என்று கேட்கும் போது, இதயம் உணர்ச்சி வசப்பட்டு 99 சதவீதம் வாய்ப்புள்ளது என்றுதான் கூறுகிறது. அதேநேரம், எனது அனுபவ மூளையை பயன்படுத்தி யோசித்துப் பார்த்தால், 25 சதவீத வாய்ப்பு இருப்பதாகத்தான் தெரிகிறது' என்று உண்மையை உரைத்தார். மேலும், 'இந்திய அணி அண்மைக்காலத்தில் சிறப்பாகச் செயற்படவில்லை. ஒருவேளை வெற்றிப் பாதைக்கு திரும்பி விட்டால், கிண்ணத்தை ஏன் வெல்ல முடியாது என்று மூளை நினைக்கின்றது. ஏனெனில், நமது அணியில் இளம் வீரர்கள் அதிகம் உள்ளனர். பலமுறை இவர்கள் திறமையை வெளிப்படுத்தினர். இந்திய அணி வீரர்களிடம் தற்போது பனிப்போர் நிலவுகின்றது. முதலில் நாம் அனைவரும் இந்தியர்கள் என்பதை ஹோக்லி, தவான் உணர வேண்டும். இதில் வேறுபாடு பார்க்கக் கூடாது' – என்றார். (5–ரி)

## வெளியாகின்றது தபால் தலை

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை முன்னிட்டு விசேட தபால் தலை வெளியிட நியூஸிலாந்து முடிவு செய்தது. ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து மண்ணில் 11ஆவது உலகக் கிண்ணத் தொடர் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதற்காக நியூஸிலாந்து தபால்துறை சார்பில் விசேட தபால் தலை நேற்று வெளியிடப்பட்டது. 14 அணிகள் – 1 வெற்றியாளர்' என்ற பெயரில் இது வெளியிடப்பட்டது. தொடரில் பங்கேற்கும் 14 அணிகள் அணியும் உடையின் நிறத்தில் பந்தும், அதில் தேசிய கொடியும் வைக்கப்பட்டிருக்கும். அத்துடன், 2015 உலகக் கிண்ணத் தொடரின் இலட்சினையும் இருக்கும். இது, 14 தபால் தலைகள் அடங்கிய ஒரு தொகுப்பாக வந்துள்ளது. (5–ரி)



## அவனின்றி அணுவும் அசையாது

### இப்படிக் கூறுகிறார் வோர்ன்




மைக்கல் கிளார்க் இல்லாமல் ஆஸ்திரேலியாவால் உலகக் கிண்ணத்தை வெல்ல முடியாது. இவ்வாறு அந்த அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும் சில்மிஷ நாயகனுமான ஷேன் வோர்ன் கூறியுள்ளார். மைக்கல் கிளார்க் இல்லாமல் ஆஸ்திரேலியா உலகக் கிண்ணத்தை வெல்ல முடியும் என்று எனக்கு தோன்றவில்லை. 12 மாதங்களுக்கு முன்பு ஆஸ்திரேலியா சிதறுண்டு கிடந்தது. கிளார்க் தலைமையேற்ற பின்னர் ஆஷஸ் தொடரை 5:0 என்றும், தென்னாபிரிக்காவை அதன் சொந்த மண்ணிலும் வீழ்த்த முடிந்தது. ஒரு அணித் தலைவராக கிளார்க்கின் கற்பனைத் திறனும், ஆக்ரோஷமும் நாம் அறிந்ததே. எனவே அவர் உடல் தகுதி பெற்றால் முதல் ஆட்டத்திலிருந்து விளையாட வேண்டியது அவசியம். ஜோர்ஜ் பெய்லி தேறமாட்டார். அவரை நீக்கி விட்டு கிளார்க்கை அணியில் சேர்க்க வேண்டும். நல்ல பந்து வீச்சாளர்கள் ஜோர்ஜ் பெய்லியை வீழ்த்தி விடுவார்கள். பெய்லியை நீக்கி விட்டால், பின்ச், வோர்னர், வொட்சன், ஸ்மித், கிளார்க் என்று பலமான வரிசை கிடைக்கின்றது. பந்துவீச்சை பொறுத்தவரை ஜோன்சன், ஹசில்வூட், ஸ்ரார்க் மற்றும் பல்க்நெர் ஆகியோரை உபயோகப்படுத்துவது அவசியம் என்றார். (5–ரி)

## ! விற்றுத் தீர்ந்தன ரிக்கெட்டுக்கள்

உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டத்துக்கானரிக்கெட்டுகள் வெறும் 20 நிமிடங்களில் விற்றுத் தீர்ந்துள்ளன.

கிரிக்கெட் மைதானத்தில் இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி உணர்ச்சி மிக்கதாகவே காணப்படும். உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானுடன் மோதிய 5 ஆட்டத்திலும் (1992, 1996, 1999, 2003, 2011) இந்தியா வெற்றிபெற்றது. இவ்விரு அணிகளுக்கு இடையிலான போட்டி இருநாட்டைச் சேர்ந்த ரசிகர்கள் மட்டுமன்றி உலகம் முழுவதும் உள்ள ரசிகர்களின் எதிர்பார்ப்பையும் கொண்டுள்ளது. இந்த நிலையில் இரு அணிகள் இடையில் நடைபெறும் லீக் ஆட்டத்துக்கான ரிக்கெட் விற்பனை எந்த ஒரு ஆட்டத்துக்கும் இல்லாதவண்ணம்வெறும்20நிமிடங்களிலே விற்று தீர்ந்தது. (5)

# கிரிக்கெட் கொண்டாட்டம்



வெற்றிக் கிண்ணத்துடன்




## அதிசயம் அரங்கேற்றம்

### கைமாறிய கிண்ணம்

விறுவிறுப்பை ஏற்படுத்தியிருந்தது உலகக் கிண்ணக் கிரிக்கெட். உதைபந்தாட்டத்தின் மீதான மோகத்தை கொஞ்சம் தணிக்கத் தொடங்கியிருந்தது. 1983 ஆம் ஆண்டு மூன்றாவது உலகக்கிண்ணம். இங்கிலாந்தையே மூன்றாவது முறையாகவும் தேர்ந்தெடுத்தனர்.

கிரிக்கெட் பரபரப்பான விளையாட்டாகியிருந்தாலும், மாற்றங்கள் எதையும் செய்யவில்லை. மீண்டு அதே சிவப்பு பந்து. 60 பந்துப் பரிமாற்றங்கள். வெள்ளை உடையுடன் வீரர்கள். கசப்பிலும் இருக்கும் இனிப்பு போல, மாற்றங்கள் இல்லாவிடினும் கிரிக்கெட் கொஞ்சம் 'கெத்தாகவே' இருந்தது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத்தீவுகள், நியூஸிலாந்து, இங்கிலாந்து 'என்ற வழமையான அணிகளுடன் கனடாவுக்குப் பதிலாக சிம்பாப்வே உள்நுழைந்தது. நடந்தேறிய இரண்டு உலகக் கிண்ணத்திலும் இரு குழுக்களாக அணிகள் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு அணியும் ஒவ்வொரு தடவையே மோதுவதற்கு லீக்கில் சந்தர்பம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு அணியும் மூன்றாவது உலகக் கிண்ணத்தில் இரண்டு தடவைகள் மோதிக் கொண்டன.



## 1983 உலகக்கிண்ணம்

### அதிகூடிய ஓட்டங்கள்

| வீரரின் பெயர் | ஆட்டங்களின் எண்ணிக்கை | ஓட்டங்கள் | அதிகூடிய ஓட்டங்கள் |
|---|---|---|---|
| டி.கோவர் (இங்கிலாந்து) | 07 | 384 | 130 |
| ஐ.வ.ரிச்சாட்ஸ் (மே.இ.தீவுகள்) | 08 | 367 | 119 |
| ஜி.புலொவர் (இங்கிலாந்து) | 07 | 360 | 81 |

### அதிகூடிய இலக்குகள்

| | ஆட்டங்களின் எண்ணிக்கை | இலக்குகள் | சிறந்த பெறுபேறு |
|---|---|---|---|
| ஆர்.பின்னி (இந்தியா) | 08 | 18 | 4/29 |
| ஏ.டி.மெல் (இலங்கை) | 06 | 17 | 5/32 |
| எஸ்.எம்.லால் (இந்தியா) | 08 | 17 | 4/20 |

கபில் தேவ் விளாசல்



## லீக் ஆட்டம்

இதுவரை இந்தியாவுடனேயே ஆரம்பித்த லீக் ஆட்டங்கள் முதன்முறை இங்கிலாந்து – நியூஸிலாந்து மோதலுடன் தொடங்கியது. சொந்த மண்ணில் ஆடிய இங்கிலாந்துக்கு நியூஸிலாந்தை வீழ்த்துவது கடினமாக இருக்கவில்லை. வெற்றியுடன் தொடங்கியது இங்கிலாந்து.

கத்துக்குட்டியாக நுழைந்த சிம்பாப்வே, ஆஸ்திரேலியாவைப் புரட்டிப் போட்டது. 13 ஓட்டங்களால் சிம்பாப்வே தனது முதல் வெற்றியைப் பதித்தது. ஆஸிக்கு கடந்த உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான் கொடுத்த அதிர்சியை விட ஆயிரம் வோட்ஸ் மின்சாரம் தாக்கியது போன்று கடினமாக அதிர்ச்சியாக அமைந்தது. கிரிக்கெட் உலகு இதிலிருந்து மீள்வதற்கு அடுத்த அதிர்சியை இந்தியா கொடுத்தது.

நடப்புச் சம்பியன் என்ற மிடுக்குடன் மேற்கிந்தியத் தீவுகள். கபில் தேவ் தலைமையில் களமிறங்கிய இந்தியா. லீக் ஆட்டத்தில் 34 ஓட்டங்களால் தீவுகளின் வெற்றி பறிபோனது. நடப்புச் சம்பியன் கேள்விக்குட்பட்டது. ஆஸிக்கே அதிர்ச்சி கொடுத்த சிம்பாப்வே இந்தியாவுக்கும் லீக் சுற்றில் அதிர்ச்சி கொடுத்தது. ஆனாலும் மயிரிழையில் இந்தியா தப்பிழைத்தது. 17 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து பரிதவித்தது இந்தியா. 'வன் மேன் ஆர்மி' யாக கபில்தேவ் போராடினார். 138 பந்துகளில் 175 ஓட்டங்கள். அதிரடிக்கு பஞ்சமான அந்தக் காலத்தில் கலக்கல் ஆட்டத்தை கத்துக்குட்டியிடம் காட்டினார்.

இந்தியத் தாக்குதலை சுதாகரித்த மேற்கிந்தியத்தீவுகள் லீக்கின் இரண்டாவது ஆட்டத்தில் இந்தியாவுக்கு தக்க பதிலடி கொடுத்தது. 66 ஓட்டங்களால் கபில்தேவின் இளம் இந்தியாவை தோற்கடித்தது. ஆசிய அணிகளில் பாகிஸ்தானும், இந்தியாவும் எழுச்சி கொண்டிருந்தது. மறுபுறம் இலங்கை அணி எல்லோரிடமும் வாங்கிக் கட்டும் அணியாகவே இருந்தது. கடைசி லீக் ஆட்டத்தில் மாத்திரம் 'கௌரவ' வெற்றியைப் பெற்றது. நியூஸிலாந்துடன் மோதி 3 இலக்குகளால் அதைப் பெற்றது. ஆனாலும் அதனால் எந்தப் பலனும் இல்லை.

## அரையிறுதி

ஆசிய அணிகளில் இந்தியா – பாகிஸ்தான் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற இலங்கை நாடு திரும்பியது. அரையிறுதியில் இரு ஆசிய அணிகள் ஆதிக்கம் செலுத்தியது. இவர்களுடன் கரீபியன்களும், இங்கிலாந்தும் நுழைந்திருந்தன. இங்கிலாந்தும் – இந்தியாவும், பாகிஸ்தானும் – மேற்கிந்தியத்தீவுகளும் மோதிக் கொண்டன.

தாயக மண்ணிலேயே இங்கிலாந்தை ஆட்டம் காணச் செய்தது இந்தியா. முதன்முறையா அரையிறுதிக்குள் புகுந்த இந்தியா 6 இலக்குகள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது. இரண்டாவது தடவையாக அரையிறுதிக்குள் வந்தும் பாகிஸ்தானால் சாதிக்க முடியவில்லை. தீவுகள் இலாவகமாக 8 இலக்குகளால் வெற்றியை தனதாக்கியது.

## குசுறுத் தகவல்

உலகக் கிண்ணத்தை கபில்தேவ் பெற்றுக் கொண்டார். வெற்றி பெற்றமை தொடர்பில் ஆங்கிலத்தில் கபிலிடம் கேட்க, அவர் தட்டுத்தடுமாறினார். இதனை இங்கிலாந்து ஊடகங்கள் கொட்டை எழுத்துச் செய்திகளாகப் பிரசுரித்தன. இந்தியா திரும்பிய கபிலிடம், விமான நிலையத்தில் வைத்து இந்திய ஊடகவியலாளர்கள் இதனைப் பற்றிக் கேட்டனர். கபில் சிரித்துக் கொண்டே, 'அவர்களின் நாட்டில் நடந்த, ஆட்டம் கிரிக்கெட்டின் தாயகமாக அவர்களிடமிருந்து உலகக் கிண்ணத்தையே நாங்கள் கொண்டு வந்தோம். இது அவர்களுக்குத் தெரியவில்லை' என்றார்.

## இறுதி

மூன்றாவது உலகக் கிண்ணத்தில் மூன்றாவது முறையாக தீவுகள் இறுதிக்கு. இந்தியா இப்போதே இறுதி ஆட்டத்துக்கு அறிமுகம். லீக்கில் இரு தடவை மோதிப் பலப் பரீட்சை நடத்தியிருந்தன இரு அணிகளும். ஒவ்வொரு தடவை ஒவ்வொருவர் வென்றிருந்தனர். இது இறுதி ஆட்டத்தின் சூட்டை மேலும் ஏற்றியிருந்தது.

இந்தத் தடவை நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றது மேற்கிந்தியத்தீவுகள். கடந்த இரு தடவையும் எதிரணி பூவா தலையாவில் வெற்றி பெற்றதால், ஆட்டத்தில் தீவுகள் வெற்றி பெற்றிருந்தது. இந்தியாவின் வெற்றிக்கு, தீவுகள் நாணயச் சுழற்சியில் வென்றது பல மாய் அமைந்தது.

துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இந்தியா சுமராகவே ஆடியது. சொல்லிக் கொள்ளும்படியாக ஓட்டங்கள் இல்லை. அதிகபட்சமே 38 ஓட்டங்கள்தான். சிறீக்காந் பெற்றுக் கொடுத்தது அது.

ஒட்டுமொத்த இந்தியாவும் 183 ஓட்டங்களுக்குள் அடக்கம். ஜாம்பவான்களைக் கொண்ட தீவுகளுக்கு இதுவொன்றும் கடினமில்லை. விவிலியன் ரிச்சட்ஸ், கிளைவ் லொயிட், கடந்த உலகக் கிண்ணங்களின் இறுதியில் சதம் விளாசியவர்கள். இவர்கள் இருக்கையில் தீவுகளுக்கு வெற்றி நிச்சயம் என்ற நிலையிலேயே, பதிலளிப்பு ஆட்டம் தொடங்கியது.

ஆனால் வெற்றிக் காற்று இந்தியா பக்கம்தான் வீசத் தொடங்கியது. மதன்லால், அமர்நாத் பந்துகள் தீவுகளின் மூன்றாவது உலகக் கிண்ண கனவை தகர்த்து விட்டது. 43 ஓட்டங்களால் மூன்றாவது உலகக் கிண்ணம் இந்தியாவிடம் சென்றது.







அந்தக் காலத்து ஆட்டம்

# கிரிக்கெட் கொண்டாட்டம்

## உலகக் 2015 கிண்ணம்

| குழு - A | குழு - B |
|---|---|
| இங்கிலாந்து | தென்னாபிரிக்கா |
| ஆஸ்திரேலியா | இந்தியா |
| இலங்கை | பாகிஸ்தான் |
| பங்களாதேஷ் | மே.இ.தீவுகள் |
| நியூஸிலாந்து | சிம்பாவே |
| ஆப்கானிஸ்தான் | அயர்லாந்து |
| ஸ்கொட்லாந்து | ஐக்கிய அரபு இராச்சியம் |

லீக் ஆட்டங்களின் அடிப்படையில் புள்ளிப் பட்டியலில் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகள் காலிறுதிக்கு தகுதிபெறும்.

**காலிறுதி - 1** A1 எதிர் B4
**காலிறுதி - 2** A2 எதிர் B3
**காலிறுதி - 3** A3 எதிர் B2
**காலிறுதி - 4** A4 எதிர் B1

| | |
|---|---|
| **அரையிறுதி - 1** | காலிறுதி 1 இல் வெற்றி பெற்ற அணி (எதிர்) காலிறுதி 3 இல் பெற்றி பெற்ற அணி |
| **அரையிறுதி - 2** | காலிறுதி 2 இல் வெற்றி பெற்ற அணி (எதிர்) காலிறுதி 4 இல் பெற்றி பெற்ற அணி |



## ஆஸ்திரேலிய அணியையும் அச்சுறுத்தும் காயங்கள்

காயமடைந்துள்ள ஆஸ்திரேலிய வீரர் ஜேம்ஸ்பல்க்னர் உலகக் கிண்ண தொடரில் விளையாடுவது சந்தேகமாகியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த முத்தரப்பு ஒரு நாள் தொடரின் இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர் ஜேம்ஸ் பல்க்னர், 24 பந்துகளில் 50 ஓட்டங்கள் விளாசினார்.

மேலும், பந்து வீசிய போது தனது முதல் பந்திலேயே இலக்கையும் கைப்பற்றினார். ஆனால், பல்க்னர் தனது மூன்றாவது பந்துப் பரிமாற்றத்தை வீசிக் கொண்டிருந்தபோது காயமடைந்தார். இதனால் அவர் பந்து வீச்சை கைவிட்டு பாதியிலேயே வெளியேறினார்.

சொந்த நாட்டில் உலகக் கிண்ண தொடர் தொடங்குவதற்கு முன்னர் பல்க்னர் காயமடைந்துள்ளது, ஆஸ்திரேலிய அணிக்கு பெரும் இழப்பாகக் கருதப்படுகிறது.

துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் சிறப்பாகச் செயற்படும் ஜேம்ஸ்பல்க்னர், ஆட்டத்தை ஆஸ்திரேலியாவுக்கு சாதகமாக சிறப்பாக முடித்து வைப்பவர் என்ற பெயரும் பெற்றவர். இதன் காரணமாக, காயத்தால் அவதிப்பட்டு வரும் அணித் தலைவர் மைக்கல் கிளார்க்கை கூட கண்டு கொள்ளாத கிரிக்கெட் ஆஸ்திரேலியா, பல்க்னர் காயமடைந்துள்ளதால் பெரும் கவலை அடைந்துள்ளது. (5–ரி)




# ஜனரஞ்சகம்



**நாய் மாதிரி அலைஞ்சா**
**அவன் ஏழை...**
**நாயோட அலைஞ்சா**
**அவன் பணக்காரன்**
**இதுதான் உலகம்...!**

சொந்தங்கள் எல்லாம் சிரித்து மணமக்கள் உம்முன்னு இருந்தா அது Arranged marrage



**அதுவே, மணமக்கள் சிரிச்சிட்டு சொந்தங்கள் எல்லாம் உம்முன்னு இருந்தா அது** love marrage



## திரிஷா- நயன்

## ஆசை நிறைவேறியது

திரிஷா'வும், நயன்தாராவும் நெருங்கிய தோழிகளாகிவிட்டனர். காதல் கதைகளில் வலம் வந்து கொண்டிருந்த இருவரும் திகில் படத்தில் நடிக்க வேண்டும் என்று காத்திருந்தனர்.

அதற்கு ஏற்ப 'மாயா' திகில் படத்தில் நடிக்க வாய்ப்பு வந்த போது நயன்தாரா ஒப்புக்கொண்டார். ஆரி கதாநாயகனாக நடிக்கும் இந்தப் படத்தில் ஒரு குழந்தைக்கு அம்மாவாக நடிக்கிறார் நயன்தாரா. இதன் படப்பிடிப்பு முடிந்துள்ளது. ஏற்கனவே சூர்யா ஜோடியாக மாஸ் படத்தில் நயன்தாரா நடித்து வருகிறார். அந்தப் படம் வெளியான பின்னரே, திகில் படத்தை வெளியிட திட்டமிடப்பட்டிருக்கிறது. வருண் மணியனுடன் நிச்சயதார்த்தம் முடிந்ததையடுத்து திருமண நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் திரிஷா. அவரும் முதன்முறையாக 'போகி' என்ற திகில் படத்தில் நடிக்கிறார். இதுபற்றி அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறும்போது, போகி திகில் படப்பிடிப்பில் கலந்து கொண்டிருக்கிறேன். 3 பேரின் பயணத்தை மையமாக வைத்து உருவாக்கப்படுகிறது, என்றார்.





## பாம்பு மசாஜ்

பிலிப்பைன்ஸில், சேபு நகர விலங்கியல் பூங்காவில் மலைப்பாம்பு மசாஜ்கள் செய்யப்படுகின்றன. இந்த விலங்கியல் பூங்காவை கொண்டு நடத்துவதற்கு, யார் பணம் வழங்க முன்வருகின்றார்களோ அவர்களுக்கே இந்த மலைப்பாம்பு மசாஜ் சலுகை வழங்கப்படுகின்றதாம். இது ஒரு வர்த்தகமாகவே மாறி வருகின்றது. நான்கு மலைப்பாம்புகளை கொண்டு இந்த மசாஜ் சேவை வழங்கப்படுகின்றது. ஒரு மலைப்பாம்பு 5 மீற்றர் நீளத்தையும் 250 கிலோ கிராம்களை கொண்டுள்ளது. இது பிலிப்பைன்ஸில் மிகவும் பிரபலமான மசாஜ் என்று கூறப்படுகின்றது. முதலில் மலைப்பாம்பு மசாஜை கண்டு பயப்படுவார்கள், ஆனால் ஒரு முறை மசாஜ் பெற்றவுடன் அது பிடித்திருக்கின்றது என்று கூறுகின்றார்கள் என்று விலங்கியல் பூங்காவின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** கூட்டளிகளிடையே ஒற்றுமை பலம் ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் சற்று தாமதமாக வந்தாலும் முயற்சிகள் எடுக்க வேண்டியிருக்கும். பொருளாதாரம் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**இடபம்:** எதிர்பாராத அதிர்ஷ்டம் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். உங்களுடைய கோரிக்கைகளை மேலதிகாரிகள் ஏற்று நடப்பார்கள்.

**மிதுனம்:** சில புதிய வியாபார யுக்திகளை நீங்கள் பயன்படுத்த வேண்டி வரும். தீவிர முயற்சிகளினாலேயே அரசு சார்ந்த காரியங்கள் நடைபெறும்.

**கடகம்:** மதிப்பு மரியாதை கூடி செல்வாக்கு அதிகரிக்கும். முயற்சிகளில் சிறுசிறு தடைகள் வரலாம். உங்களைப் பற்றி உங்கள் குடும்பத்தார் புரிந்து கொண்டு அனுசரனையாக நடந்து கொள்வர்.

**சிங்கம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஆனந்தமும் பெருகும். ஏதேனும் ஒரு காரணத்தால் குடும்பத்தை விட்டு பிரிந்து சென்றவர்கள் என்று சேருவார்கள். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் இனிதே நடக்கும்.

**கன்னி:** சளி மற்றும் மார்புத்தொல்லை வரலாம். கவனம் தேவை. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். கோரிக்கைகள், ஒப்பந்தங்கள் நிறைவேறும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

**துலாம்:** சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பார்கள். வேலை இல்லாமல் தவித்தவர்களுக்கு தகுந்த சம்பளத்துடன் சிறந்த வேலை கிடைக்கும். தொழில் செய்வோருக்கு கடந்த காலத்தை விட வளர்ச்சி விகிதம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிரிகளால் இருந்து வந்த தொந்தரவு நீங்கும். தீவிர முயற்சியின் பேரிலேயே அரசிடம் இருந்துதான் கோரிக்கைகள் நிறைவேறும். எதிர்பார்த்திருந்த வெற்றி வாய்ப்பு கிடைக்கும்.

**தனுசு:** வாழ்வில் முன்னேற சீரான வாய்ப்புகள் வந்தாலும் அவ்வப்போது குழப்பமான மனநிலையும் இருக்கும். பிள்ளைகளால் இருந்து வந்த தொந்தரவுகள் நீங்கி நல்லவைகள் நடக்க ஆரம்பிக்கும்.

**மகரம்:** இறையருளும் தெய்வ நம்பிக்கையும் கூடும். உங்கள் திறமையில் இருந்து வந்த பின்தங்கிய நிலை இனி மாறும். வெப்பம் சம்பந்தப்பட்ட உடல் உபாதைகள் குறையும்.

**கும்பம்:** தாய்வழி உறவினர்களுடன் இருந்து வந்த பிணக்கு நிலை மறைந்து உறவு பிரகாசிக்கும். எனினும் மனைவி வழியில் உள்ள உறவினர்களுடன் கருத்து பரிமாற்றங்கள் செய்யும் போது மிகுந்த எச்சரிக்கை தேவை.

**மீனம்:** எடுத்த காரியம் கைகூடும். தேவைகள் பூர்த்தியாகும். மதிப்பும் மரியாதையும் சிறப்பாக இருக்கும். உங்கள் மீதான அவப்பெயர் மறைந்து செல்வாக்கு மேம்படும். உங்கள் சொல்லுக்குப் பிறர் மரியாதை கொடுப்பர்.

## மூன்று பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம். பெப்.5

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையால் நடத்தப்படும் மூன்று பயிற்சி நெறிகளுக்குவிண்ணப்பங்கள்கோரப் பட்டுள்ளன.

தொழிற்சாலை மின்னியலாளர், கணினி வன்பொருள் தொழில் நுட்பவியலாளர் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ சாதரண தரம் கற்றிருப்பதுடன் 16 வயது தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பக்கற்கைநெறிக்குவிண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ சாதரண தரத்தில் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் ஜி.சீ.ஈ. உயர் தரத்தில் 2 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் 16 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்டவராகஇருத்தல்வேண்டும்.

தகுதியுடைய விண்ணப்ப தாரிகள் கற்கை நெறியைக் குறிப்பிட்டு தமது சுயவிவரங்களை மாவட்ட அலுவலர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, இல.44 சோமசுந்தரம் வீதி சுண்டிக்குளி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர் வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கலாம். (வ-14)

## சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



யாழ்ப்பாணம் அளவெட்டி மத்தியைச் சேர்ந்த சரவணமுத்து திரவியச்செல்வம் யாழ்ப்பாணம் நீதி நிர்வாக வலயத்துக்கான சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிவான் ஜெ. கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம், செய்து கொண்டார். ஓய்வு பெற்ற அரச ஊழியரான இவர், மகா தேவா ஆச்சிரமத்தின் செயலாளராகவும், இவர் யோகர் சுவாமி திருவடி நிலைய முதியோர் இல்ல நிர்வாக உத்தியோகத்தராகவும், கிளிநொச்சி மாவட்ட சிவதொண்டர் அணித் தலைவ ராகவும் ஏற் கனவே செயலாற் றியுள்ளார். இவர் சமய சமூகப் பணிகளில் ஆர்வமாகச் செயற்பட்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## பெரியோரைக் கனம் பண்ணல் எமது மரபு வழி வ்ழக்கம்

தென்மராட்சி, பெப்.5

பெரியோரைக் கனம் பண்ணுதல் அவசியம். இது அவர்களுக்கு நாம் கொடுக்கும் மரபும் மரியாதையும் நடைமுறையுமாகும். இதனை நாம் கண்டும் காணாததுமாக இப் பொழுது கைவிட்டு விட்டால் அது தவறான முன் மாதிரியாக அமைந்து விடும்என எடுத்துக் காட்டி வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் மாகாண சபைஅலுவலகங்களுக்குமாகாண சபையின் நெறிமுறைகளை உரியவகையில்கடைக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

தமிழில் முகவரியிடும்போது மாகாண சபை உறுப்பினரின் பெயர் எழுதப்பட்டு மொட்டையாக விடப்பட்டுள்ளது. தமிழில் முகவரியிடும் போது யாராக இருந்தாலும் பெயருக்கு அருகில் அவர்கள் என்ற சொல்லைப் பாவிப்பது மரபும் மரியாதையும் நடைமுறையும் ஆகும். எனினும் அந்த நடைமுறை அவ்விதம் பின்பற்றப்படுவதில்லை. கடந்த 15 மாதங்களாக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவராக நான் இருப்பதைக் கூட வடமாகாண சபையின் முக்கிய பணிமனை அலுவலர்கள் தெரிந்திருக்கவில்லை அல்லது வேண்டுமென்றே எம்மை அவமதிக்கும் வகையில் அவ்விதம் எழுதப்பட்டிருக்கலாம். சில சமயம் விலாசமிடும் பொறுப்பு அதற்கு உறுத்துக் கொண்டிராத பணியாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கலாம்.

இவற்றுக்கு மேலாக பல்வேறு சந்தர்ப்பங்களில் மாகாண சபை நெறிமுறைகள் பின்பற்றப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர அனுமதித்தால் அது தவறான முன்மாதிரியாக அமைந்து விடும். எனவே தாங்கள் தங்களைச் சார்ந்த சகல அலுவலர்களும் நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளைப்பின் பற்றுவதை உறுதி செய்யவேண்டும் என்று கோருகின்றேன் என்று அவைத் தலைவர் அறிவித்துள்ளார். (வ-9)

## நூனசித்தி பெற்ற பாடங்களுக்கு விசேட பரீட்சை நடத்த வேண்டும்

### பாதிக்கப்பட்ட ஆசிரிய கலாசாலை ஆசிரியர்கள் கோரிக்கை

அச்சுவேலி,பெப்.5

ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சையில் நூனசித்தி அடைந்த ஆசிரியர்களுக்கு குறித்த நூனசித்தி பாடங்களுக்கு விசேட பரீட்சை நடத்தப்பட வேண்டும் என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெறுபவர்களுக்கான இறுதிப் பரீட்சை ஆண்டு தோறும் நியமப்பட்ட காலப் பகுதியில் நடைபெறுவது இல்லை. பயிற்சி பெறும் ஆசிரியர்களது கல்வி ஆண்டு முடிவை கருத்தில் கொண்டே பரீட்சைத் திணைக்களத்தினால் பரீட்சை நடத்தப்படுகிறது.

ஆசிரியர் பயிற்சி இறுதிப் பரீட்சையில் சித்தியடையாதவர்கள் மற்றும் நூனசித்தி அடைபவர்கள் தொடர்பாக அண்மையில் வெளியிடப்பட்ட அறிவுறுத்தலில் இறுதிப் பரீட்சை நடைபெறும் போதுதான் நூனசித்தி அடைந்தவர்கள் மற்றும் சித்தியடையாதவர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியும். அவர்கள் எப்போது பரீட்சைக்கு தோற்றினாலும் அடுத்து வரும் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து தான் அவர்களுக்கான சான்றிதழ் செல்லுபடியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அறிவித்தலின் பிரகாரம், இது நூனசித்தி அடைந்த மற்றும் பரீட்சையில் சித்தியடையாதவர்களை பெரும் நெருக்கடிக்கும் குழப்பத்துக்கும் உள்ளாக்கி இருப்பதால் பரீட்சை யில் சித்தியடையத் தவறியவர்களுக்கு விசேட பரீட்சை நடத்தி அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் வெளியான ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பரீட்சை முடிவுகளின் பிரகாரம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 10 பேர் நூனசித்தி அடைந்துள்ளனர். (வ-11)

## மணவாளக் கோல பெரு விழா

யாழ்ப்பாணம், பெப்.5

கோண்டாவில் மிஷன் பாடசாலை வீதி சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் ஆலய வருடாந்த மணவாளக்கோலப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். (வ)

◆ ◆ ◆

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மணவாளக் கோலத்திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. (வ)

திறப்பு விழா.
மெகா விருந்தினர் வீடுதி
Mega Guest House
வட மாகாண அவைத் தலைவர்
சீ.வி.கே. சிவஞானம் அவர்களால்
இன்று (05.02.2015) வியாழக்கிழமை காலை 8.00 மணி சுப்வேளையில் விக்டோரியா வீதியில் அமைந்துள்ள மெகா விருந்தினர் விடுதி திறந்து வைக்கப்படுகின்றது.
எமது விருந்தினர் விடுதியில் சிறந்த அறைகள் வாடகைக்கு உண்டு.
மெகா விருந்தினர் விடுதி
இல.57, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம். 077 693 6971

யாழ் வணிகர் கழகம்
வருடாந்த பொதுக்கூட்டம்
2015 ஆம் வருடத்துக்கான வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் நடைபெறவுள்ளது.
திகதி: 07.03.2015 சனிக்கிழமை
நேரம்: காலை 9.30 மணி
இடம்: யாழ்.வணிகர் கழகப் பணிமனை
165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
செயலாளர்
யாழ்.வணிகர் கழகம்.
(சி/10243)(4.3.7)



# செய்திகள்


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 06.01.2015 சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவர்

அமரர்
**சோமசுந்தரம் மார்க்கண்டு**
(வேலணை கிழக்கு)

அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று (05.02.2015) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் தற்காலிக வதிவிட முக வரியில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

அன்னாரின் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு ஆறுதல் கூறி ஆதரவு நல்கி நேரிலும், ஊடகங்கள் வாயிலாகவும் உளத்துயரில் பங்குகொண்ட அனைத்து அன்புள்ளங்களின் கரங்களையும் நன்றியுடன் இறுகப் பற்றிக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:
சாஸ்திரி கூழாங்குளம்,
தரணிக்குளம், வவுனியா.

(56495 [45.6.3]

குடும்பத்தினர்.



## நீங்கா நினைவுடன் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

அமரர் **கந்தையா குருபரன்**

(பாலாஜி ரான்ஸ்போட், ஸ்ரீரங்கன் ஸ்ரோர்ஸ் - வர்த்தகர் கொழும்பு/யாழ்ப்பாணம்)



மொட்டாக 11.07.1972
பூவாக 06.01.2015
திதி:அபரபக்கபிரதமை [05.02.2015]

பூ ஒன்று வாடிப்போவதுவே - அப்பா
நீங்கள் வாடிப் போவீர்கள் என நாம் நம்பவில்லை
நீங்கள் வாடிப்போனபின்பும் நாங்கள் எப்படி வாழ்வது அப்பா
என் கணவரே மலரே நீங்கள் உதிர கொஞ்சம் பொறுப்பது
எப்படி - இக்கணம் உங்கள் செல்லச்சிரிப்பும் எங்கள்
கண்ணில் தெரிகிறது உங்கள் பேச்சும் கதையும்
எங்கள் காதில் கேட்குதப்பா!!
எங்கு திரும்பினாலும் உங்கள் நிழல் தெரிகிறது
நான் என்ன செய்வேன் என எனக்குத் தெரியவில்லை
எப்படி நாம் வாழ்வோம் ஆற்றுவாரும் தேற்றுவாரும்
ஆயிரம்பேர் இருந்தாலும் உங்கள் இடத்துக்கு ஈடாகுமா?
கணவரே அப்பா! உங்கள் தொலைபேசி அடிக்கடி என் காதிற்குக்
கேட்குதப்பா! அதற்கு Hello சொல்ல யார் அப்பா
இருக்கிறார்கள் இத்தனையும் மறந்து ஏன் அப்பா
தொலைதூரம் போனீர்கள் தாங்கமுடியவில்லை அப்பா! என்ற மூன்றெழுத்தை
எப்படி மறப்பது எனக்குத் தெரியவில்லை
நேர்மையும் நெஞ்சுரமும் வஞ்சகமில்லா உங்கள் பேச்சும் ஆற்று நடையும்
ஆங்கிலமும், சிங்களமும் கைவந்த கலையாக வாழ்ந்தாய் தம்பி குருபரன் உன் அன்புப் பேச்சும் வசீகரச்
சிரிப்பையும் உந்தன் சகோதரிகள் வாய்ஓயாமல் புலம்புகிறார்கள் அவர்களுக்கு ஓர் ஆறுதல் வார்த்தை
சொல்ல ஏன் நீ மறந்தாய் சகோதரா பாசத்தை ஏன் நீ புரியவில்லை.
தவிக்கிறார்கள் உன் உற்ற சகோதரிகள் அவர்களை சமாதானப்படுத்த கண்முன்னே ஒரு தடவை வாராயோ?
தம்பி குருபரன் பமினா குட்டியும் ஒவ்வொரு அறையும் அப்பாவைக் காணாது அலைகின்றது அப்பா!

அன்னாரின் பிரிவின்போது வைத்தியசாலையிலும், இல்லத்திலும், பலவழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப்பாக்கள், பதாகைகள், மலர்வளையங்கள் வெளியிட்ட அன்பு உள்ளங்கள் தொலைபேசி வாயிலாக அனுதாபம் தெரிவித்த வெளிநாட்டு உறவுகள் இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (05.02.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனை நிகழ் விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள் ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

[இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்]

கைதடி கிழக்கு,
கைதடி.

(56471)(12.3.7)

நீங்கா நினைவுடன்:
மனைவி, பிள்ளை,
சகோதரிகள், மருமக்கள், குடும்பத்தினர்.


## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப்.5

முழங்காவில் முத்துமாரி அம்பாள் ஆலய புனராவர்த்தன திவ்விய நவகுண்ட பக்ஷ மஹா யாக அஷ்டபந்தன மஹா கும்பாபி ஷேகப் பெருஞ்சாந்தி விழா எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.33 மணி தொடக்கம் 10.09 மணி வரை நடை பெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாக வுள்ளன. எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை மறுதினம் சனி, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையும் இடம்பெறும். (வ)

◆◆◆

யாழ்ப்பாணம், பெப்.5

கந்தரோடை விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி ஆலய மகாகும்பாபி ஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9.15 மணி தொடக்கம் 10.30 மணி வரை நடைபெறவுள்ளது. இதற்கான கிரியைகள் இன்று வியாழக் கிழமை காலை 6 மணி தொடக்கம் ஆரம்ப மாகவுள்ளன. எண்ணெய்க் காப்பு சாத் தும் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும். (வ)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சக ஆசிரியர்
லேகோட் தினேஸ்குமார்
அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி அந்தோனிப்பிள்ளை மரிய பிலோமினா**



அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
கிளி / இந்துக் கல்லூரி.



## கண்ணீர் அஞ்சலி



திருமதி **நித்தியா மகாலிங்கம்**
(முன்னாள் இந்திய துணைத்தூதுவரின் பாரியார்)

முன்னாள் யாழ். இந்திய துணைத்தூதுவர் திரு வெ.மகா லிங்கம் அவர்களின் பாரியார் நித்தியா மகாலிங்கம் அவர் களின் (03.02. 2015) மறைவினால் துயருற்றிருக்கும் திரு மகாலிங்கம் அவர்களுக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வ தோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.

GREEN GRASS
Hotel & Restaurant (C/19532) (10.7.3)
33, Aseervatham Lane, Hospital Road, Jaffna.


## மெய் வன்மைப் போட்டி

அச்சுவேலி, பெப்.5

அச்சுவேலி புனித தெரேசாள் மக ளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும். கல்லூரிஅதிபர்அருட் சகோதரி மரிய றொசாறியோ தலைமையில் நடை பெறும் போட்டி களில் யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மாணிக்க ராசா பிரதம விருந் தினராகவும் சிறப்பு விருந்தி னராக அச்சுவேலி யூனியன் வங்கி முகாமையாளர் அருமைத்துரை ஜெயச்சந்திரனும் கௌரவ விருந் தினராகஅச்சுவேலி பங்குத்தந்தைஅருட் தந்தை சி.ஏ.அன் ரனி பாலாவும் கலந்து கொள்கின் றனர். (வ–11)


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் **இராசேந்திரம் கார்த்திக்**

மண்ணில் 20.12.1982
விண்ணில் 05.02.2012

திதி - திரயோதசி



பண்பினை உயர்த்தாக்கி - புன்
சிரிப்பினை சிறப்பாக்கி - இன்
முகத்தினை வழமையாக்கி - நற்
செயலினை சொந்தாக்கி நின்ற கார்த்தியே!
நாட் காட்டி தான் சொல்கின்றது ஆண்டுகள்
மூன்று கழிந்ததென்று - ஆனால்
நம் மனது தான் சொல்கின்றது முப்பதாண்டு
கழிந்தாலும் கார்த்தி நாம் என்றும்
உன் நினைவுடன் தான்.

குடும்பத்தினர்.

ஆஸ்பத்திரி வீதி
சங்கானை

(56181) (45.5.6.7)

# பெரிய மாற்றங்களையே அரசிடம் எதிர்பார்க்கிறோம்

## சமரபாகு நியூட்டன் வி.க.விளையாட்டு விழாவில் சரவணபவன் எம்.பி.கருத்து

கரவெட்டி, பெப்.5

நாம் புதிய அரசிடம் எதிர்பார்த்த மாற்றங்கள் இந்த சிறிய அளவிலான மாற்றங்கள் அல்லாது, பெரிய அளவிலான மாற்றங்களே. அவற்றை விரைவில் இந்த அரசிடம் எதிர்பார்ப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.



வடமராட்சி சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழக விளையாட்டு விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–


"நாம் இந்த அரசிடம் சில மாற்றங்களை எதிர்பார்த்தோம். அதில் சில சிறிய மாற்றங்களை கடந்த வாரம் காண முடிந்தன. ஆளுநர் மாற்றப்பட்டிருக்கிறார், மாகாண பிரதம செயலாளர் மாற்றப்பட்டிருக்கிறார். இவை சிறிய மாற்றங்களே; ஆனால் பெரிய அளவிலான மாற்றங்களையே நாம் எதிர்பார்க்கிறோம். முதலாவதாக வலிகாமத்தில் எமது மக்கள் சொந்த இடத்தில் மீள குடியமர்த்தப்பட வேண்டும். அத்துடன் சிறையில் வாடும் எமது இளைஞர்கள், எமது பிள்ளைகள் விடுதலை செய்யப்பட வேண்டும். அவை விரைவில் நடக்கும் என்று எதிர்பார்க்கிறோம். நாம் எதிர்பார்த்த மாற்றம் ஜனாதிபதி மாற்றம் அல்ல எனவே நாம் எதிர்பார்க்கும் மாற்றத்தை புதிய அரசிடம் இருந்து எதிர்பார்க் கிறோம்.

வழமையாக நாம் ஒரு நிகழ்வுக்குச் சென்றால் அல்லது எமது மக்கள் இப்படி ஒன்று கூடினால் அங்கு சிவப்பு, கறுப்பு ஆடைகளுடன் சிலர் நடமாடுவர்கள். ஆனால் இன்று அவர்களைக் காணவில்லை. அவர்கள் அற்ற நிலையில் இத்தகைய நிகழ்வுகளில் மக்கள் ஆகிய நீங்கள் சுதந்திரமான முறையில் பங்கு பற்றி மகிழ்கிறீர்கள். இந்த நிலை நீடிக்க வேண்டும். இதையும் புதிய அரசிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். எந்தவித கட்டுப்பாடுகளும் அற்று அச்சுறுத்தல் இல்லாமல் எமது மக்கள் சுதந்திரமான முறையில் தொடர்ந்து நடமாடும் மாற்றத்தை புதிய அரசு தொடர்ந்தும் பேண வேண்டும்.

அண்மையில் இடம் பெற்ற ஒரு சம்பவம் குறித்துக் கேள்விப் பட்டிருப்பீர்கள். வடமராட்சி கிழக்கில் ஒரு கூட்டம் பெரும் தொகையான பணத்தை மணல் மூலமாக கொள்ளை அடித்து வந்தது. அது இடை நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் அங்கு மண் அகழ்வில் ஈடுபட்டு அந்தப் பிரதேச மக்களுக்கே அது பயன்படும் வகையில் மாற்றம் மேற்கொள்ள அந்தப் பகுதி பிரதேச சபையிடம் பொறுப்பை ஒப்படைக்குமாறு அந்தப் பகுதி மக்கள், அமைப்புக்கள் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் திருலிங்க நாதனிடம் கோரிக்கை விடுத்தனர். அவர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர் என்ற ரீதியில் தாமே முன்னின்று அதைச் செய்து கொடுத்திருக்க வேண்டும். ஆகவே மக்களாகிய நீங்கள் அதில் தலையிட வேண்டும். அந்தப்பகுதி மக்களிடம் அவை ஒப்படைக்கப் படச் செய்ய அணி திரள வேண்டும் என்று தங்களிடம் கோரிக்கை விடுக்கிறேன்"–என்றார்.

(வ–109)

# சுதந்திரதினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட குருதிக்கொடை



CW K

வலி.வடக்கு, பெப்.5

இலங்கையின் 67 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று புதன்கிழமை பகல் சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை நிகழ்வு ஐயனார் சனசமூகநிலைய மண்டபத்தில் எஸ்.காமராஜன் தலைமையில் நடைபெற்றது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் இரத்த வங்கியின் தேவையைக் கருத்தில் கொண்டு இடம்பெற்ற இந்த முகாமில், சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் இரத்த தானம் செய்துள்ளனர்.

நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை இரத்த வங்கி பொறுப்பதிகாரி மருத்துவ கலாநிதி எஸ்.பிரதீபன், இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட அலுவலர் திருமதி விநோதினி மேனன், சுன்னாகம் சந்திர சேகரப்பிள்ளையார் ஆலய குரு சிவஸ்ரீகுமரன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய குருகுமரன் தம்பதியினர் முதலில் இரத்தானம் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

(வ–86)

## டிராக்டர் சாரதிக்கு மேலதிக சிகிச்சை

தென்மராட்சி, பெப். 5

மீசாலை ரயில் கடவையைக் கடக்க முயன்ற டிராக்டரின் பெட்டியை ரயில் மோதியதில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்த டிராக்டர் சாரதி மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் சிறுகாயங்களுக்கு இலக்கான அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைப் பெற்று வெளியேறி சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளார். அங்கு அவரது உடல் நிலையில் வித்தியாசம் காணப்பட்டதால் அங்கு விபத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த பொலிஸார் பொது மக்களின் உதவியுடன் அவரைச் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்த்தனர். மருத்துவமனை அவசர சிகிச் சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் அவரை உடனடி யாக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மந்துவிலைச் சேர்ந்த சிதம்பர நாதன் மயூரன் (வயது – 32) என்பவரே இந்த விபத்தில் காய மடைந்தவராவார்.

(வ–9)

# நேற்றுப் பெய்த மழையால் அறுவடைப் பணிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ். குடாநாட்டில் நேற்றுக் காலை பரவலாக பெய்த மழையால் பெரும் போக நெற்செய்கையின் அறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டன.

திடீரென காலையில் பெய்த இந்த மழையால் வயல்களில் வெட்டி போராக வைக்கப்பட்ட நெற்கதிர்கள் மழையில் நனைந் தன. மழையில் நனைந்த இந்த நெற்கதிர்களை வயல்களில் பரவி காயவிடுவதில் அனேகமான விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டனர். திடீரென பெய்த மழையால் அறுவடைப் பணிகள் மற்றும் சூடு அடிக்கும் பணிகளும் பாதிக்கப்பட்டன.

சில வயல்களில் விவசாயிகள் மழையையும் பாராது அறுவடைப் பணியில் நேற்று நண்பகலுக்கு பின்னர் ஈடுபட்டனர். அறுவடை செய்யும் நெற்கதிர்களைஉடனுக்குடன்உலரவைத்து போராக குவிப்பதிலும் ஈடுபட்டனர்.

(வ–17)

# இடமாற்றத்தால் பாதிப்புற்றோருக்கான கலந்துரையாடல்

மாங்குளம், பெப். 5

வடமாகாணத்தில் தற்போது நடைபெற்ற அதிபர்கள் இடமாற் றத்தில் பாதிக்கப்பட்ட அதிபர்களுக்கும், வன்னி மாவட்டத்திலிருந்து ஆசிரிய இடமாற் றத்துக்கு தகுதியிருந்தும் இடமாற்றம் கிடைக்காத ஆசிரியர் களுக்குமான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் சிவன்கோவிலுக்கு முன்பா கவுள்ள டி.சி.எம். தனியார் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் பாதிக்கப் பட்ட அதிபர்கள், ஆசிரியர்களை கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

(வ–422)

6ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
26.01.1968

விண்ணில்
11.02.2009

திருமதி
சாந்தி கதிரவேற்பிள்ளை

ஆறாண்டென்ன அறுபதாண்டுகளானாலும்
அகலாதென்றும் எம் நெஞ்சைவிட்டகலா
உங்கள் நினைவுகள்

உங்கள் நினைவால் வாடும்...

கணவர்: கதிரவேற்பிள்ளை
பிள்ளைகள்: விஷ்ணுகாந்
ஹேமகாந்
விமலகாந்

45, சோலை,
பல்லவராயன்கட்டு,
ஜெயபுரம்.

51886(10.7.3)

கண்ணீர் அஞ்சலி

திருமதி
கமலாதேவி ஸ்ரீஸ்கந்தராசா

பிறப்பு 26 - 12 - 1957
இறப்பு 01 - 02 - 2015



யாழ் புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியில் வசித்தவருமான எனது அன்புச் சகோதரன் ஸ்ரீஸ்கந்தராசாவின் அன்பு மனைவி திருமதி கமலாதேவி ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

91/5, காரைநகர் றோட்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

கனகசபை தங்கவேலு
குடும்பம்.

## கந்தபுராண படிப்பு

நீர்வைக் கந்தன் ஆலயத்தில் வருடாந்த கந்தபுராணப் படிப்பு நாளை வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகும்.
ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி ஆலய மகோற்சவ கொடி யேற்றம் ஆரம்பமாகும் வரை கந்தபுராணப் படிப்பு இடம் பெறும்.
கந்தபுராணப் படிப்பு தொடர்ச்சியாக இடம்பெறும் நாள்களில் தினமும் விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறும். (வ–17)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி இரத்தினம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஊரெழு, ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இரத்தினம் நேற்று (04.02.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், சூரியகுமார் (முன்னாள் G.I.Z சாரதி), தர்சினி (ரதி ஊரெழு), காலஞ்சென்ற ரவிக்குமார் மற்றும் றஞ்சினி (கொலண்ட்), சதீஸ்குமார் (இத்தாலி), ஜெயக்குமார் (லண்டன்), றாஜினி (லண்டன்), சுதர்சினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராணி (கொழும்புத்துறை, துரையப்பா வித்தியாலய ஆசிரியர்), செல்வராசா (ஊரெழு தம்பிகடை), கமலநாதன் (கொலண்ட்), சவுந்தரி (மீசாலை), மகேஸ்வரி (லண்டன்), சுரேஸ்குமார் (லண்டன்), குகதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், அரியம், ஆனந்தம், சின்ராசா, தவராஜசிங்கம், ஜெயலட்சுமி, வசந்தா ஆகியோரின் மைத்துனரும், சாயித்தியா, சாத்வீகன், கஜனியா, சஜீவன், பௌசியா, நிரோஷன், சதுசன், கயானன், கீர்த்திகா, கஜனன், கௌரிசன், கிருத்திக், யஸ்மினா, கரிசா, திரிஷா, லக்சிகா, யாதவன், ரமேஸ்குமார், சிவச்செல்வன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2015) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.79, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 0550

(56513)
(12.3.7)

தகவல்:
**பிள்ளைகள்.**



### திருமதி தையல்நாயகி அருட்பிரகாசம்

திருநெல்வேலி, சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும், தற்போது கோப்பாய் தெற்கு இராசவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையல்நாயகி அருட்பிரகாசம் 01.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அத்தனாஸ் - றோசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான Dr.ஞானப்பிரகாசம் (ஹோமியோபதி), கனகாம்பிகை, காசிலிங்கம் (ஓய்வுபெற்ற லிகிதர் - கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்) மற்றும் இரத்தினேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காந்தியம்மா (முன்னாள் ஆசிரியர் - தனியார்கல்வி நிலையம்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரி, வைத்திலிங்கம், விசாலாட்சி, வரப்பிரகாசம், நேசம்மா, நல்லம்மா, நல்லையா மற்றும் நேசையா ஆகியோரின் மைத்துனியும், செல்வநாயகம் (ஓய்வுநிலை அலுவலர் - நில அளவைத் திணைக்களம்), அருள்நாயகி, அருள்மாலினி (பிரான்ஸ் - ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), அருட்செல்வி (கனடா - முன்னாள் ஆங்கில ஆசிரியர்), அருள்மலர் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், இந்திரவதனா, குலசபாநாதன், பாலசுப்பிரமணியம் (பிரான்ஸ்), சற்குணராஜா (கனடா), காலஞ்சென்ற பிரபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், கிரிசாந் (இந்தியா), ரவிசாந் (ஊடகவியலாளர் - தினக்குரல்), சசிகாந், சுவேந்தா, நிகேசன், அபிராமி, அகல்யா (பிரான்ஸ்), கஜப்பிரகாஸ், சுரபி, சஜந்த் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2015) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கட்டைஆலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமநாதன் லேன்
(கிரசர் பின்லேன்),
இராஜவீதி, கோப்பாய் தெற்கு,
077 248 7619

(56498)
(12.3)

தகவல்:
குழந்தைவேலு குலசபாநாதன்
(குலம் - மருமகன்), நயினாதீவு.

# கடலில் மூழ்கி இறந்த சிப்பாய் தொடர்பான விசாரணை ஆரம்பம்

## இராணுவ ஊடகப் பிரிவு தெரிவிப்பு

பொத்துவில், பெப்.5
பொத்துவில் அறுகம்பைக் கடலில் குளித்துக்கொண்டிருந்த போது நீரில் மூழ்கி இறந்த இராணுவ உத்தியோகத்தரின் சாவு தொடர்பான விசாரணைகளை இராணுவப் பொலிஸ் ஆரம்பித்துள்ளது.
இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவில் லெப்ரினன்ட் தரத்தில் கடமையாற்றிய ரி.ஏ.டி. பஸித்தா என்பவர் பகல்நேர பயிற்சிகளை முடித்துக் கொண்ட பின்னர் கடலில் குளித்துக்கொண்டிருந்த போது நீரில் மூழ்கி உயிரிழந்ததாக இராணுவ ஊடகப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
இறந்த இராணுவ உத்தியோகத்தரும் கனிஷ்ட தரத்திலுள்ள இராணுவத்தைச் சேர்ந்த குழு ஒன்றும் இராணுவப் பயிற்சிக் கழகத்தில் பயிற்சி பெற்று வந்துள்ளனர். இந்த நிலையில் இறந்தவரும் இராணு வத்தைச் சேர்ந்த அவரது நண்பர்கள் சிலரும் கடலில் குளித்துக் கொண்டிருந்போதே இந்த இடர் நிகழ்ந்துள்ளது. இதன்போது இறந்தவரின் நண்பர்கள் ஒருவாறு உயிர்தப்பியுள்ளதுடன் இறந்தவரைப் பொத்துவில் மருத்துவமனையில் உடனடியாக சேர்த்துள்ளனர். ஆனால் அவர் இறந்துவிட்டதாகப் பின்னர் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள தாக இராணுவ ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (க)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி கிறிஸ்ரீனம்மா சூசைமுத்து

எழுவைதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறிஸ்ரீனம்மா சூசைமுத்து 03.02.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து - ஆனாசியா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சவுரிமுத்து - ஆனாசியா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சூசைமுத்துவின் அன்பு மனைவியும், செசிலியம்மா (பிரான்ஸ்), ஆரோக்கியநாதர், றோஸ்மலர், பேதுருப்பிள்ளை (பிரான்ஸ்), காலஞ்சென்ற பெர்னபேற்றம்மா மற்றும் அமிர்தநாதர் (பிரான்ஸ்), அருமைநாயகம், அன்ரனிப்பெனான்டோ (பிரான்ஸ்), அன்னமரிய நாயகி ஆகியோரின் அன்புத் தாயும், அன்ரனிக்குருஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற மரியசிலி, தொம்மைபிள்ளை, மேரி (பிரான்ஸ்), அமலநாதன், கொன்சி (பிரான்ஸ்), லூட்ஸ்பேணடேற் (ஆசிரியர், மண்டைதீவு மகாவித்தியாலயம்), சாந்தி (பிரான்ஸ்), யஸ்ரீன் கொண்சலஸ் ஆகியோரின் மாமியும், அருளானந்தம், கிறிஸ்தொப்பர், காலஞ்சென்ற சிறில் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.02.2015) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித தோமையார் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர், புனிததோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
எழுவைதீவு,
077 451 5004

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளை.

(56494) (45.3)



### இம்மானுவேல் றோஸ் ரெபேக்கா (தஞ்சோ)

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 02, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், வவுனியா, சமயபுரத்தை தற்காலிக இருப்பிடமாகவும் கொண்ட இம்மானுவேல் றோஸ்ரெபேக்கா (தஞ்சோ) 01.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஸ்ரியாம்பிள்ளை-ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இம்மானுவேலின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சவரிமுத்து-சிசிலியா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், நேசம், பொன்னுத்துரை, சின்னத்தம்பி, வாவாதம்பி, பபா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லீலா (யாழ்ப்பாணம்), புஸ்பம் (ஜேர்மனி), ருக்குமணி (இந்தியா), இந்திராணி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சிறிகாந், சிறிகாந்தி (யாழ்ப்பாணம்), சிரோன் (கொழும்பு), காலஞ்சென்ற கெனடி, ஜெஸ்ரன் (குவைத்), சுபாசினி (அபுதாபி), கிறிசாந்தி (சுவிஸ்), லக்சிகா (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயும், றெஜினா (ஜேர்மனி), காலஞ்சென்ற இராசநாயகம், காலஞ்சென்ற விஜேந்திரா, சாமினி (வவுனியா), காலஞ்சென்ற லோரன்ஸ், மேவின் (சுவிஸ்), ஜெராட் (வவுனியா) ஆகியோரின் மாமியும், திரு.திருமதி அன்ரன், திரு.திருமதி தங்கராசா, திரு.திருமதி மரியநாயகம், திரு.திருமதி தேவநாயகம் ஆகியோரின் சம்மந்தியும், வதனி, யூட் (யாழ்ப்பாணம்), நோமா, டிலான் (ஆஸ்திரேலியா), றொசானி (யாழ்ப்பாணம்), றெஜி, சுஜி (யாழ்ப்பாணம் - ஆட்டோ சாரதி), நிரஞ்சன் (ஆஸ்திரேலியா), பாமினி (யாழ்ப்பாணம்), நிறஞ்சலா, ஜோர்ஜ் (லண்டன்), நிஷாந், அனுஷா (குவைத்), விநோத், விதுஷன் (கொழும்பு), றினா, ஏஞ்சனா, சாரு, கெவின் (வவுனியா), பிரவின், கிறின்ஷி (சுவிஸ்), தர்மினி, ரிரோன் (வவுனியா) ஆகியோரின் பேர்த்தியும், பிறின்சிக்கா, ரொபின், சந்தோஷ், சஞ்ஜெய், சானு, சர்வின், டீக்ஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சமயபுரம் இல்லத்திலிருந்து இன்று (05.02.2015) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் எடுத்து வரப்பட்டு, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காகவைக்கப்பட்டு பி.ப 3.00 மணியளவில் மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 077 406 5006

(56512) (45.3.7)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## நிறுவுநர் நினைவு நாளும் நினைவு பேருரையும்

தென்மராட்சி, பெப். 5
சாவகச்சேரி இந்துக் கல்லூரி நிறுவுநர் நினைவுநாளும், நினைவுப் பேருரையும் தாமோ தரன் நூல்வெளியீடும் இன்று காலை 9 மணிக்கு கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் நடைபெறும்.
கல்லூரியின் பிரதி அதிபர் ந.பால்ச் சந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கலந்து கொள்வர்.
கல்லூரியின் 66 ஆவது தாமோதரன் மலரை முதன்மை விருந்தினர் வெளியிட, யாழ்ப்பாணம் விவசாயத் திணைக்கள விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை பொறுப்பதிகாரி அ.ரமணீதரன் பெற்றுக் கொள்வார். நூலின் ஆய்வுரையை சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் நிகழ்த் துவார். நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை நெறிப் பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி நிகழ்த்துவார். (வ–9)

## ஆண்டு நிறைவு நிகழ்வு

கைதடி வடக்கு செல்வா சன சமூக நிலையத்தின் 36 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நிலைய முன்றலில் இடம்பெறும்.
நிலையத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசாவும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜாவும் கலந்து கொள்வர். நிலைய ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் நிகழ்வில் வைத்து வழங்கப்படும். கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (வ–9–288)

## நூல் வெளியீடு

பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையின் 'சைவசமயம் அன்றும் இன்றும் இங்கும்' என்ற நூல் வெளியீடும், 'தமிழ் முற்றம்' சஞ்சிகை அறிமுக விழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளன.
கல்லூரியின் பீடாதிபதி குமாரசாமி சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற இந்துநாகரிகத் துறைப் பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம் கலந்து கொள்வார். (வ–14)

# தொழில்நுட்பம்

## விசில் அடித்தால் புகைப்படம் இடம்மாறும்



கூல்ஃபோட்டோ டிரான்ஸ்பர் ஆப் ஆனது, ஆன்ட்ராய்டு போனில் இருந்து புகைப்படங்களை டெஸ்க்டாப் கணினிக்கு எளிதாக இடமாற்றம் செய்து அசத்துகிறது. வழக்கமாக, செல்போனில் உள்ள புகைப்படங்களை கணினிக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றால் யூஎஸ்பி கேபிள் தேவைப்படும். ஆனால், இந்த ஆப்ஸை பயன்படுத்தினால், கேபிள் எதுவும் இல்லாமல் வைபை மூலமாக புகைப்படங்களை கணினிக்கு மாற்றி விடுகிறது.

அதாவது, விதவிதமான முறையில் படங்களை, அனிமேஷன் பாணியில் மாற்ற முடியும். அதற்கு, செல்போனில் உள்ள புகைப்படத்தின் மீது கையை வைத்து அப்படியே தள்ளிவிட்டால், அது கணினிக்குள் போய் விடும். அல்லது, போனை கணினி மேலே வைத்து மொனிட்டர் மீது வைத்தாலும் புகைப்படம் இடம் மாறிவிடுகிறது.

இதே போல, போனை குலுக்கினாலும் புகைப்படம் கணினிக்குள் போய் விடும். புகைப்படத்தைக் கைகளால் பெரிதாக்கி அப்படியே தள்ளி விட்டாலும், புகைப்படம் கணினிக்குச் சென்று விடும். இதைவிட ஆச்சரியமான விடயம் என்னவென்றால், விசில் அடித்தாலும் புகைப்படம் இடம்மாறிவிடும்.

இந்த அனிமேஷன் வசதிகளைத் தான், புகைப்படங்களை கணினிக்கு மாற்ற இலேசான வழி என, கூல்ஃபோட்டோ டிரான்ஸ்பர் வர்ணிக்கிறது.

## ஆயிரம் மைல் வேகத்தில் பயணிக்கும் காரின் சோதனை..!?

மணிக்கு ஆயிரம் மைல் வேகத்தில் பயணிக்கும் ப்ளூட்ஹண்ட் (Bloodhound) காரின் சோதனை தோல்வி அடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

ப்ளூட்ஹண்ட் காருக்கான ரொக்கெட் ரக இயந்திரத்தை வடிவமைத்து கொடுத்த Nammo நிறுவனம் சோதனை ஓட்டத்தை மேற்கொண்டது. சோதனையின் போது இயந்திரம் இயங்கி 10 ஆவது நொடியில் தீப்பற்றி எரிந்துள்ளது. இதற்கான காரணங்கள் அறியப்படாத போதிலும் இந்தப் பரிசோதனையின் போது 3 தொன் உந்து சக்தி இயந்திரம் பிறப்பித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரண மாக, மணிக்கு 700 மைல் வேகம் கொண்ட இயந்திரத்தை உள்ளடக்கி 2015 ஆம் ஆண்டில் மீண்டும் சோதனை முயற்சியை மேற்கொண்ட பின்னர், 2016ஆம் ஆண்டில் மணிக்கு 1000 மைல்கள் வேகத்தில் செயற்படக்கூடிய இயந்திரத்தைக் கொண்டு பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

## கிரடிட் கார்ட் தகவல்கள் திருட்டு




அலுவலகங்களுக்குத் தேவையான பொருள்களை ஒன்லைனில் விற்பனை செய்யும் நிறுவனமான Staples நிறுவனத்தின் வாடிக்கையாளர்களின் 1.16 மில்லியன் கணக்கான கிரடிட் கார்ட் மற்றும் டெபிட் கார்ட் தகவல்கள் பாதுகாப்பு அற்று இருந்ததாக இந்த வருட ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது ஒரு மில்லியன் வரையான கிரடிட் கார்ட் மற்றும் டெபிட் கார்ட் தகவல்கள் திருடப்பட்டதை அந்த நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் காணப்படும் 115 நிறுவனங்கள் மற்றும் 1,400 விற்பனை நிலையங்களில் உள்ள கணினிகளை மல்வேர் தாக்குதலுக்கு உட்படுத்தி இந்தத் தகவல்கள் அனைத்தும் திருடப் பட்டுள்ளது.

அம்மாடியோவ் இத்தனை பரிசுகளும் மெக்கா?

## உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10.11.12.13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6. 7. 8. 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3. 4. 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.
1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.
1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்
1. எதிர்காலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A தரம் 10.11.12.13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6. 7. 8. 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3. 4. 5 | பண்டிகை,நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில். நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10.11.12.13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

People's Bank

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம் (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..........
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..........
கற்கும் பாடசாலை: ..........
தரம்: ..........
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..........
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..........
ஆசிரியரின் பாடத்துறை: ..........

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .......... அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும் பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில், பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

30 ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

30 அகவையில் உதயன்

# உலகச் செய்திகள்

## விமானியின் கொலைக்கு ஜோர்தான் அரசு பதிலடி

### சஜிதா உட்பட இரு தீவிரவாதிகளுக்குத் தூக்கு

அமான், பெப். 5

பணயக் கைதியாகத் தாம் பிடித்து வைத்திருந்த ஜோர்தான் நாட்டு விமானியை ஐ.எஸ். தீவிரவாதிகள் உயிருடன் எரித்துப் படுகொலை செய்தமைக்குப் பதிலடியாக, தீவிரவாதிகள் விடுவிக்கக் கோரிய ஐ.எஸ். அமைப்பின் பெண்தீவிரவாதி உட்பட 2 பேரை ஜோர்தான் தூக்கிலிட்டுத் தண்டனையைநிறைவேற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக ஐ.எஸ். தீவிரவாதிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட ஜோர்தான் நாட்டு விமானி உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டார்.



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் இந்த வெறிச்செயலுக்கு பதிலடியாகத் தங்களது நாட்டுச் சிறையில் இருந்தசஜிதா உட்பட இரு தீவிரவாதிகளை தூக்கிலிட்டுள்ளதாக ஜோர் தான் அரசு அறிவித்துள்ளது.

இந்தத் தகவலை அந்த நாட்டு அரசின் செய்தித் தொடர்பாளர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

# ஜோர்தான் விமானி உயிருடன் எரிப்பு

## ஐ.எஸ். தீவிரவாதிகளின் வெறியாட்டம்

அமான், பெப்.5

ஐ.எஸ். தீவிரவாதிகளால்சிறைப்பிடிக்கப்பட்ட ஜோர்தானிய விமானி உயிரோடு எரித்துக் கொல்லப்படும்காட்சியுடனான காணொலியை ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினர் வெளியிட்டுள்ளனர்.



ஒரு உலோகக் கூண்டில் வைக்கப்பட்டிருந்த முவாத் கசாஸ்பே என்ற அந்த ஜோர்தானிய விமானி தீயில் எரிக்கப்படுவது அந்தக் காணொலியில் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த விமானிக்கு பதிலாகதமது பிடியில் இருந்த கைதியை விடுவிக்க ஜோர்தான்அரசு தயாராக இருந்தது.

ஆனால் தமது விமானி உயிருடன் உள்ளார் என்பதை நிரூபிக்கும் சான்றுகள் தேவை எனத் தெரிவித்த ஜோர்தான் அரசு அதனை நிரூபிக்கும்படி தீவிரவாதிகளிடம் கோரியிருந்தது. இந்தநிலையிலேயே அந்த விமானி தீவிரவாதிகளால் கோரமான முறையில் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜோர்தான் விமானி செலுத்திச் சென்ற விமானம் ஐ.எஸ்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் விழுந்து நொருங்கியபோது அந்த விமானி தீவிரவாதிகளிடம் பிடிபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாலியில் இராணுவம் அதிரடித் தாக்குதல்

### 12 தீவிரவாதிகள் சாவு

தாகர், பெப். 5

ஆபிரிக்க நாடான மாலியில் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 12 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாலிநாட்டு இராணுவத்துடன், பிரான்ஸ் நாட்டு இராணுவமும் ஈடுபட்டுள்ளது. இதற்காக 3 ஆயிரம் இராணுவ வீரர்களை மாலிக்கு பிரான்ஸ்அனுப்பியுள்ளது. இந்த நிலையில் மாலியின் வடக்கு பகுதியில் உள்ள அத்ரார் டிஸ் இபோகாஸ் என்ற மலைப்பகுதியில் பிரான்ஸ் இராணுவம் அதிரடி த்தாக்குதல் நடத்தியுள்ளது. அந்தத் தாக்குத லிலேயே 12 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். அதில் இராணுவ வீரர்கள் எவரும் உயிரிழக்கவில்லை என்று பிரான்ஸ் இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஹொரக்யோவும், அர்ஜென்ரீனா நாட்டைச் சேர்ந்த ஹெர்னான் என்பவரும் தென்மேற்கு ஐரோப்பாவிலுள்ள பைரனீஸ் மலைப்பகுதியில்,துணிச்சல்மிக்க சாகசம் ஒன்றை நிகழ்த்தியுள்ளனர். அவர்கள் இருவரும் வெப்பக் காற்று பலூனில் 4,500 மீற்றர் தூரம் உயரத்துக்குச் சென்று அங்கிருந்து திரும்பிச் சாதனை படைத்துள்ளனர்.

## மூவரின் மரபணுக் குழந்தைக்கு பிரிட்டன் நாடாளுமன்ற அனுமதி

லண்டன், பெப். 5

மூன்று பேரின் மரபணுக்களிலிருந்து குழந்தையொன்றை உருவாக்குவதற்கான அனுமதியைப் பிரிட்டன் நாடாளுமன்றம் வழங்கியுள்ளது.

இதன்மூலம் உலகிலேயே மூன்று பெற்றோரின் மரபணுக்களில் இருந்து ஒருகுழந்தையை உருவாக்குவதற்கான அனுமதியை வழங்கிய முதல் நாடாக பிரிட்டன் விளங்குகிறது.

அதாவது தாய், தந்தையுடன் மூன்றாவதாக குறித்த சில மரபணுக்களை கொடையாக வழங்கும் இன்னுமொரு பெண்ணும் இதில் சம்பந்தப்பட்டுள்ளார். உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய பரம்பரை நோய்களை தாய்மார்கள் தங்களின் குழந்தைகளுக்குகடத்துவதில் இருந்து தடுக்கவே இந்த வழிமுறை பின்பற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சார்லிஹெப்டோ பத்திரிகையாளருக்கு நகைச்சுவை விருது

பாரிஸ், பெப். 5

தீவிரவாதத் தாக்குதலுக்குள்ளான சார்லி ஹெப்டோ பத்திரிகையின் பத்திரிகையாளருக்கு நகைச்சுவையாளருக்கான விருது வழங்கப்பட்டுள்ளது. உலக நகைச்சுவையாளர்களுக்கான விழாவில் சிறந்த நகைச்சுவையாளர்விருது வழங்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் தென்மேற்கு பகுதியில் கடந்த ஜனவரி 29ஆம் திகதி ஆரம்பித்த உலக நகைச் சுவையாளருக்கான விழா பெப்ரவரி முதலாம் திகதி வரை நடைபெற்றது.

அந்தவிழாவில் நாடு முழுவதிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பத்திரிகை அலுவலகத்தில் உயிரிழந்தவர்களுக்குஅஞ்சலிசெலுத்திய பிறகு, நகைச்சுவையாளர்களுக்கான விழா ஆரம்பமாகியது.

அந்தவிழாவில் சார்லி ஹெப்டோவின் பேச்சுரிமை என்ற விருதை புதிதாக ஆரம்பித்து அதனை அந்தப் பத்திரிகையின் நகைச்சுவையாளருக்கு வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

## இனப்படுகொலை வழக்கிலிருந்து சேர்பியாவுக்கு விடுதலை

### சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பு

குரோஷியா சுதந்திரப் போரின் போது, சேர்பியாவோ குரோஷியாவோ இனப்படுகொலையை மேற்கொள்ளவில்லை என்று ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றம்தீர்ப்பளித்திருக்கிறது.

1990ஆம் ஆண்டின் ஆரம்பத்தில்நடைபெற்றவன்செயல்களில் இரு தரப்புகளும் குற்றங்களை இழைத்திருந்தாலும், நீதிமன்றத்தில் இரு தரப்புகளும் பரஸ்பரம் எழுப்பிய இனப்படுகொலை குற்றச்சாட்டுக்களைநிருப்பிக்கத் தவறிவிட்டன என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், அந்தப் பிரதேசத்தில் அமைதியையும் ஸ்திரத்தன்மையையும் உறுதி செய்ய இரு நாடுகளும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் நீதிபதிகள் கூறினர்.

குரோஷியப் பிரதமர் ஸோரான் மிலனோவிச் தாம் இந்தத் தீர்ப்பு குறித்து திருப்தியடையாவிட்டாலும், அதனை ஏற்றுக்கொள்வதாகத்தெரிவித்துள்ளார். சேர்பிய அதிபர் டோமிஸ்லாவ் நிக்கோலிச் நீடித்த அமைதி நிலவும் என்று நம்புவதாகச் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்

உகோவர் என்ற நகரத்திலும் பிற இடங்களிலும், சேர்பிய ஆரசு 1991 ஆம் ஆண்டு இனப்படுகொலைசெய்ததாககுரோஷியா குற்றம்சாட்டியது. குரோஷியாவில் இருந்து இரண்டு லட்சம் சேர்பியர்கள் வெளியேற்றப்பட்டதாகக்குற்றம்சுமத்திசேர்பியா வழக்குப் பதிவு செய்தது. இந்த நிலையிலேயே அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது..

கடந்த 1991 ஆம் ஆண்டுக்கும் 1995ஆம்ஆண்டுக்கும்இடையே நடைபெற்றபோரில் 20 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர். இதில் அதிகமானோர் குரோஷியாவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

05 FEB 2015

# பிஜியின் தேசியக் கொடியிலிருந்து பிரிட்டன் கொடிச் சின்னம் நீக்கம்

பசுபிக் தீவு நாடான பிஜி தனது நாட்டுத் தேசியக் கொடியிலிருந்து பிரிட்டனின் கொடிச் சின்னத்தை நீக்க முடிவு செய்துள்ளது.

இதனை அந்த நாட்டின் அதிபர் வோர்கே பைனிமராமா உறுதி செய்துள்ளார்.

பிஜிக்கு புதிய தேசியக் கொடியொன்று உருவாக்கப்படுகிறது என அதிபர் பைனிமராமா தெரிவித்துள்ளார்

அந்தக் கொடி, பிஜி உண்மையில் ஒரு சுதந்திரமான, நவநாகரிகமான நாடு என்பதை வெளிப்படுத்தும் வகையில் இருக்கும் எனவும் நாட்டின் அதிபர்தெரிவித்துள்ளார்.

காலனித்துவ நாட்டின் அடையாளத்தைக் களைய வேண்டிய நேரம் வந்துள்ளது என்று தெரிவித்த அவர் பிரிட்டன் நாட்டின் கொடிச்சின்னம் பிஜியின் தேசியக் கொடியிலிருந்து நீக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.



# தமிழ் வேட்பாளர்கள் இல்லாத டில்லி தேர்தல்

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியின் சட்டமன்றத்துக்கு நடைபெறவிருக்கும் தேர்தலில் ஆட்சியைப் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் போட்டியிடும் மூன்று முக்கியக் கட்சிகளின் சார்பில் தமிழ்வேட்பாளர்கள் நிறுத்தப்படவில்லை என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

டில்லியின் தலைநகரில் 10 முதல் 12 லட்சம் வரை தமிழர்கள் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களில் பலர் அரசு மற்றும் தனியார் துறையில் உயர் பதவிகளில் உள்ளனர்.

எனினும் தமிழரொருவர் போட்டியிட்டு வெற்றிபெறுவது என்பது சற்றுக் கடினமான இலக்காகவே கருதப்படுகின்றது.

தமிழர்கள் டில்லி அரசியலில் பிரகாசிக்க அரசியல் கட்சிகள் தான் வழிவகுக்க முடியும் என்றும், தனி மனிதனாக போட்டியிட்டு டில்லியில் தமிழரொருவர் வெல்வது கடினமான காரியம் என்றும் பகுஜன் சமாஜ் கட்சியின் தேசிய பொருளாளர் அம்பேத் ராஜன் தெரிவித்துள்ளார்.

# பன்றிக்காய்ச்சலுக்கு 34 பேர் உயிரிழப்பு

ஹைதராபாத், பெப் 5

ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் பன்றிக்காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. இந்த நிலையில் தெலுங்கானாவில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் பன்றிக்காய்ச்சலால் 34 பேர் உயிரிழந்துள்ளதாக தெலுங்கானா அரசு அறிவித்துள்ளது.

மேலும், கடந்த ஜனவரி மாதம் 1,978 பேருக்கு பன்றிகாய்ச்சல் பரிசோதனை செய்யப்பட்டு, அதில் 668 பேருக்கு எச்1 என்1 வைரஸ் தாக்கி இருப்பது உறுதி செய்யப்பட்டதாகவும், நேற்று முன்தினம் மேற்கொண்ட சோதனையில் 39 பேருக்கு பன்றிக்காய்ச்சல் இருப்பது தெரிய வந்துள்ளதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பன்றிக்காய்ச்சலுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகளில் போதுமான அளவுக்கு மருந்துகள் இருப்பில் இருப்பதாகவும் தெலுங்கானா அரசு அறிவித்துள்ளது.




# தாய்வானில் விமான விபத்து

## 12 பேர் உயிரிழப்பு

ரைபி, பெப்.5

தாய்வான் நாட்டில் 53 பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த விமானம் திடீரென ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

தாய்வான் நாட்டின் டிரான்ஸ் ஏசியாவுக்கு சொந்தமான விமானமொன்று, சோங்சான் விமான நிலையத்தில் இருந்து கின்மென் விமான நிலையத்துக்கு 53 பயணிகளுடன் நேற்றுப் புறப்பட்டது

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே தென்கிழக்கு சீனக் கடற்கரையோரத்திலுள்ள கீலங் ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானது.

உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற மீட்புப் படையினர், விமானத்தில் இருந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

விமானத்தில் பயணித்த பலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

தற்போதைய நிலையில் 12 பேர் சாவடைந்துள்ளதாக தாய்வான் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் பயணிகளில் 10பேர் மீட்கப்பட்டுள்ளனர். மற்றவர்களை உயிருடன் மீட்க வேண்டும் என்ற உறுதியுடன் மீட்புப் பணிகள் தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# 50 ஆண்டுகளுக்குப் பின்னர் வெளிவரும் ஹார்ப்பர் லீயின் இரண்டாவது புத்தகம்

ஹார்ப்பர் லீயின் பிரசுரிக்கப்படாத மற்றொரு நாவல் மிக விரைவில் வெளியிடப்படவுள்ளது.

அமெரிக்க எழுத்தாளர் ஹார்ப்பர் லீ, எழுதி இதுவரை பிரசுரமாகாமல் இருந்த புதிய நாவல் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்பொழுது வெளிவரவுள்ளது.

கோ செட் எ வோட்ச்மேன் என்ற தலைப்பிலான இந்தப் புதிய நாவல் எதிர்வரும் ஜுலை 14ஆம் திகதி வெளிவரவுள்ளது.

அமெரிக்காவின் தென் மாகாணங்களில் கடந்த நூற்றாண்டின் முதல் அரைப் பகுதியில் நிலவிய நிற, இனப் பிரச்சனைக்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட குறிப்பிட்ட நாவல் இருபதாம் நூற்றாண்டின் அமெரிக்க இலக்கியத்தில் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது.



இந்த நாவல் 1950களில் எழுதி முடிக்கப்பட்டது. ஆனால் இந்த நாவலின் பிரதான கதாபாத்திரமாக வரும் ஸ்கவுட்டின் குழந்தைப் பருவத்தைச் சித்திரிக்கும் மற்றொரு கதையை அவர் முதலில் எழுதவேண்டும் என்று அவரது பிரசுரகர்த்தர் விரும்பியதால், அவர் இதை வெ[illegible]யிடுவதைத் தள்ளிவைத்தி[illegible]தார்.

தற்பொழுது 88 வயதா[illegible] ஹார்ப்பர் லீ தமது புத்தகம் நீ[illegible] கால இடைவெளிக்குப் பின்[illegible] பிரசுரமாகவிருப்பது பற்[illegible] தான் மிகவும் வியப்படைவ[illegible] குறிப்பிட்டுள்ளார் என்று [illegible]விக்கப்பட்டுள்ளது.

ஆக்கம்

# துறைமுகப் பாலம் கடற்படையினர் வசம்

# பொதுமக்களின் நிலையோ திண்டாட்டம்

வந்தியத்தேவர்



நெடுந்தீவில் பொருள்களை ஏற்றியிறக்கும் சேவை மற்றும் பயணிகள் சேவை கடற்படையினரின் ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்படுவதாகவும் நெடுந்தீவு துறைமுகத்தில் இருந்து கடற்படையினரை அப்புறப்படுத்த வேண்டும் எனவும் ஏற்கனவே இந்தப் பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. தற்போது படையினரை துறைமுகப் பாலத்தில் இருந்து சிறிது தூரமாவது நகர்த்த வேண்டும் என நெடுந்தீவு மக்கள் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 70 வருடங்களுக்கும் மேலாக மக்கள் பயன்படுத்தி வந்த துறைமுகப்பாலம் கடற்படையினரின் ஆக்கிரமிப்பை அடுத்து மக்களின் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட ஒடுக்கமான சிறிய பாலத்திலேயே சகல சேவைகளும் தற்போது இடம்பெற்று வருகின்றது. இந்த ஒடுக்கமான சிறிய பாலத்தில் பொருள்களை ஏற்றும்போதும் இறக்கும்போதும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஏற்கனவேயுள்ள பாலம் கணிசமான அகலத்தைக் கொண்டுள்ளதால் சகல நடவடிக்கைகளும் சிரமமின்றி இடம்பெறுவதற்கு ஏதுவாக இருந்தது. கடற்படையினர் கடற்படைத் தளத்தை துறைமுகத்துக்குள் அமைத்துக் கொண்டதால் பழையபாலம் மக்களால் பயன்படுத்த முடியாத நிலையேற்பட்டுள்ளது. இதனால் ஏற்றுமதி இறக்குமதிகள் வெகுவாக குறைந்து நெடுந்தீவின் சிறிய அளவிலான பொருளாதார நடவடிக்கைகள் மேலும் வீழ்ச்சி கண்டுள்ளது.

துறைமுகப் பகுதியில் இருந்து முழுவதுமாக கடற்படையினர் வெளியேற வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர். அது சாத்தியப்படாத பட்சத்தில் துறைமுகப் பகுதியின் மேற்குக் கரையோரத்திற்காவது அவர்களை நகர்த்த வேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாகவும் உள்ளது. நெடுந்தீவுக்கு வருகைதந்த வடக்கு மாகாண முதலமைச்சரிடம் மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளில் இது முக்கியமானதாகும்.

தற்போது கடற்படையினரின் படகுகள் துறைமுகத்தின் மேற்குக் கரையோரத்தில் அவர்களால் அமைக்கப்பட்ட பாலத்தின் அருகேயே நிறுத்தப்படுகிறது எனினும் பழைய பாலத்தின் அருகில் ஒரு சில படகுகளை நிறுத்தி வைத்து அதை முழுமையாகவே ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர். அதில் வேறு படகுகள் அனுமதிக்கப்படுவதில்லை. பிரமுகர்கள் என்று யாராவது வரும் போது மட்டும் அந்தப் பாலத்தில் இறங்க அனுமதி வழங்கப்படுகின்றது. ஊர் மக்கள் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டு வந்தபோதிலும். பொதுமக்களுக்கு மட்டும் அனுமதி வழங்குவது எந்த வகையில் நியாயம் என்பது புரியவில்லை. மேற்குக் கரையில் உள்ள பிடாரி அம்பாள் கோயில் கூட இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிக்கும் மக்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. ஒரு கொடுங்கோலின் ஆதிக்கத்தினால் மாகாண சபை உறுப்பினர்கள் தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது போனாலும் இன்று நிலைமை மாறி அரசுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கும் ஓரளவு நல்லுணர்வு எட்டியுள்ளது.

மக்களின் முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றித் தரக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. வடக்கில் இருந்து படைகளைக் குறைக்க முடியும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தற்போது தெரிவித்துள்ளார். நெடுந்தீவைப் பொறுத்தவரை பெருமளவு கடற்படையினர் அங்கு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. பொலிஸாரோ அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட முடியும். கடற்படையினரை முற்றாகவே அங்கிருந்து எடுத்துக் கொள்ளலாம். அதனால் கால் நடை வளங்களும் கணிசமாக உயரமுடியும். தவிர நெடுந்தீவுத் துறைமுகத்தில் இருந்து புறப்படும் படகுகள் துறைமுகக் கடலில் நின்று பார்க்கும் போது தெரியும். புனித சவேரியார் தேவாலயத்தை நோக்கித் தரிசித்தே செல்கின்றது. தற்போது கடற்படையினர் ஆலயத்தை மறைக்கும் விதத்தில் பெரிய கட்டடம் ஒன்றை துறைமுகத்தின் கிழக்குப் பகுதியில் அமைத்துள்ளனர். இதனால் தமது வழமையான பாரம்பரியமான சம்பிரதாயத்தைத் தொடர முடியாமல் உள்ளதாகவும் சவேரியாருக்குப் பதிலாக கடற்படையினரைத் தரிசிக்க வேண்டியுள்ளதாகவும் புலம்புகிறார்கள். நயினாதீவில் உள்ள விகாரையை மறைத்து அங்கே பெரிய கட்டடம் ஒன்றை இவர்கள் அமைப்பார்களா? துறைமுகத்தில் அமைக்கப்பட்ட கட்டடத்தை கடற்படையினர் தம்வசப்படுத்தியுள்ள மேற்குப் பகுதியில் ஏதாவது ஒரு மூலையில் அமைத்திருந்தால் கூட சவேரியாரைத் தரிசித்து தமது பயணத்தைத் தொடரக் கூடியதாக கடற்படையினரின் துறைமுகப் பகுதியில் இருந்து விலக்கிக் கொள்ளுங்கள் என்றே கேட்கிறார்கள். இதனால் துறைமுகத்தில் இருந்த வாடிவீடும் மீள செயற்பட வழிபிறக்கும் என்றும் நம்புகிறார்கள்.

இந்த நடவடிக்கைகள் நெடுந்தீவின் வளர்ச்சிக்கு முக்கியமானதுஎன்பதால்வடக்குமாகாண சபை இதில் கூடிய கவனம் செலுத்தும் என மக்கள் நம்பிக்கையுடன் உள்ளனர்.

வணிகம்



## வர்த்தகச் சிறப்பு விருது வழங்கலில் போர் எவர் ஸ்கின் நச்சுரல் கௌரவிப்பு

உற்பத்தித் துறையில் சிறப்பாக தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமைக்காக போர் எவர் ஸ்கின் நச்சுரல் நிறுவனம், அண்மையில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம் பெற்ற தேசிய வர்த்தக சிறப்பு விருதுகள் வழங்கலின் போது கௌரவிக்கப்பட்டிருந்தது.

போர் எவர் ஸ்கின் நச்சுரல் தயாரிப்புக்களின் வெற்றிகரமான செயற்பாடு என்பது ஆசிய மற்றும் ஐரோப்பிய சந்தைகளில் சிறப்பாக பிரதிபலிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அழகியல் துறையில் பல தசாப்த காலமாக கொண்டுள்ள அனுபவம் மற்றும் நவீன உற்பத்தி வசதிகள் போன்றவற்றுடன், சிறந்த ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் போன்றன உற்பத்தி செயற்பாடுகளை மேம்படுத்த பங்களிப்பு வழங்கி வருகின்றன.

இந்தநிறுவனத்தின் உற்பத்திப் பொருள்களில் சரும பராமரிப்பு மற்றும் சருமத்தை அழகுபடுத்தும் பொருள்கள் முகம், உடல் மற்றும் கூந்தல் போன்றவற்றுக்காக அமைந்துள்ளது டன், பரவசப்படுத்தும் ஸ்பா தயாரிப்புக்களும் உள்ளடங்கியுள்ளன. (த)

## ஆங்கில டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ்



மன்னார் மாவட்டத்தில் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்த 27 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் இடம் பெற்றது.

மன்னாரில் 'மெற்றோ பொலிட்டன்' கல்லூரியினால் நடத்தப்பட்ட தொழில் வாய்ப்பு உயர் கல்வி வழிகாட்டியான குறித்த ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கே குறித்த சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் ஆகியவை வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை மற்றும் சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல்,மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் மற்றும் அருட் தந்தையர்கள்,அருட்சகோதரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது குறித்த ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்த 27 மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு, தெரிவு செய்யப்பட்ட 3 மாணவர்களுக்குப் பதக்கங்களும் அணிவிக்கப்பட்டன.

அதேவேளை, பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-56)

# கருத்து

## வாசகர் திருமுகம்



### ஓய்வூதியர்களையும் கவனிக்க வேண்டும்

புதிய அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் மக்களின் பொருளாதாரச் சுமைகளை ஓரளவு குறைக்கும் வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

அரச ஊழியர்களுக்கு10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு, அத்தியாவசிய பொருள்களின் விலைகளில் குறைப்பு ஆகியன இவற்றுள் முக்கியமானவை. இதனால் இவ்வளவு காலமும் குறைந்த வேதனத்தைப் பெற்று வாழ்க்கையுடன் போராடி வந்த அரச ஊழியர்கள் மட்டுமல்லாது சாதாரண பொதுமக்களும் நிம்மதிப் பெருமூச்சு விடும் நிலை உருவாகியுள்ளது.

எரிபொருள்களின் விலையும் குறைக்கப்பட்டதால் பல்வேறு தரப்பினரும் நன்மையடைந்துள்ளனர்.

ஆனால் ஓய்வூதியர்கள் முற்று முழுதாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். குறைந்த ஓய்வூதியத்தைப் பெற்றுத் தமது வயதான காலத்தில் சிரமங்களை எதிர்கொள்ளும் ஓய்வூதியர்களையும் இந்த அரசு கவனத்தில் கொள்ள வேண்டியது தார்மீகக் கடமையாகும்.

வெறும் ஆயிரம் ரூபாவை, அதுவும் ஏப்ரல் மாதம் தொடக்கம் வழங்குவதாக அறிவிப்பு வெளியிட்டமை ஓய்வூதியர்களை மனம் நோகச் செய்து விட்டது.

மேலும் ஓய்வூதியத்தில் காணப்படும் முரண்பாடுகளை அகற்றுவதற்கும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

*மு.சுப்பிரமணியம்*
*பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்.*

### பாதுகாப்பானதாக மாற்றப்படுமா வேப்பங்குளம் அணைக்கட்டு வீதி?

நுணாவில் மேற்கில் அமைந்துள்ள வேப்பங்குளம் அணைக்கட்டின் ஊடாகப் பயணிப்பவர்கள் அபாயகரமான நிலையை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் ஏராளமான வயல் நிலங்கள் உள்ளன. வயற் செய்கையாளர்கள் பலரும் குளத்தின் அணைக்கட்டின் ஊடாகவே தமது வயல்களுக்குக் சென்று வருகின்றனர். ஆனால் அந்தப் பாதை ஒற்றையடிப் பாதையாகவே உள்ளதுடன் அதன் ஒரு புறத்தில் தண்ணீரும் மறுபுறத்தில் பற்றைக் காடுகளும் வளர்ந்து காணப்படுகின்றன.

பற்றைக் காடுகளில் பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. கடந்த வருடம் சிலர் பாம்புக் கடிக்கும் ஆளாகியுள்ளனர். இதனால் இந்தப் பாதையூடாகச் செல்பவர்கள் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளது.

> பற்றைக் காடுகளில் பாம்பு • களின் நடமாட்டங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றது.


அண்மையில் கூட குறித்த பாதையால் பயணித்த சிலர் பாம்புகளைக் கண்டு அஞ்சி ஓட்டம் பிடித்த சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இரவு வேளைகளில் இந்தப் பாதையூடாகச் செல்வதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

எனவே உரியவர்கள் பாதையோரத்தில் வளர்ந்து காணப்படும் பற்றைக்காடுகளை வெட்டியகற்றி வயல் செய்கையாளர்களின் போக்குவரத்தைப் பாதுகாப்பானதாக மாற்ற வேண்டுமென்பதே முக்கிய கோரிக்கையாக உள்ளது.

சு.செல்வராசா,
நுணாவில்.

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## துர்க்காதேவியே நேரில் வந்தாளோ ?

வடக்கு மாகாண முதலமைச்சர் க.விக்னேஸ்வரன், நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்காக பல தரப்பினரது எதிர்ப்பையும் மீறி அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்பாக சத்தியப் பிரமாணம் செய்திருந்தார். இது வடக்கில் பலத்த சர்ச்சையை உருவாக்கியிருந்தது. தமிழர் தரப்பு நல்லெண்ணங்களை சிங்கள தேசம் ஒரு போதும் கணக்கில் எடுக்காது என்று பலர் சொல்லியும் அவர் சத்தியப் பிரமாணம் செய்திருந்தார்.

விக்னேஸ்வரன் சிங்கள தேசத்துக்கு நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியும் பதிலுக்கு சிங்கள தேசம் அவருக்கு நல்ல சூடு கொடுத்தது. 'மஹிந்த வேண்டாம். வெளியேற வேண்டும். அவரது கொழும்பு அரசினால் வழங்கப்பட்ட எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை' என்று கருத்துத் தெரிவித்திருந்தார்..

அப்படிப்பட்ட விக்னேஸ்வரனே, இலங்கையிலுள்ள சகல தமிழர்களும் சுதந்திரம் கிடைக்கும் வரையில் இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கெடுக்கப் போவதில்லை என்று தெரிவித்திருந்தார். தான் நீதியரசராக இருந்த காலத்தில் கூட பங்கேற்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தார்.

நிலைமை இவ்வாறு இருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், அந்தக் கட்சியின் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும், இலங்கையின் சுதந்திர தின தேசிய வைபவத்தில் பங்கெடுத்துள்ளனர். இது தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் தலைவர் சம்பந்தன் கலந்துரையாடிய போது சகலரும் அவரது முடிவை எதிர்த்துள்ளனர். கட்சியின் எதிர்ப்பை மீறியே இரா.சம்பந்தனும், சுமந்திரனும் சுதந்திர தின நிகழ்வில் பங்கெடுத்தனர்.

புதிய அரசுக்கு தமிழர் ஆதரவளித்தமை உண்மைதான். ஆனாலும் புதிய அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தக்க வகையில் பெரிதாக எதுவும் நடைபெறவில்லை. புதிய அரசு பதவியேற்ற இந்த 25 நாள்களில், தமிழர்களது ஒரு இஞ்சி நிலம் கூட இன்னமும் விடுவிக்கப்படவில்லை. ஒரு தமிழ் அரசியல் கைதி கூட விடுவிக்கப்படவில்லை. தமிழர்களுக்கான எந்தவொரு நலனும் கிட்டவில்லை.

அவ்வாறு ஏதாவது ஒன்று நடந்திருந்தால், அதற்கான நல்லெண்ணத்தைக் காட்ட தேசிய சுதந்திரதின நிகழ்வுக்குச் சென்றிருக்கலாம். புதிய அரசினால் நேரடியான நன்மைகளைப் பெற்ற சரத்பொன்சேகாவோ, ஷிராணியோ தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த எதுவுமே செய்யாத நிலையில் இவர்கள் இவ்வாறு செய்தமை ஏற்றுக் கொள்ளக் கூடியதன்றே.

கடந்த 2012 ஆம் ஆண்டு தொழிலாளர் தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. அப்போது அதில் ஐ.தே.கவுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்றிருந்தது. மேதின மேடையில் ரணில் விக்கிரமசிங்கவும் (இப்போதைய பிரதமர்), இரா.சம்பந்தனும் இணைந்து தேசியக் கொடியான சிங்கக் கொடியைப் பிடித்து அசைத்தனர். இது தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. அதன் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, இரா.சம்பந்தன் அவ்வாறு செய்ததற்காக பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தார். அதனை உடனடியாக மறுத்த இரா.சம்பந்தன், சிங்கக் கொடியில் சிங்கம் இருக்கின்றது. அது துர்க்காதேவியின் வாகனம். அதனால் அதை நான் ஏந்தியதில் எந்தப் பிழையும் இல்லை என்று தெரிவித்திருந்தார்.

தற்போது சுதந்திர தினத்துக்கு துர்க்காதேவியே நேரில் வந்ததாலா சம்பந்தன் பங்கெடுத்தார்.

நிகழ்வில் பங்கெடுத்ததற்கு என்ன காரணத்தை இனிச் சொன்னாலும் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பது மட்டுமே நிதர்சனம்.

பத்தி எழுத்து

# கருத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சந்தேகத்தைப் போக்க ஜனாதிபதி வெளிப்படையாகச் செயற்படுவாரா?

இலங்கை அரசின் மீதான போர்க்குற்ற விசாரணையை ஜெனிவாவில் - ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் - நடத்துவது என்று முடிவைத் தடம் மாற்றி, கொழும்பில் நடத்தலாம் என்ற குரல் மேல் எழுந்து வருவது மிக வெளிச்சமாகத் தெரிகிறது.

போர்க்குற்ற விசாரணைக்கு அத்திவாரம் இட்ட அமெரிக்காவையே நோண்டிப் பார்க் கும் முயற்சியில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசு உள்ளாடும் கள்ளாடுமாக புகுந்து குழப்பம் காய்ச்சத் திட்டமிடுகிறது.

அதற்குப் பக்கத் துணையாக, பொது நல வாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலா ளர் நாயகம் கமலேஷ் சர்மாவும் கை உயர்த்தி உள்ளார். முன்னைய மஹிந்த அரசுக்கு முண்டுகொடுக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

மஹிந்த அரசு அமைத்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை உருவாக்கலாம் என்று மீண்டும் (இப்போதும்) அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கை தனது வரலாற்றில் புதியதும் மாற்றத்துக்குரியதுமான மார்க்கத்தில் திரும்பியுள்ளது. இத்தகைய நிலையில், பொதுநலவாயம் நடைமுறைச் சாத்தியமான உதவிகளை அரசுக்கு வழங்கும் என்று அவர் வர்ணம் பூசவும் தவறவில்லை.

மஹிந்த அரசுடன் கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் கைகோர்த்து, "கீச்சு மாச்சுத் தம்பளம், கீயா மாயா தம்பளம்'' விளையாடிய அவர், நடுநிலை நின்று உருப்படியான எதனையும் செய்வார் என்று கருதவும் முடியாது!

இது குறித்து மனித உரிமைச் செயற்பாட்டாளரான பசில் பெர்னாண்டோவின் பின்வரும் கருத்துக்களும் சுட்டிக்காட்ட உகந்தவை.

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றம் குறித்த ஐக்கிய நாடுகளின் பொறிமுறை, முந்தைய ஜனாதிபதி மஹிந்தவின் கீழ் அமைந்திருந்த அரசுக்கு மட்டுமே அச்சுறுத்தலாக இருந்தது -

உள்ளார்ந்து பார்த்தால், ஜனநாயக ஆட்சிக்கு அது அச்சுறுத்தலானது அல்ல. ஏனெனில் ஜனநாயக அரசுகள் தமது சொந்த முறைமையை மேம்படுத்துவது தொடர்பாகவே செயலாற்றுபவை -

ஆயினும் உள்ளூரப் பொறிமுறையைக் கையாண்டாலும் கூட, நாம் என்ன செய்கின்றோம் என்பது குறித்து அனைத்துலக சமூகத்துக்கும் தெரியப்படுத்த வேண்டும் -

சட்ட ஆட்சி, ஜனநாயகம் என்ற கட்டமைப்புக்குள் ஐக்கிய நாடு சபை சபையின் விசாரணை, சிறுபான்மை இன மக்களுக்கு உதவுகிறது. மொத்தத்தில், பெரும்பான்மையினர் மற்றும் சிறுபான்மையினர் என்ற இரு சாராருக்கும் அனுகூலம் கிடைக்க அது வழி செய்யும்.

இதே வேளை -

இலங்கை அரசுக்கு எதிராக, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்ற விசாரணை அறிக்கையை எதிர்வரும் (மார்ச் மாதம்) அமர்வில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் -

உள்ளக விசாரணையைப் பொறிமுறையை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும் -

இலங்கை வந்திருந்த அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வாலிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி இருந்தது.

அதேவேளை -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு, பகைமையை வளர்க்க வேண்டும் என்ற ஓர்மத்துடன் மேற்கொள்ளப்படவில்லை. இலங்கை (கொழும்பு) அரசுகளின் கடந்த காலச் செயற்பாடுகளின் பட்டறிவின் பால் செய்யப்பட்ட முடிவே அது. - என்றும் விவரித்து, விளக்கப்பட்டது.

கடந்த மூன்று தசாப்தங்களாக, நாட்டின் ஆட்சிக் கட்டிலில் ஏறி இறங்கிய கொழும்பு அரசுகள், தமிழ் மக்கள் மீது ஏறிவிட்ட இனக்குரோத, மனிதக் குரோத செயற்பாடுகளை, தமிழ் வாக்காளர்களினால் ஆட்சி பீடம் ஏறிய சிறிசேன அரசு சுண்டி விளையாட முனையலாகாது.

ஆட்சி மாற்றத்துடன், போர்க்குற்ற விசாரணையைப் புதிய திசை நோக்கித் திரும்பிவிடுவதற்கு முயல்வதற்கான உள்ளரங்க அரசியல் வியூகங்கள் உயர்கின்றனவோ என்ற சந்தேகம் எழுவதனைக் கிள்ளி எறிவதற்கு அவர் வெளிப்படையாக முன் வரவேண்டும். எதிர்பார்க்கலாமா?

# தமிழர்களின் துயரங்களுக்கு மைத்திரி பரிகாரம் தருவாரா?



சேரலாதன்

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் பிரச்சினை, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டதன் பின்னர் மீண்டும் வெளிக்கிளம்ப ஆரம்பித்துவிட்டது. போரைக் காரணம் கூறி பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதும், ஆயிரக்கணக்கானவர்கள் காணாமற் போகச் செய்யப்பட்டதும் முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மிக மோசமான செயல்களாகும். பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதால் இவை தொடர்பான விசாரணைகள் முறையாக இடம்பெறவில்லை. போர் ஓய்ந்து சுமார் ஆறு வருடங்கள் ஆகிவிட்ட நிலையிலும், பாதிக்கப்பட்டவர்கள் எந்தவித நியாயமும் கிடைக்காத நிலையில் வேதனையுடன் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில்தான் எவரும் எதிர்பார்க்காத ஆட்சி மாற்றமொன்று நாட்டில் இடம்பெற்றது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும், ரணில் விக்கிரமசிங்க பிரதம மந்திரியாகவும் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டனர். இந்த ஆட்சியிலாவது தமக்கு நியாயம் கிடைக்குமென்ற நம்பிக்கை தமிழர்களிடத்தில் எழுவதற்கு முக்கியமானதொரு காரணமும் இருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்தது தமிழர்களின் வாக்குகளே என்பதுதான் அந்தக் காரணம். ஆனால் மைத்திரிபால சிறிசேன மஹிந்த ராஜபக்ஷவின்அரசில்முக்கியபொறுப்புக்களை வகித்தவர் என்ற வகையில் தமிழர்களுக்கு எதிரான குற்றங்களில் அவருக்கும் பங்குண்டு.

ஆனால் காலம் கடந்தாவது அவற்றுக்குப் பிராயச்சித்தம் தேடிக்கொள்வதற்கான ஒரு நல்ல சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்துள்ளது. இதனை அவர் உரிய வகையில் பயன்படுத்திக் கொள்வாரா என் பதுதான் கேள்விக்குறி யாக நீண்டு கொண்டே செல்கின்றது.

ஏற்கனவே மஹிந்த அரசால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் பெயரளவுக்கு மட்டுமே செயற்பட்டு வந்துள்ளன. சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கு மஹிந்த மேற்கொண்ட தந்திரமாகவே இந்த ஆணைக்குழுக்களைத் தமிழர்கள் கணித்தார்கள். செயற்றிறனற்ற இந்த ஆணைக்குழுக்களின் முன்பாக சாட்சியமளிக்கச் சென்றவர்கள் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்பட்டனர். சிலர் காரணமின்றி பொய்க் குற்றச்சாட்டுக்களின் பேரில் விசாரணையின்றி தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டனர். நீதிமன்றங்கள் கூட பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்காததுதான் வேதனைக்குரியது.

முன்னாள் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷவும், முன்னாள் பாதுகாப்பு செயலராக அவரது தம்பி கோத்தபாயவும் அமர்ந்து இந்த நாட்டில் எஞ்சியிருந்த மனிதாபிமான உணர்வை முற்றாகவே துடைத்து அழித்துவிட்டனர். பதவிகள் கொடுத்த எல்லையில்லாத அதிகாரங்களும், சுகபோக வாழ்க்கையும் அவர்களது கண்களை மறைத்து அராஜகம் புரிவதற்குத் தூண்டிவிட்டன. ஆனால், ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுத்துவரும் மஹிந்தவும் அவரது சகாக்களும் தமிழர்களுக்கெதிரான குற்றச் செயல்கள் தொடர்பிலும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. இவர்களுக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியது மைத்திரி அரசின் முக்கிய கடமையாகும். தமிழர்கள் என்பதற்காக அவர்கள் தொடர்பான விடயங்களில், தற்போதைய அரசு தவறு இழைக்குமாயின், உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேச அளவிலும் இந்த அரசு தனது நன்மதிப்பை இழந்து நிற்க வேண்டியதொரு நிலையே உருவாகும். பின்னர் மஹிந்தவுக்கும், மைத்திரிக்குமிடையில் வேறுபாடு இருக்காது.

**காணாமற் போனவர்கள் தொடர்பில் இராணுவத்திடம் விசாரணைகளை மேற்கொள் வதன் மூலமாக உண்மைகள் வெளிவருவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. இதன் மூலமாக காணாமற்போன தமது உறவுகள் தொடர்பான ஏக்கத்துடன் அலைந்து திரியும் தமிழ் மக்களின் வேதனைகளுக்கு ஏதோ வொரு வகையில் முற்றுப்புள்ளி வைக்கமுடியும்**

காணாமற் போனவர்கள் பலரின் விடயத்தில் இராணுவத்தினரின் பங்கு நிறையவே உள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்படியாயின் அதற்குப் பதிலளிக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. கடந்த கால ஆட்சியில் தமிழர்களைச் சீரழித்துச் சின்னாபின்னப்படுத்தியதில் பெரும்பங்கு வகித்தவர்கள் இராணுவத்தினர் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இந்தநிலையில் காணாமற்போனவர்கள் தொடர்பில் இராணுவத்திடம் விசாரணைகளை மேற்கொள்வதன் மூலமாக உண்மைகள் வெளிவருவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. இதன் மூலமாக காணாமற் போன தமது உறவுகள் தொடர்பான ஏக்கத்துடன் அலைந்து திரியும் தமிழ் மக்களின் வேதனை களுக்கு ஏதோ வொரு வகையில் முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

05 FEB 2015

# அரசியல் தில்லுமுல்லுகளில் சிக்காது தப்பித்துக் கொள்வாரா ஜனாதிபதி?

■ சரா



புதிய ஜனாதிபதி, புதிய பிரதமர், புதிய அமைச்சர்களின் நிர்வாகத்தின்கீழான ஏறாத்தாழ ஒருமாத கால அரச நிர்வாகம் மக்கள் மத்தியில் நல்லதொரு வரவேற்பைப் பெற்று வருவதைக் கண்கூடாகக் காணமுடிகின்றது. எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலொன்று இடம்பெறுமென்பதும் உறுதியாகிவிட்டது. அந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்கு நாட்டின் இரு பிரதான கட்சிகள் போன்றே ஏனைய கட்சிகளும் தயாராகி வருவதைக் காணமுடிகின்றது. இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபட்டுள்ளது. சுதந்திரக் கட்சியின் உண்மையான வாரிசான சந்திரிகா ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் கூட்டுச் சேர்ந்திருப்பதும் அவருக்குச் சுதந்திரக் கட்சியின் உள்வீட்டில் கணிசமான தரப்பொன்றின் ஆதரவு இருப்பதும் தற்போதைய கூட்டணி அரசுக்குச் சாதகமானதாகவே உள்ளது.

அதேபோன்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சுதந்திரக்கட்சியில் நல்லதொரு செல்வாக்கு இருப்பதும் இன்னுமோர் சாதகநிலையேயாகும். இந்த இருவரையும் விட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் குறிப்பிட்டுக் கூறுமளவுக்குச் சுதந்திரக்கட்சியில் செல்வாக்கு உண்டு என்பதையும் மறுக்கமுடியாது. ஜனாதிபதித் தேர்தலில் தாம் எதிர்கொண்ட தோல்வியை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியாக மாற்றிக் கொள்வதற்கான வைராக்கியம் மஹிந்த மனதில் இருக்கவே செய்யும்.

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான அரசு என்று கூறிவிடுமளவுக்குத் தனது செல்வாக்கை உயர்த்திக் கொண்டிருக்கும், ஐக்கிய தேசியக் கட்சியும் இந்த முறை பொதுத்தேர்தலில் ஒரு கைபார்த்து விடுவோம் எனக் கச்சை கட்டிக் கொண்டு தீவிரமாகக் களத்தில் இறங்கும் என்பதிலும் சந்தேகத்துக்கு இடமில்லை.

இந்த நிலையில் கூட்டணி அரசின் சார்பாகப் பொதுத்தேர்தலில் நிற்கும் வேட்பாளர்கள் அன்னப்பறவை சின்னத்தில் தான் போட்டியிட வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் தரப்பொன்றும் சில சிறிய கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திடம் கோரிக்கைவிடுத்து வருகின்றன.


ஆனாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் பெருமளவு தொகுதி அமைப்பாளர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக்கட்சி தனது பாரம்பரிய சின்னமான யானைச் சின்னத்தில்தான் பொதுத்தேர்தலை எதிர்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.

இதனிடையே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கி விடுவதற்கு பெரும் சக்தியாக நின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில்தான் மஹிந்த தலைமையிலான தரப்பினர் போட்டியிடவேண்டுமென்ற பலமான அழுத்தமொன்றும் இவை அனைத்துக்கும் பின்னால் உள்ளது.

சுதந்திரக் கட்சியின் பாரம்பரிய சின்னமான கை சின்னத்தை இந்த முறை பொதுத்தேர்தலில் பயன்படுத்துவதே, சுதந்திரக் கட்சியில் தீவிரபற்று வைத்துள்ள இன்றைய சுதந்திரக் கட்சியின்தலைவர், ஜனாதிபதி மைத்திரிபாலவின் கௌரவமான தெரிவும் கடப்பாடும்என்பதே பிறிதொரு மைத்திரி தரப்பினரின் வாதமாகியுள்ளது. ஆனால் .தேர்தல் சின்னங்கள்பற்றிய தர்க்கவாதம் பெரும் பிரச்சினைகளுக்கு கால்கோள் இடுவதற்கு பெரிதும் இடமுள்ளது. மறுபுறத்தில், மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க என்ற இந்த மூன்று சக்திகளையும் ஓரணியில் கொண்டுவந்து பிளவுபட்டுள்ள சுதந்திரக்கட்சியைப் பலமானதொரு கட்டமைப்பாக உருவாக்கும் செயற்றிட்டமொன்றும் தற்போது இவை அனைத்துக்குப் பின்னால் இரகசியமாகத் தீட்டப்பட்டு வருவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

எவ்வாறோ சுதந்திரக்கட்சியைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால தீர்மானித்தால் அது அவரது கூட்டரசுக்கு மிகப் பெரும் பாதகமொன்றுக்கு வழி வகுக்கக் கூடும்.

தேர்தல் சின்னங்கள் என்ற குளறுபடியான குழப்பத்துக்குள் தள்ளி விழுத்தி நலிவடைந்து போகச் செய்து விடுவதற்குக் கங்கணம்கட்டிக்களத்தில் இறங்கியுள்ள தரப்புக்களின் பேசுக்கு எடுபடாது நடுவுநிலையில் நின்று தீர்க்க தரிசனமாகச் செயற்பட்டு 100 நாள்களுக்குப் பின்னரும் மைத்திரியின் ஜனநாயக நல்லாட்சியைத் தக்க வைத்துக் கொள்வது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கரங்களிலேயே தங்கியுள்ளது.




> “ ஜனாதிபதித் தேர்தலில் தாம் எதிர்கொண்ட தோல்வியை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியாக மாற்றிக் கொள்வதற்கான வைராக்கியம் மஹிந்த மனதில் இருக்கவே செய்யும்.

> “ தீர்க்க தரிசனமாகச் செயற்பட்டு 100 நாள்களுக்குப் பின்னரும் மைத்திரியின் ஜனநாயக நல்லாட்சியைத் தக்க வைத்துக் கொள்வது ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் கரங்களிலேயே தங்கியுள்ளது.

# பல்சுவை

## சாதனையில் வெற்றி பெறுவதற்கு மனிதன் தனது தன்னிஷ்டத்தைப் பிரயோகிக்கலாமா?

மனிதனுக்குச் தன்னிஷ்டம் இருக்கின்றது என நம்புவது முற்று முழுதான பிழையாகும். தனது சாதனைகளையெல்லாம் தன்னிஷ்டத்தாலும், மன உறுதியாலும் வென்றுவிடலாம் என்று மனிதன் நம்புகிறான். அகங்காரத்தினால் ஏற்பட்ட சித்தப்பிரமையாலும், எல்லாவற்றையும்



–செய்பவன்தானே என்ற பிழையான எண்ணத்தின் பிரதிபலிப்பாலும் ஏற்பட்ட விளைவு இது.

**சாயி சிந்தனை**

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### ஒவ்வொரு செயலுக்கும் எதிர்ச்செயல் உண்டு

எம்மிடமிருந்து புறப்படுகின்ற ஒவ்வொரு செயலும் எதிர்ச்செயலாக எம்மிடமே திரும்பி வருவது போல், எமது செயல்கள் பிறரிடமும், பிறரது செயல்கள் எம்மிடமும் செயற்படுகின்றன. தீங்கு செய்கின்ற ஒருவன் மேலும் தீயவனாகிறான். அவனே நல்லது செய்ய ஆரம்பிக்கும் போது மேலும் வலிமையடைந்து எப்போதுமே நல்லதைச் செய்யக் கற்றுக் கொள்கிறான். இந்த உண்மையை நீங்கள் கவனித்திருப்பீர்கள். ஒரு செயல் ஏற்படுத்தும் தாக்கத்தின் இத்தகைய தீவிரத்தைஎமதுசெயல்கள்பரஸ்பரம்ஒவ்வொருவர்மீதும்விளைவுகளையும் எதிர்விளைவுகளையும் உண்டாக்குகின்றன.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | | | 1 | | 6 | | 5 |
| | | 6 | 7 | 5 | 4 | 2 | | |
| | | 3 | | | 2 | | | |
| 3 | | 8 | | | 1 | | | |
| 1 | | | 9 | 2 | 8 | | | 4 |
| | | | 3 | | | 5 | | 8 |
| | | | 4 | | | 9 | | |
| | | 9 | 2 | 3 | 7 | 1 | | |
| 5 | | 7 | | | | | 8 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரை களையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள். இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 1 | 5 | 4 | 2 | 9 | 8 | 3 |
| 4 | 2 | 3 | 7 | 8 | 9 | 5 | 6 | 1 |
| 5 | 8 | 9 | 3 | 6 | 1 | 7 | 4 | 2 |
| 8 | 3 | 2 | 9 | 1 | 4 | 6 | 5 | 7 |
| 9 | 5 | 4 | 6 | 3 | 7 | 2 | 1 | 8 |
| 1 | 6 | 7 | 8 | 2 | 5 | 3 | 9 | 4 |
| 2 | 9 | 6 | 4 | 7 | 8 | 1 | 3 | 5 |
| 3 | 1 | 8 | 2 | 5 | 6 | 4 | 7 | 9 |
| 7 | 4 | 5 | 1 | 9 | 3 | 8 | 2 | 6 |

## நாளை

**தை-23 வெள்ளிக்கிழமை**

**06.02.2015**


திதி: துதியை: மு.ப.09.22 வரை
நட்சத்திரம்: பூரம் பி.இ.04.46 வரை
சுபநேரம்: 06.35-08.05 வரை
இராகுகாலம்:11.05-12.35 வரை

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20 | 60 | 70 | 80 | 30 | 40 | 60 | 40 |
| கத்தரி | 70 | 80 | 100 | 120 | 70 | 80 | 70 | 60 |
| கரட் | 200 | 180 | 180 | 200 | 130 | 160 | 140 | 140 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 60 | 40 | 50 | 45 | 30 |
| பயிற்றை | 180 | 160 | 140 | 160 | 140 | 160 | 140 | 100 |
| பாகல் | 140 | 100 | 100 | 140 | 110 | 180 | 200 | 150 |
| கருணைக்கிழங்கு | 70 | 60 | 60 | 80 | 60 | 80 | 120 | 150 |
| பெ.வெங்காயம் | 110 | 70 | 80 | 80 | 70 | 90 | 80 | 70 |
| சி.வெங்காயம் | 40 | 120 | 80 | 100 | 100 | 140 | 120 | 90 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 | 80 | 120 | 80 | 70 |
| தக்காளி | 200 | 180 | 220 | 220 | 240 | 240 | 250 | 240 |
| வாழைக்காய் | 90 | 80 | 90 | 100 | 90 | 120 | 80 | 70 |
| கீரை | 15 | 20 | 30 | 20 | 20 | 20 | 50 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 40 | 25 | 20 | 20 | 15 |
| பச்சை மிளகாய் | 300 | 280 | 300 | 320 | 280 | 500 | 400 | 300 |
| புடோல் | 100 | 80 | 80 | 120 | 90 | 120 | 120 | 90 |
| கோவா | 100 | 80 | 80 | 120 | 100 | 140 | 120 | 110 |
| வெண்டி | 120 | 100 | 100 | 140 | 100 | 80 | 160 | 140 |
| போஞ்சி | 140 | 160 | 140 | 200 | 140 | 200 | 220 | 120 |
| லீக்ஸ் | 160 | 240 | 200 | 280 | 260 | 300 | 260 | 200 |
| தேங்காய் | 50 | 55 | 60 | 50 | 45 | 50 | 35 | 35 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 60 | 60 | 40 | 80 | 70 | 50 |
| தேசிக்காய் | 40 | 40 | 30 | 60 | 40 | 40 | 60 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 40 | 10 | 20 | 15 |
| கறிமிளகாய் | 200 | 240 | 280 | 280 | 290 | 200 | 300 | 350 |
| இராசவள்ளி | 100 | 120 | 100 | 120 | 90 | 120 | 140 | 80 |
| பனங்கிழங்கு | 04 | 02 | 05 | – | 06 | 05 | 05 | 03 |

## கல்யாண முருங்கையின் மருத்துவம்

இன்றைய காலகட்டத்தில் வண்ண நிற மாத்திரைகள் மக்களிடையே ஆதிக்கம் செலுத்துவதால் மூலிகையின் மகத்துவங்கள் பலருக்கும் தெரிவதே இல்லை. தலைவலி, வயிற்று வலிக்கும் மருத்துவரை நாடிச் செல்கின்றனர். ஆனால் அவ்வாறு செய்யாமல் எமது ஆரோக்கியத்தை சீராக வைக்க உதவுவதில் கல்யாண முருங்கை சிறந்த நோய் நிவாரணியாகும். கல்யாண முருங்கையை வேலிகளில் நட்டு வளர்க்கிறார்கள். சுமார் 8 அடி உயரம் வரை வளரக்கூடிய இதன் இலைகள் அகன்றும் பெரிதாகவும் இருக்கும். இதன் மலர்கள் அதிக சிவப்பாக இருக்கும். கல்யாண முருங்கை இலைச்சாற்றை 10 துளி அளவு வெந்நீரில் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்தால் குடல் பூச்சிகள் அழிந்துவிடும். கல்யாண முருங்கை இலைச்சாற்றை சர்க்கரைச் சேர்த்து பாகுப்பதத்தில் காய்ச்சி வடிகட்டி ஒரு பாத்திரத்தில் பத்திரப் படுத்திக் கொள்ளவேண்டும். இதில் 4 தேக்கரண்டி அளவு எடுத்து தண்ணீர் கலந்து காலை மாலை சாப்பிட்டு வந்தால் உடல் பருமன் குறையும். கை பிடியளவு கல்யாண முருங்கை இலையை எடுத்து சாறு பிழிந்து 1டீஸ்பூன் வெந்நீரில் கலந்து குடித்தால் பசி எடுக்கும். இலையைப் பொடியாக நறுக்கி ஊற வைத்து புழுங்கல் அரிசி மாவுடன் சேர்த்து வெங்காயத்தையும் போட்டு பிசைந்து தேவையான அளவு உப்புச் சேர்த்து நல்லெண்ணெயில் வேகவைத்து மூன்று வேளை சாப்பிட்டு வந்தால் சுவாச காச நோய் குறையும். கல்யாண முருங்கை இலையுடன் மூன்று மிளகு சேர்த்து அரைத்து அதிகாலையில் சாப்பிட்டால், மூச்சு விடுவதில்



பிரச்சினை இருக்காது. இலைகளை வதக்கி மூட்டின் மீது கட்டி வந்தால் மூட்டு வலி குறையும்.

## கடலுணவுகளின் நேற்றைய நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 500 |
| நண்டு | 450 | 400 | 400 | 400 | 300 |
| கணவாய் | 400 | 550 | 500 | 600 | – |
| பாரை | 450 | 550 | 600 | 600 | 380 |
| சுறா | 600 | 500 | – | 700 | – |
| சீலா | 450 | 400 | 400 | 500 | 350 |
| விளை | 350 | 330 | 450 | 600 | 340 |
| முரல் | 350 | 350 | 400 | 300 | – |
| கும்பிளா | 350 | 300 | 500 | 500 | 300 |
| கிழாக்கன் | 400 | 500 | 450 | 300 | – |
| ஓரா | 350 | 400 | – | 400 | – |
| திரளி | 250 | 250 | 250 | 200 | – |
| நகரை | 250 | 250 | 300 | 300 | 250 |
| சூடை | 180 | 150 | 160 | 100 | 60 |
| ஒட்டி | 200 | 150 | 300 | 300 | 200 |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | 130 |
| பாலை | 300 | 250 | 450 | 300 | – |
| வாழை | 200 | 150 | 300 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | 80 | 100 | – |
| மதனம் | 280 | 250 | 250 | 300 | 200 |

# சோதிடம்




இவர்கள் செவ்வாய் இணைந்த ஆதிக்கப் பலன் கொண்டவர்கள். முழுவதுமாய் செவ்வாய்ப் பாதிப்பிருக்கும். சம உயரம் இருக்கும். சுமாரான நிறமாக இருப்பர். விழிகள் சிவந்து காணப்படும். துணிவும், வீரமும் இருக்கும். எளிதில் களைப் படைய மாட்டார்கள். இவர்களின் பேச்சு கடுமையாக இருக்கும். எப்போதும் முரட்டுத்தனத்தைக் காட்டாமல் ஆளுக்கும் சமயத்திற்கும் தக்கவாறு தந்திரமாகவும் செயல்படுவர்.

## கூட்டெண் பலன்கள் 9-9

எவரது பேச்சையும் கேட்காமல் தமது சொந்த யோசனைப்படி நடப்பர். பிறர் நோகப் பேசுவர். யோக, உடற்பயிற்சி, விளையாட்டு, போர்ப் பயிற்சியில் ஈடுபடுவர். பிரச்சினைகளில் விரும்பித் தலையிடுவர். அமைதியாக ஆட்களை எடை போடும் குணம் கொண்டவர்கள். சத்தம் சண்டையின்றி இவர் அடங்க மாட்டார்கள்.

பெருந்தன்மை உடைய இவர்கள் தம்முடன் பலரையும் தமது குடும்பமாக வைத்துக் காப்பர். பிறர் பசி தீர்க்கப் பாடுபடுவர். அழகை ரசிக்கும் இவர்கள் காதலில் ஈடுபடுவர். ஆனால் காதல் போராட்டமாகும்.

அனல் கக்கும் பேச்சாளராக, எழுத்தாளராக இருக்கலாம். அரசியலிலும் அரிய பதவிகளைப் பெறலாம். பொலிஸ், ராணுவம், தீயணைப்பு, மருத்துவமனைகளில் வேலை பார்ப்பர். சிலர் உணவு விடுதிகளில் பணிபுரிபவராக இருப்பர். பிறந்த, கூட்டு எண் ஒரே எண்ணாக இருப்பதால் பெயர் எண்ணைப் பொறுத்தும் தொழில் அமையும். வயிற்று வலி உண்டாகலாம். உணவுக் குழாய், குடல்களில் கோளாறுண்டாகும். மூச்சுத் தொடர்பான நோய், கண், பல் நோய் ஏற்படலாம்.

## சிரித்த முகம்; சிடுமூஞ்சி ஜோதிடம் கூறும் உண்மைகள்

குறிப்பாக சனி, செவ்வாய், ராகு, கேது ஆகியவற்றில் ஏதாவது ஒன்று லக்னத்தில் இருந்தால் அவரது முகத்தில் சிடுசிடுப்பு காணப்படும். குறிப்பாக செவ்வாய் லக்னத்தில் இருந்தால் மூக்குக்கு மேல் கோபப்படுபவராக இருப்பார்கள்.

லக்னத்தில் சூரியன் இருந்தாலும் அவரது கோபம் சுட்டெரிக்கும் வகையில் இருக்கும். ஆனால் நியாயமான விடயத்துக்கு மட்டுமே அவர்களுக்கு கோபம் வரும். லக்னத்தில் சனி இருந்தால் அவர்களுக்கு அசட்டுத்தனமான கோபம் இருக்கும். ஆனால் அவர்களது மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பதை முக பாவனையில் இருந்தும் அறிய முடியாது.

லக்னத்தில் சுக்கிரன், குரு, புதன், வளர்பிறை சந்திரன் அமர்ந்திருந்தால் அவர்கள் எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படுவார்கள். சிலருக்கு லக்னத்தில் சனி இருந்தாலும், நல்ல நிலையில் உள்ள குரு (வக்ரம், நீச்சமடையாத, பாவிகள் சேர்க்கை பெறாத) அந்த சனியைப்பார்த்தால்அவர்கள் எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பார்கள். எதிரில் இருப்பவர் பைத்தியம் என்று நினைக்கும் அளவுக்குச் சிரிப்பார்கள்.

மேலும் 5, 9 ஆவது இடங்களுக்கு உரிய கிரகங்கள் லக்னத்தில் இருந்தாலும் அந்த ஜாதகர் சிரித்த முகத்துடன் இருப்பார். ஏனென்றால் 5 ஆம் இடம் ஒருவரின் மனப்பான்மையைக் குறிக்கும். ஒருவரின் ஜாதகத்தில் 5 இற்கு உரியவர் லக்னத்தில் இருந்தால் அவர் பலவற்றையும் அலசி ஆராய்ந்து தெளிவான முடிவெடுப்பவராகவும், கோபத்தை எளிதில் வெளிப்படுத்தாதவராகவும், எப்போதும் மலர்ந்த முகத்துடன் இருப்பர்.

சிரித்த முகம், சிடுமூஞ்சி மேலும் உடலமைப்பு, குணம் ஆகியவற்றைப் பற்றி சங்க காலத்திலிருந்தே ஜோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளன.

## பெண் குழந்தைகளின் முதல் நண்பன்



சோபா

அதிக நேரங்களில் பெண் குழந்தைகளை அம்மாவின் பொறுப்பில் விட்டுவிடுகின்றோம். வயது வந்த பெண் குழந்தையை அடிக்காதீர்கள்! என்று கூறுவார்கள். அம்மாவுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு அவர்கள் ஒதுங்கி விடுவதால் அவர்கள் வாழ்வில் என்ன நடக்கிறது என்றே அப்பாக்களுக்குத் தெரியாமல் போய்விடும். பெண் குழந்தைகளுக்கு அப்பாக்கள் சொல்லித்தர வேண்டிய விடயங்கள் அதிகமாக உள்ளன. நன்றாகச் யோசித்துப் பார்த்தால் வயது வந்த மகளுடன் தந்தைமார் செலவிடும் நேரம் குறைவு. மகளுடைய நட்பு வட்டத்தைப் பற்றி தெளிவாகத்தெரிந்து கொள்ளுங்கள். நட்பு வட்டத்தில் தினமும் என்ன நடக்கிறது என்று கேட்டுத்தெரிந்து கொள்ளுங்கள். எமது நண்பர்களையே யார் நல்லவர் யார் கெட்டவர் என்று ஆராயும்போது மகள் யாருடன் பழகுகிறாள் அவர்களுடைய நடத்தை எப்படி என்று தெரிந்து கொள்வது முக்கியம் அல்லவா? கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லுங்கள்.

ஒருகாலத்தில் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. தற்போது கல்வியில் பெண்கள் சாதனை செய்கிறார்கள். கல்வியில் அவருடைய சந்தேகங்களைக் கேட்டு விளக்கம் கொடுங்கள். ஆண்களைப் பற்றி சொல்லுங்கள். ஆண்களின் குணங்கள், அவர்களால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை விளக்குங்கள். நல்லவர்களை எப்படி அடையாளம் காண்பது என்று விளக்குங்கள்! வாழ்க்கையைப் பற்றி அவர்களுடன் பேசுங்கள். வாழ்க்கையில் என்னவாக விரும்புகிறார்? என்பதை கேளுங்கள். உரிய அறிவுரையுடன் நீங்கள் அவருக்கு உதவுவது எப்படி என்று திட்டமிடுங்கள். இவற்றை எல்லாம் அப்பா கண்காணிக்கும் போது பெண் குழந்தைகள் கண்டிப்பையும் நல்ல பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கிட்டும்.




## பெண்களின் இலட்சியம் என்ன?

மது



பெண்கள் முன்னேற்றம் என்றால், ஆண்களைப் போன்ற எல்லா உரிமைகளும் வசதிகளும் பெற்றிருப்பதுதான். கல்வியும் நாகரிகமும் வளர வளர, பெண்களின் உரிமைகள் குறைந்து கொண்டுதானிருக்கிறது. இதற்கு ஆண்களின் தீய நடத்தை மட்டுமே காரணமல்ல. பெண்களின் தவறான வாழ்க்கை இலட்சியமும் ஒரு காரணமாகும்.

'படித்த பெண்களும், பட்டதாரிப் பெண்களும், பணம் படைத்தவர் வீட்டுப் பெண்களும் மனித சமுதாயத்துக்காகப் பணியாற்றுவதே கிடையாது. கார், நகை,உயர்தர உடைகள், உல்லாசப் பொழுதுபோக்கு ஆகிய ஆசைகளைத் தவிர இவர்களுக்கு வாழ்க்கை இலட்சியம் என்பதே பெரும்பாலும் இருப்பதில்லை.' இவள் இன்ன தொழில் நிபுணத்துவம் பெற்றவள்! இவள் இந்தத் துறையில் திறமைசாலி' என்ற பெயர் வாங்கவேண்டும் என்ற எண்ணமே இத்தகைய பெண்களுக்கிருப்பதில்லை.

பணத்தைச் சேமித்துப் பத்திரப்படுத்த முடியாத பழங்காலத்தில் எமது பெண்கள் நடமாடும் வங்கிகளாகவும், இரும்புப் பெட்டிகளாகவும் பயன்படுத்தப்பட்டனர். ஆனால், பணத்தைச் சேமிக்கக்கூடிய பல நூறு துறைகள் பெருகிக் கிடக்கின்ற இந்தக் காலத்தில் இது அவசியமா என்பதைப் பணம் படைத்த வீட்டுப் பெண்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நகை அணிவதுதான்அழகு என்றால், நகை அணியாத பெண்கள் அழகாயில்லையா? நகை என்பது பெண்களின் உரிமைக்குப் பூட்டப்பட்டிருக்கின்ற பவுண்விலங்கு என்பதைப் பெண் இனம் மறக்கக் கூடாது. நகைகளிலும், உயர்தரமான உடைகளிலும் பாழாக்கப்படுகின்ற பணம், குடும்பத்துக்கோ, சமுதாயத்துக்கோ பயன் படாமல் வீணாகிறது.

மக்களிடையே அறிவு பரவுவதன் மூலமேதான் இந்த மனப்பான்மை அடியோடு மாறவேண்டும். படித்த பெண்களும், பட்டதாரிப் பெண்களும், பணக்கார வீட்டுப் பெண்களுமே இந்தத்துறையில் ஏனைய நகைப்பித்துப் பெண்களுக்கு நல்வழி காட்டக் கூடியவர்களாக விளங்க வேண்டும். பெண்களின் இத்தகைய ஆசைகளால் திருமணத் தடைகளும் பெண் இனம் துணையில்லாது வெளிச் செல்ல முடியாத வேதனை நிலையும் ஏற்பட்டிருப்பதைத் தவிர நன்மை ஏதாவது உண்டா? பெற்றோர்களும் பெண்களும் இது குறித்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

# மரத்துக்கு வந்த ஆசை



பரந்த வயல்வெளியின் நடுவே அந்த மரத்துக்கு ஒரு இடம் இருந்தது. அந்த வயல்வெளியில் வேறு மரங்கள் எதுவும் இல்லை. எந்தப் பறவையும் அங்கு வருவதும் இல்லை. திடீரென்று ஒருநாள் மாலை வேளையில், பாதை தவறிய ஒரு நீலக்குருவி அந்த மரத்தின் மீது வந்து உட்கார்ந்தது.நேரம் செல்லச் செல்ல வானம் இருட்டியது. இருட்டில் எப்படி வீட்டுக்குப் போக முடியும் என்று நீலக்குருவி யோசித்தது. அதனால் இரவு மட்டும் மரத்திலேயே தங்கி விடலாம் என்று நினைத்தது. இதைப் பார்த்த மரத்துக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. மனசுக்குள் துள்ளிக் குதித்தது. மரம் நீலக் குருவியிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் மரமும் நீலக்குருவியும் நண்பர்களாகி விட்டார்கள். இருவரும் நேரம் போவதே தெரியாமல் விடிய விடிய பேசிக்கொண்டே இருந்தார்கள். பொழுது விடிந்தது. நீலக்குருவி தன்னுடைய வீட்டுக்குப் புறப்படத் தயாரானது. 'கவலைப்படாதே நண்பா, நான் மறுபடியும் இங்கு வருவேன்' என்று உறுதியாகச் சொல்லிவிட்டுக் குருவி பறந்து சென்றது.

குருவி வரும் என்று இரவும் பகலும் மரம் காத்துக் கொண்டிருந்தது. பகல்கள் போயின, இரவுகள் போயின. நாள்கள் நகர்ந்தன. ஆனால் நீலக்குருவி மட்டும் வரவேயில்லை. மரம் கண்ணீர் விட்டு அழுதது. அதன் கண்ணீர், துளித் துளியாகக் கீழே விழுந்தது. ஒருநாள் காலையில் தன் கண்ணீர் கீழே குளமாகத் தேங்கியிருப்பதைக் கண்டது அந்த மரம். இப்போது குளத்துடன் பேசத்தொடங்கியது மரம். நாள் முழுவதும் பேசிக்கொண்டே இருந்தது. தன் காலை குளத்தில் நனைத்தபடி மரம் பேசிக்கொண்டேயிருந்தது. பேசிக் கொண்டே குளத்தில் பிரதிபலித்த அதன் கிளையைப் பார்த்தது. அந்தக் கிளையில்தான் ஒரு காலத்தில் ஒரு பறவை வந்து அமர்ந்திருந்தது. குளத்தின் துணையுடன் மரம் இப்போது தனியாக இல்லை.




# வாழ்க்கை சிறக்க.....

*(நேற்றைய தொடர்ச்சி)*

**ஆளிடைத் தொடர்பு**

சிறந்த ஆளிடைத் தொடர்பை வளர்த்துச் செல்லல் மிகச் சிறந்த வாழ்க்கைத் திறனாகும். வாழ்வை மிகச் சிறந்ததாகவும் அர்த்த முள்ளதாகவும், எளிமையானதாகவும், மென்மையானதாகவும் மாற்றிக் கொள்ள சிறந்த ஆளிடைத் தொடர்பைப் பேணுதல் அவசியமாகும். சிறந்த ஆளிடைத் தொடர்பு வீட்டில் இருந்தே ஆரம்பமாகின்றது. நட்புணர்வுடன் தொடர்பாடல், பொது வேலை களில் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்குச் செய்கின்ற உதவிகள் ஆளிடைத் தொடர்பில் பெறுமதியானவை.

**சுயமதிப்பு**

தன்னைப்பற்றி அறிவு, புரிந்துணர்வு, சுயமதிப்பை உயர்த்தும். ஒவ்வொருவருக்கும் தனது கருத்துக்கள், விருப்பு வெறுப்புக்கள், அபிப்பிராயங்கள், ஒழுக்கம், பலவீனம் தொடர்பாக புரிந்துணர்வு அவசியமாகும். இதனை சுயமதிப்பு என அடையாளப்படுத்தலாம். தனிப்பட்ட நடத்தையின் பலம், பலவீனம் என்பவற்றை அடையாளம் கண்டு செயற்பட்டால் வெற்றியடைய முடியும்.

**பரிவுணர்வு**

சமூகத்தை புறந்தள்ளி விட்டு தனியாக வாழ முடியாது. மற்றவர்களிடம் அன்பு செலுத்துதல், உதவி செய்தல், இன்ப துன்பங்களில் பங்கெடுத்தல் போன்றவை மிகவும் சிறந்த சமூக நடவடிக்கைகளாகும். ஒருவருடன் ஒருவர் உதட்டளவில் நட்புப் பாராட்டாமல், உளரீதியாக செயற்படுதல் வேண்டும். மற்றவர்களின் பிரச்சினைகளைக் காது கொடுத் துக் கேட்க வேண்டும். வேறு பாடுகள் காட்டாமல் மற்றவர் களை மதித்து நடத்தல் வேண்டும். பரிவுணர்வுடன் செயற் படும் திறனைவளர்த்துக்கொள்ளப்பயிற்சி மிகவும் அவசியமாகும்.

**உணர்வுகளுக்கு முகம் கொடுத்தல்**

எமது மனம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒரே வகையில் செயற்படுவதில்லை. எம்மை அறியாமலே உணர்ச்சி வசப்படும் சந்தர்ப்பங்கள் உண்டு. சிலவேளை எல்லை மீறிச் செயற்படுவதும் உண்டு. எம்மைக் கட்டுப்படுத்தத் தவறினால் மகிழ்ச்சியை இழந்து விடுவோம். முடியுமான வரையில் மகிழ்ச்சியுடனும், விழிப்புணர் வுடனும் இருத்தல் அவசியமாகும். இதன்மூலம் மனம் இதம டையும். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு கற்றுக் கொள்ளாமல், உணர்வுகளுக்கு முகம் கொடுக்க முடியாது. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தப் பயிற்சி செய்தால், உணர்வுகளுக்கு முகம் கொடுக்க முடியும். மனமும் புரிந்துணர்வு பெறும்.

**மன அழுத்தத்திற்கு முகம் கொடுத்தல்**

இன்றைய போட்டி உலகில் சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஒவ்வொரு மனிதனும் மன அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. மன அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடிய காரணியை இனங் கண்டு, தீர்வு காண முயல் வேண்டும். துக்கம், சந்தோசம், விரோதம், பழிவாங்குதல், வெற்றி, தோல்வி ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்கு விளையாட்டில் கவனம் செலுத்துதல், தியானத்தில் ஈடுபடுதல், அழகை ரசித்தல், ஆக்க வேலைகளில் ஈடுபடுதல் இயற்கையை நேசித்தல் போன்றவை சிறந்த பரிகார நடவடிக்கைகளாகும்.

இனிய இசையும் மனதை ஆற்றுப்படுத்துவதற்குச் சிறந்த மருந்தாகும். எப்போதும் ஆக்க பூர்வமாக சிந்தித்துச் செயற்படுத்தும் பயிற்சி மூலம் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்த முடியும். மேற்குறிப்பிட்ட வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் எதிர்மறைச் சிந்தனைகளை நீக்கி வாழ்க்கையை ஆரோக்கியமானதாகவும், அர்த்த முள்ளதாகவும் கணிப்புக் குரியதாகவும் மாற்றிக் கொள்ள முடியும்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நடராசா குலசிங்கம்
இவ்வுலகில் 11 ★ 09 ★ 1954
இறையுலகில் 18 ★ 01 ★ 2014
திதி: தை - தேய்பிறை நாள் - துதியை (05.02.2015)

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே!
சதிசெய்யும் காலன் உங்களை
வேரோடு சாய்த்து ஓராண்டு ஆனதே!
மாறிடும் வாழ்க்கையில் மாற்றமிது மாறலையே!
மனம் தான் ஏனோ ஆறலையே!
வலிகொண்ட நெஞ்சோடு தொடர்கிறது வாழ்க்கை
கண்ணை விட்டகலா கண்மணியாய்
எம்மை விட்டகலா உம் நினைவுகளை சுமந்தபடி
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இல. 35, சிறிநகர்,
பூந்தோட்டம், வவுனியா.
குடும்பத்தினர்.

செய்திகள்

# இலங்கை- இந்திய உறவு பிரிக்க முடியாதது

## சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் இந்தியப் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.5

இலங்கையுடனான இந்தியாவின் உறவு பிரிக்க முடியாதது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 67 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தமிழ் – சிங்களம் – ஆங்கில மொழிகளில் தனது வாழ்த்தை 'ருவிட்டரில்' பதிவு செய்துள்ளார். அதிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கை மக்களுக்கு சுதந்திர தின நல் வாழ்த்துக்கள். வரலாறு, கலாசாரம் மற்றும் நம்பிக்கைகளின் அடிப்படையிலான நமது உறவு பிரிக்க இயலாத ஒன்றாகும்' என்றும், "இலங்கையின் வளமான எதிர்காலத்திற்கு வாழ்த்துக்கள். இந்த மாதத்தின் பிற்பகுதியில் இந்தியா வரவுள்ள ஜனாதிபதி சிறிசேனவை வரவேற்க ஆவலாக உள்ளேன்" என்றும் அவர் இரண்டு பதிவுகளை வெளியிட்டுள்ளார். (ற–5)

## தனிச் சிங்களத்தில் உரையாற்றினார் மைத்திரிபால

கொழும்பு, பெப்.5

ஜனாதிபதி மைத்திரிபாலவின் சுதந்திரதின உரை நேற்று தனிச் சிங்களத்தில் மாத்திரமே இடம்பெற்றது. சுமார் 20 நிமிடங்கள் வரையில் அவர் உரையாற்றியிருந்தார். அதன் பின்னரே அவரது உரை தமிழ் மொழியில் வாசிக்கப்பட்டது.

இலங்கையின் தேசிய சுதந்திர தின வைபவம் கொழும்பில் நேற்று இடம்பெற்றது. ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. தேசியக் கொடியை ஏற்றி வைத்த பின்னர், மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

இதன் போது அவரது உரைமுழுவதும் சிங்களத்திலேயே காணப்பட்டது. அவரது உரை முழுமையாக முடிவடைந்த பின்னரே, தமிழ் மொழியில் வாசிக்கப்பட்டது. (ற)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை தற்காலிகமாக நீக்கம்

கொழும்பு, பெப். 5

வெளிவிவகார அமைச்சரின் ஐரோப்பிய பயணத்தை தொடர்ந்து இலங்கை மீது விதிக்கப்பட்டிருந்த தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையின் கடலுணவு வகைகளை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு மீண்டும் கிடைத்துள்ளது.

"மீன் உற்பத்திகளை இறக்குமதி செய்வதற்கு விதித்திருந்த தடையை ஐரோப்பிய ஒன்றியம் தற்காலிகமாகத் தளர்த்தியுள்ளது" என்று கடற்தொழில் இராஜாங்க அமைச்சர் திலிப் வேதாராச்சி தெரிவித்தார்.

சட்டவிரோத மீன்பிடித்தலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இலங்கை தவறியிருந்தது. அதையடுத்து இலங்கையில் இருந்து கடலுணவுகளை இறக்குமதி செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தது. கடந்தமாத நடுப்பகுதியில் இந்தத் தடை நடைமுறைக்கு வந்திருந்தது.

அதனால், ஐரோப்பிய ஒன்றியத்துக்கான கடலுணவு ஏற்றுமதி மூலம் இலங்கைக்கு ஆண்டுதோறும் கிடைத்து வந்த சுமார் நூறு மில்லியன் டொலர் வரையிலான வருமானத்தை முற்றாக இழக்கும் நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில், பதவியேற்ற புதிய அரசின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பிரசெல்ஸ்க்கு கடந்த மாதம் சென்றிருந்தார். அங்கு ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச்சு நடத்தியிருந்தார். இந்தப் பேச்சுக்களைத் தொடர்ந்து, இலங்கைக்கு விதிக்கப்பட்ட மீன் இறக்குமதித் தடையை தற்காலிகமாக 6 மாதங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியுள்ளது. (ற–5)

# வில்லிசைப் புலவர் சின்னமணி காலமானார்



அச்சுவேலி, பெப். 5

அச்சுவேலியைச் சேர்ந்த வில்லிசைப் புலவர் கலாவிநோதன் கே.என்.கணபதிப்பிள்ளை (சின்னமணி) நேற்று புதன்கிழமை காலமானார் உடல்நலக்குறைவால் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்றுக் காலை காலமானார்.

வில்லிசை மூலம் சர்வதேச ரீதியில் புகழ்பெற்றிருந்த சின்னமணி சிறந்த நடிகர், பாடகர், சைவப் பிரசங்கி, வில்லிசைப் புலவர், சிறந்த பேச்சாளர் என்றவாறும் சிறந்து விளங்கியவர். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனை குருவாக கொண்டு வில்லிசை மற்றும் நாடகம் நகைச் சுவையில் தேர்ச்சி பெற்றமையால் கலைவாணர் வில்லிசைக் குழு என்ற பெயரில் வில்லிசை நிகழ்வுகளை நடத்தி வந்தார்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட வில்லிசை நிகழ்வுகளை நடத்தி புராண இதிகாச சமூக கருத்துக்களை புகட்டி வந்தவர். மலேசியா, சிங்கப்பூர், கனடா, லண்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் நூற்றுக் கணக்கான வில்லிசை நிகழ்வுகளை நடத்தி புகழ் பெற்றார்.

காத்தவராயன் கூத்து, அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி, திப்பு சுல்தான் போன்ற நாடகங்கள் மூலமும் தனது நடிப்புத் திறனை நிலை நாட்டிய இவரின் வில்லிசை அரங்கேற்றம் 1968 ஆம் ஆண்டு தொண்டமானாறு செல்வச் சந்நிதியில் இடம்பெற்றது. (ற–11)

# நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசு திட்டம்

## ஆராய்ந்து வருகின்றது என்கின்றார் கமலேஷ்சர்மா

கொழும்பு, பெப். 5

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசு ஆராய்ந்து வருவதாக பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ்சர்மா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த ஆணைக் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு மறுப்புத் தெரிவித்து வந்தார். போரின் போது இடம்பெற்ற விவகாரங்கள் தொடர்பில் இலங்கை அரசு அக்கறையீனத்துடன் செயற்படுவதாக சில நாடுகள் குற்றம்சாட்டியிருந்தன.

இந்த நிலையில் கமலேஷ் சர்மாவின் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது. தமது இலங்கைக்கான வருகையின் முடிவில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு மதிப்பளித்து இலங்கையரசு உள்நாட்டில் விசாரணைகளை மேற்கொள்ளுமாயின் பொதுநலவாய அமைப்பு தேவையான உதவிகளை வழங்குமெனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையுடன் இணைந்து செயலாற்றுவது தொடர்பாக ஆலோசனைகளை வழங்குவதே தமது வருகையின் நோக்கமென்றார். மேலும் இலங்கை தனது சரித்திரத்தில் புதியதும், மாற்றத்தைக் கொண்டதுமான ஒருகட்டத்தில் உள்ளதால் பொதுநலவாய அமைப்பின் உதவிகள் தேவைப்படும் விடயங்கள் தொடர்பாக வெற்றிகரமாகக் கண்டு கொள்ளப்பட்டுள்ளன. மேலும் புதிய அரசு கடந்த மாதம் 9 ஆம் திகதியிலிருந்து புதிய முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஆட்சி அதிகாரங்களில் மாற்றத்தை மேற்கொள்வதைப் பொறுத்தவரை நிறுவனங்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு உத்தரவாதம் வழங்கியமை, வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு ஆளுநர்களாக படையினரல்லாத சிவிலியன்களை நியமித்தமை, புதிய பிரதம நீதியரசரை நியமித்தமை, மாகாணசபை நிர்வாகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியமை ஆகியவற்றை இங்கு சிறப்பாக எடுத்துக் கூறமுடியும்.

பொதுநலவாய அமைப்பின் பொதுச்செயலாளர் தமது வருகையின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பொது நிர்வாக அமைச்சர் கரு ஜயசூரிய, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, மற்றும் மாகாண ஆளுநர்கள், முதலமைச்சர் ஆகியோரையும் சந்தித்தார். மேலும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது நலவாய அமைப்பின் தலைவராக உள்ள நிலையில் அவருடன் விரிவாக உரையாடுவதற்கான ஒருநல்ல சந்தர்ப்பம் வாய்த்ததாகவும் கமலேஷ்சர்மா மேலும் தெரிவித்தார். (க)


**Britishway English Technical Training Centre**

இன்

**மல்லாவி புதிய கிளையில்**

மாணவர்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களுக்குமான விசேட வகுப்புக்கள்

- Gen.English - G.C.E (A/L)
- English Grammer
- Spoken English
- Sinhala (சிங்களம்)

ஆரம்பத்திலிருந்து சரளமாக ஆங்கிலம் கற்க அரியவாய்ப்பு
உங்கள் வசதிக்கேற்ப நேரத்தைத் தெரிவு செய்யலாம்.
தனி நபர் வகுப்பு அல்லது குழு வகுப்பு

**பதிவுகளுக்கு முந்துங்கள்**

Balar- 077 761 9048 Thusi- 076 674 1356

கணினி விளையாட்டுக்களும்
MS Office,Photo Shop,Coral Draw,Wep Design
Accounting (Banking) Package போன்ற
கணினி வகுப்புக்களும் நடைபெறுகின்றன. (56508) (5.7.3)

**தவறிவிட்டது**

NP-GI-7954 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடு கந்தர்மட அரசடி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(56515) தொடர்பு: 077 7222558

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்

40அடி அகலம் LED திரையில்
இன்று 05.02.2015 முதல்
அஜித் நடிக்கும்
என்னை அறிந்தால்




காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30

முற்றிலும் குளிரூட்டப்பட்டது

**வீடு, காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, கச்சேரிக்கு அருகில் 1¼ பரப்பில் 3 அறைகள், 2 குளியலறைகள் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. (C/19486) (10)

0770385881, 0770362220

**கதிரவன் ஜெம்ஸ் சென்ரர்**

நவக்கிரக தோஷங்களில் இருந்து விடுபட நவரெத்தினங்களை அணியுங்கள்.

வெள்ளியிலான நவரெத்தின மோதிரம் எம்மிடம் உண்டு.

021 222 7257

**சலூன் வேலைவாய்ப்புக்கள்**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சொகுசுவசதிகள் கொண்ட எமது சலூனுக்கு திறமையும் அனுபவமும் உள்ள ஆண் /பெண் முடிதிருத்துவோர் தேவை. தங்குமிடவசதிகள் உண்டு

சம்பளங்கள் கமிசன்கள் (தரகுப்பணம்)

தொடர்பு: 076 759 3357

**மணமகள் தேவை**

நோர்வேயில் வசிக்கும் (PR) உடைய மணமகன் தற்போது யாழ் வந்துள்ள, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, (4இல் செவ்வாய், கிரகபாவம் 23) 48 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. விவாகரத்துப் பெற்றவர்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 837 4721/077 754 2174

**விற்பனைக்கு**

ஒரு மாதம் மட்டும் பாவித்த 2 வருட உத்தரவாதத்துடன் சாம்சன் S5கலக்சி போன், பனசொனிக் A/C, போட்டோ கொப்பி மெசின், ஜெனரேற்றர், சாப்பாட்டு மேசை, கதிரை, கணினிகள், அலுவலக தளபாடங்கள், TVகள் என்பன விற்பனைக்குள்ளன.

(56516) (12.3.7) தொடர்பு: 077 377 7003

**தேவை (Wanted)**

பத்திரிகை அச்சிடல் Weboffset இயந்திர பிரிவுக்கு அனுபவமுள்ள மேற்பார்வையாளர் (Foreman) தேவை. திருத்தவேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை. கவர்ச்சிகரமான சம்பளம். விண்ணப்பங்களை eborecruit@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 15.02.2015 இற்கு முன்பதாக அனுப்பவும். தபால் மூலம் எனில் No.70, Davidson Rd, Bampalapitiya, Colombo - 06 இற்கு அனுப்பவும்.

(சி.19402) (4.5.3.7)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாதேவி மனோகரன்

**(ஓய்வுபெற்ற ஆசிரியை-யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)**

தோற்றம்: 01.02.1951 மறைவு: 01.02.2015



யாழ். ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், லண்டன் Perivale ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி மனோகரன் 01-02-2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் மங்கையர்க்கரசி (லண்டன்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை, சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், மனோகரனின் (ஓய்வு பெற்ற பாரதி பாஷா வித்தியாலய தலைமை ஆசிரியர், தமிழ் ஆசிரியர்- தமிழ் பாடசாலை Harrow) அன்பு மனைவியும், முரளி(ஜெர்மனி), கோபி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயதேவி (டென்மார்க்), சறோயினிதேவி (லண்டன்), குபேரன் (சிங்கப்பூர்), அமுதகௌரி (லண்டன்), விஜயலட்சுமி(கனடா), நக்கீரன் (லண்டன்), குலவதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுகந்தினியின் அன்பு மாமியாரும், பாலசுப்பிரமணியம், சசிகேதன், யமுனாதேவி, காலஞ்சென்ற மோகனதாஸ், துரைராஜா, நிர்மலா, சரவணபவான் ஆகியோரின் அன்பு மைத்துனியும், வைஷ்ணவி, வைதேகி, விஜய் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (07.02.2015) சனிக்கிழமை பி.ப 1.30 -4.00 மணியளவில் லண்டனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**மனோகரன் (கணவர்) பிரித்தானியா +442088109931**
**முரளி (மகன்) ஜேர்மனி +495971984564**
**கோபி (மகன்) பிரித்தானியா +447957464752**

(C/19536) (10)

## திருமதி கனகமணி துரைசிங்கம்

**(முத்த அக்கா)**



நுணாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கண்டி றோட் சந்தி இராமநாதபுரம், வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகமணி துரைசிங்கம் நேற்று (04.02.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், வீரசிங்கத்தின் அன்புத் தாயும், (மாருதப் புரவிராசன்) தெய்வநாயகியின் (விசுவமடு விசுவநாதர் ஆரம்ப பாடசாலை) அன்பு மாமியும், அருண்பிரசாத், கரன் பிரசாத், சுமன்பிரசாத், லவன்பிரசாத், நிசன் பிரசாத், மதுரப் பிரியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2015) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மம்மில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராமநாதபுரம், வட்டக்கச்சி.**
077 9429461.

(51348) (10)

தகவல்: **குடும்பத்தினர்.**

## வில்லிசைப் புலவர் கலாபூஷணம்
## நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சின்னமணி)



மாதனை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி வடக்கு, பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சின்னமணி) நேற்று (04.02.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், வசந்தாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற அன்னமுத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், கலைச்செல்வன் (கனடா), கலைமதி (கனடா), கலைரூபன் (கனடா), கண்ணகி (ஆசிரியை, விக்னேஸ்வரா முன்பள்ளி), அரியமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விமலலோஜினி (கனடா), பரமேஸ்வரன் (கனடா), ஜெயந்தி (கனடா), புவனேந்திரன், கிருதாசன் ஆகியோரின் அன்பு மாமனும், கார்த்திகா, கலைலோஜன், மைதிலி, விசாகன், அபிநயா, கலைமேனன், கலைமாறன், புருஷோத்தமன், பிரதீஸ், அக்ஷயா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தனலக்சுமி, கணேசமூர்த்தி மற்றும் ஜெயராணி, பாலசுப்பிரமணியம், மங்களபதி, விஜயலட்சுமி, கோணேஸ்வரி, கேதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: **077 9676247, 0777392935.**

(56518) (10)

தகவல்: **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## சுவாமிநாதன் கனகசபை

**(ஓய்வுநிலை அதிபர்-யா/கோப்பாய் நாவலர் பாடசாலை)**

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் கனகசபை மார்க்கம் கனடாவில் நேற்று (04.02.2015) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மனேச்சர் சுவாமிநாதன்-வள்ளியம்மைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-மூத்த தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், தில்லைராஜன், விக்னராஜன், மங்கையர்க்கரசி, தேவகாந்தி, சந்திரவதனா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகலா, இந்திரலீலா, விஸ்வரூபன், இராஜசிங்கம், தங்கேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், கோபிகா, தரண்யா, வைதேகி, ஜதுஷன், சகானா, சிந்துவம்சன், நிரூகன், ஹேசினி, துஷ்யந்தன், விதுசன், சங்கவி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நகுலேஸ்வரன், மயில்வாகனம், சிவகாமிப்பிள்ளை மற்றும் ஞானசௌந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மாள், பாலசுப்பிரமணியம், சரஸ்வதி, மகேஸ்வரி, விஜயரட்ணம், கனகம்மா, சிவக்கொழுந்து, தெய்வேந்திரகுமாரசாமி மற்றும் விநாயகமூர்த்தி, அன்னலட்சுமி, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Chapel Ridge Funeral Home இல் நேற்று (04.02.2015) புதன்கிழமை மாலை 5.00 மணிமுதல் 9.00 மணிவரையும், இன்று (05.02.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு, பிற்பகல் ஒரு மணிக்கு (கனடா நேரம்) இறுதிக்கிரியைகளைத் தொடர்ந்து Elgin Mills Cemetery, 1591 Elgilmills RoadsE. Richmond Hill onL4s 1m9, Canada இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தில்லை: 0019056532176**
**சின்னத்தம்பி:0019056773610**
**உமா: 0772798003**
**வசந்தி: 0019054179666**
**வதனா: 0019054714137**

(56519) (10)

தகவல்:
**திருமதி மங்கையர்க்கரசி**
**விஸ்வரூபன் (மகள்)**
**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

# மரண அறிவித்தல்

## திருமதி நாகம்மா மரியதாஸ்

(ஓய்வுபெற்ற பற்றிமா பாடசாலை ஆசிரியை)



யாழ் ஏழாலை மத்தியை பிறப்பிடமாகவும், ஜெயந்திநகர் கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும், கொண்ட மரியதாஸ் - நாகம்மா 01.02. 2015 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான சின்னப்பு - பொன்னு தம்பதியரின் அன்பு மகளும், காலம்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை - மதலேன் தம்பதியரின் அன்பு மருமகளும், காலம்சென்ற மரியதாஸ் (கிளி/கால்நடை வைத்திய சாலை முன்னாள் பணியாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்றவர்களான சுப்பையா, மரியாம்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலம்சென்ற திரேசம்மா (திரவியம்) (மிருசுவில்), பிலிப்பையா (செல்வராசா) (ஜெயந்திநகர்), யேசுதாசன் (முன்னாள் கரைச்சி வடக்கு பணியாளர்), காலம்சென்ற மேரிபிலோமினா (இராசமணி) (பண்டிவிரிச்சான்), காலம்சென்ற ஞானப்பிரகாசம் (கிளி/கால் நடைவைத்தியசாலை முன்னாள் பணியாளர்), ருக்குமணி (மிருசுவில்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், விக்ரர் சிறிதரன் (கனடா), சாள்ஸ்யோசப் (கனடா), அனக்கிளற்யோசப்பின் (குட்டி) ஜெயந்திநகர், காலம்சென்றவர்களான கிறிஸ்ரபெல் யோசப்பின், அன்ரன், ஜெயந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், யூயின்சசிகலா (கனடா), கிறிஸ்ரா (கனடா), புவனேந்திரன் (இந்திரன் மெக்கானிக்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிலோஜினி (கனடா), கென்லி(கனடா), லியானி(கனடா), கிசோக்குமார் (கனடா), அகல்யா (கனடா), சாந்தன் (டானியேல்) (கனடா), மெல்வின் (சிறிலங்கா ரெலிகொம்), கிறிஸ்ரோ (இந்துகல்லூரி பழைய மாணவன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கெய்டன் (கனடா) அவர்களின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (05.02.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஜெயந்திநகர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, ஆனந்தநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**99, ஜெயந்தி நகர்,**
**கிளிநொச்சி.**

(51347)

தகவல்: **குடும்பத்தினர்.**

# செய்திகள்

## சமாதானத்தை ஏற்படுத்த கிட்டியுள்ளது சந்தர்ப்பம்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

அரசியல் காரணிகளால் பிளவுபட்ட சமாதானத்தை கட்டியெழுப்பி நல்லிணக்கத்தை ஏற்படுத்த மீண்டும் பெரியதொரு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது எனத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இதற்காக அரசு முன்வந்துள்ள நிலையில், நாட்டு மக் கள் அனைவரும் தமது ஆதரவையும், செயற்பாட்டுரீதியான ஒத்துழைப்பையும்வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சட்ட ரீதியாகப் பெற்றுக்கொண்ட சமாதானத்தை உண்மையான சமாதானமாக்க வேண்டிய தேவை உள்ளது என்று தெரிவித்த அவர், புதிய அரசின், புதிய தேசத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் இனி ஒருபோதும் அச்சம், சந்தேகத்துடன் வாழத் தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் 67 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசிய சூறா சபையின் ஏற்பாட்டில் நேற்று பிற்பகல் கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனவரி மாதம் 8 ஆம் திகதியின் பின்னர், நாட்டில் புது யுகம், புது அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட்டுள்ளது. அனைவரும் சமாதானத்துடனும், நல்லிணக்கத்துடனும் வாழக்கூடிய மைத்திரி யுகம் உருவாக்கப்பட்டுள்ளது. மைத்திரி யுகத்தை உருவாக்க முஸ்லிம்கள் நூற்றுக்கு நூறு வீதம் தமது ஆதரவை வழங்கியிருந்தனர். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புதிய அரசின் புது யுகத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் அச்சம், சந்தேகத்துடன் இனி ஒருபோதும் வாழத் தேவையில்லை. எமதுமுன்னோர்கள் வெள்ளையர்களுடன் போராடி சமாதானத்தையும், சுதந்திரத்தையும் எமக்குப் பெற்றுக்கொடுத்து, அனைவரும் சம உரிமையுடன்வாழக் கூடிய நிலையை ஏற்படுத்தினர்.

ஆனால், கடந்த சில தசாப்தங்களாக நிலவிய அரசியல் காரணிகளால் அந்த சமாதானம் பிளவுபட்டது. இவ்வாறான நிலையில், பிளவுபட்ட சமாதானத்தை மீளக் கட்டியெழுப்ப தற்போது மீண்டும் ஒரு பாரிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. அதற்கு அரசு முன்வந்துள்ளது. ஆனால், அரசால்மட்டும்அதை தனித்துச் செய்ய முடியாது. எனவே, மக்கள் அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். - என்றார்.

(ற-சி)

# இலங்கை குறித்த ஐ.நா. அறிக்கையை பிற்போடக் கேட்கலாம் அமெரிக்கா

யாழ்ப்பாணம், பெப். 5
இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய அரசு பதவியேற்றுள்ள சூழ்நிலையில் புதிய அரசுக்கு கால அவகாசம் வழங்கும் வகையில், இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணை அறிக்கையை பிற்போடுவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அவ்வாறு பிற்போடப்படுவதால் ஏற்படும் விளைவுகள் பற்றி அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா கொழும்பில் முக்கிய தலைவர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் – அதாவது எதிர்வரும் செப்ரெம்பர் மாத மனித உரிமைகள் அமர்வில் எடுத்துக் கொள்வது தொடர்பில் தீவிரமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிரான விசாரணை முன்வைக்கப்படவுள்ளது. இந்த நிலையில், இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஐ.நாவில் சமர்ப்பித்த அமெரிக்காவின், உதவி இராஜாங்கச் செயலர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தின் போது அவர், நாட்டின் தற்போதைய புதிய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்தக் கலந்துரையாடல்களின் போதே மேற்படி விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளதது என்று கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் 'உதயனுக்குத்' தெரிவித்தன.

மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படும் இலங்கைக்கு எதிரான அறிக்கையில், கடந்த கால ஆட்சியிலிருந்த தலைவர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் மீது நேரடியாக குற்றங்கள் சுமத்தப்படலாம். இதனால் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் பின்னர் இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு பாதகமாக அமையக்கூடும். மீளவும் கடந்த கால ஆட்சியாளர்கள் வெற்றி பெற்றுக் கொள்ளக் கூடும்.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு ஐ.நா. அறிக்கையை தேர்தலின் பின்னர் – அதாவது செப்ரெம்பர் மாத அமர்வில் உள்ளடக்கலாம். அதன் மூலம் நாடாளுமன்றத் தேர்தலையும் ஒருவாறு சமாளித்து தற்போதைய அரசே தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதற்கும் வழி ஏற்படுத்தலாம்.

இதுவரை காலமும் ஐ.நா விசாரணையாளர்களை இலங்கைக்குள் அனுமதிக்கவில்லை. இந்த மார்ச் மாத அமர்வில், ஐ.நா விசாரணையாளர்களை இலங்கைக்குள் அனுமதிக்கும் யோசனையை முன்வைக்க வேண்டும். அதனூடான ஐ.நா. விசாரணை அறிக்கையை இழுத்தடித்து காலம் தாழ்த்த முடியும். அவ்வாறு காலந்தாழ்த்துவது ஊடாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் குறித்த விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க முடியும். இவ்வாறு அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் கொழும்பில் அழுத்தமாக தலைவர்களிடம் எடுத்துரைத்துள்ளார்.

இதேவேளை, ஐ.நா. விசாரணை அறிக்கை மார்ச் மாதமே சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடாப்பிடியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. இதனை நேரடியாக அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலரிடமும் சுட்டிக்காட்டியிருந்தது. (ற–5)

## உள்ளூராட்சி தவிசாளர்களுக்கு வாகனம்


யாழ்ப்பாணம், பெப்.5
வடக்கு மாகாணம் உட்பட நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகளுக்கு பிக்கப் வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

புதிய அரசு பதவியேற்ற பின்னர் உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்புக்கு அழைத்துப் பேசியிருந்தார்.

அதையடுத்து நாளை அனைத்து உள்ளூராட்சிச் சபை தவிசாளர்களின் பாவனைக்கு என பத்தரமுல்லையில் வைத்து வாகனங்கள் ஜனாதிபதியால் வழங்கப்படவுள்ளன.

வாகனம் கையேற்கும் நிகழ்வுக்காக வட மாகாண தவிசாளர்கள் பத்தரமுல்லவுக்கு நேற்று பயணமாகியுள்ளனர். (ற–50)

## சீனாவின் தூதுவர் இலங்கை வருகின்றார்



கொழும்பு, பெப். 5
மஹிந்த அரசு சீனாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை, மைத்திரி அரசு மீளாய்வு செய்யத் தொடங்கியுள்ள நிலையில், இலங்கையின் புதிய அரசுடன் நெருக்கமான உறவைப் பேணி, ஒப்பந்தங்களைத் தக்க வைப்பதற்காக, சீன அரசின் விசேட பிரதிநிதி ஒருவர் இலங்கைக்கு வரவுள்ளார்.

"அரசுடன் இருதரப்புப் பேச்சு நடத்த சீன அரசின் சிறப்புத் தூதுவர், விரைவில் வருவார்" என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில், சீனாவால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை புதிய அரசு மீளாய்வு செய்யப் போவதாக அறிவித்துள்ளது. குறிப்பாக கொழும்பு நகரத் திட்டத்தை மீளாய்வுக்காக புதிய அரசு நிறுத்தி வைத்துள்ளது.

அத்துடன், இந்தியாவுடனும் நெருக்கமான உறவுகளை மைத்திரிபால சிறிசேன அரசு ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இந்த நிலையிலேயே இலங்கையுடனான உறவுகளை மீண்டும் வலுப்படுத்திக் கொள்வதற்காகவும், தனது திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பது குறித்துப் பேச்சு நடத்தவுமே, சிறப்புத் தூதுவர் ஒருவரை சீன அரசு கொழும்புக்கு அனுப்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற–5)

## ரயில் மீது மோதியது ஜீப் 5 பேர் சாவு: ஒருவர் காயம்

கொழும்பு, பெப்.5
கொழும்பிலிருந்து – வவுனியா நோக்கி பயணித்த ரயில் மீது இறாகமப் பகுதியில் நேற்று ஜீப் ஒன்று மோதியதில் 5பேர் பலியாகியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இறாகம பிரதான புகையிரதப் பாதையில் பட்டுவத்தைக் கடவையில் ஜீப் வாகனமொன்று மோதியதில் ஜீப்பில் பயணித்த 5 பேர் உயிரிழந்தனர். குறித்த ஜீப் வாகனம் நீர்கொழும்புக்கு திரும்பிக் கொண்டிருக்கையிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதன்போது வாகனத்தில் 6 பேர் இருந்ததுடன் 4பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர், ஏனைய இருவரும் இறாகமை வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். மற்றையவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. உயிரிழந்தவர்களின் சடலங்கள் இறாகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை இறாகமப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.– எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## 'பட்ஜட்' மீதான விவாதம் இன்று

கொழும்பு, பெப்.5
புதிய ஜனநாயக முன்னணி அரசின் இடைக்கால வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதம் இன்று ஆரம்பமாகி, எதிர்வரும் 7 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மாலை பட்ஜட் மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

ஆட்சிமாற்றத்தின் பின்னர், புதிய அரசு தனது இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தை கடந்த 29ஆம் திகதி சபையில் சமர்ப்பித்தது. நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பட்ஜட்டை சமர்ப்பித்து உரையாற்றினார்.

இந்நிலையிலேயே அது மீதான விவாதம் இன்று சபையில் நடைபெறவுள்ளது. நாடாளுமன்றம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடவுள்ளது.

(ற–சி)

## குற்றச் செயல்கள் அதிகரிக்குமாயின் மீண்டும் தூக்குத் தண்டனை

### எச்சரிக்கிறார் நீதியமைச்சர்

குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்லுமாயின் அரசு தூக்குத் தண்டனையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரும். இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ. கண்டியில் இடம்பெற்ற பிரதான மதத்தலைவர்களுடனான சந்திப்பின் பின்னர் பத்திரிகையாளர் மத்தியில் உரையாடும்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கே பயன்படுத்தப்பட்டது. சட்டமும் ஒழுங்கும் அப்போது நிலைநாட்டப்படவில்லை. மேலும் பெரியளவில் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் பாதுகாக்கப்பட்டனர். புதிய அரசு தற்போது மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும் குற்றச் செயல்களில் ஈடுபட வேண்டாமென பொதுமக்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலும் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த சில நாள்களிலேயே குற்றச் செயல்களும், ஊழலும் ஓரளவு குறைவடைந்துள்ளன.

அரசின் ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளப்படாது குற்றச் செயல்களிலும் வீழ்ச்சி காணப்படாது விட்டால் அனைவருக்கும் நீதியானதும், சுதந்திரமானதுமான சூழ்நிலையொன்றை ஏற்படுத்தும் பொருட்டு தூக்குத் தண்டனைத் தீர்ப்புக்களை நிறைவேற்ற வேண்டிவருமெனவும் அமைச்சர் எச்சரிக்கை விடுத்தார். (க)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கனகையா இரத்தினராசா
(இளைப்பாறிய தலைமைப்பீட பண்ணை முகாமையாளர் - வட்டக்கச்சி, விவசாய போதனாசிரியர்)
தோற்றம் 13.05.1941 மறைவு 09.01.2014

அன்பின் பிறப்பிடமாய்
ஆதரவின் தரிப்பிடமாய்
நேர்மையின் நெறியில்
பாசப் பிணைப்பாய்
பொறுமையுடன் எம்மை
வளர்த்து முன்னேற்றி வைத்த
தெய்வம் தான் நீங்கள் அப்பா!

நம் வாழ்வில் இருள் கவிழ்ந்து
சூழ்ந்ததுவே!
எந்நாளும் வழி அனுப்பி விழி
அசையாமல் வரவைக்
காத்திருப்பீர்கள்

உங்கள் துயர் நீங்காது உங்கள் பிரிவால் துடிதுடித்தோம்.
இமைப்பொழுதில் எங்கு சென்றீர்கள்?
கண்மணிகள் விம்மி அழ எம் அப்பா வருவாரோ!
வெந்த புண்ணில் வேலதுவாய் வேர்மரமும் பாறியதோ!
நேர்மைநெறியைக் கடைப்பிடித்து வந்த தெய்வம் தான் நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டல்ல, எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காத நினைவுடன் வாழ்ந்துவரும் நாம், கண்ணீர்ப்பூக்களால்
அஞ்சலி செலுத்தி ஆத்மாசாந்தி பெற இறைவனை வேண்டி
நிற்பதோடு, இவரது திதி நிகழ்வு நடைபெற்று, நாளை (06.02.2015)
வெள்ளிக்கிழமை வவுனியாவில் நடைபெறும் மதியபோசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

(56500)(12.3.7)

தற்காலிக முகவரி:
160, தேக்கவத்தை
(6ஆம் ஒழுங்கை), வவுனியா.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# செய்திகள்

## அதிபரின் வீடு உடைத்து விஷமிகள் கைவரிசை

யாழ்ப்பாணம், பெப். 5

நெடுந்தீவு மகா வித்தியாலய அதிபரின் வீடு விஷமிகளால் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்களும் உடைகளும் வீதியில் போடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் ஞாயிற்றுக் கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் யாழ்ப் பாணம் சென்றுவிட்ட நிலையில் பூட்டப்பட்டிருந்த வீட்டில் நுழைந்த இனந்தெரியாதவர்கள் வீட்டின் வேலிகளைச் சேதப் படுத்தியதும்கதவுகளைஉடைத்து அங்கிருந்த தளபாடங்கள், உடைகள் மற்றும் ஏனைய பொருள்களையும் எடுத்து வீதியில் வீசியுள்ளனர்.

இது தொடர்பாக நெடுந்தீவு பொலிஸார் குறித்த மகா வித்தியாலய அதிபருக்கு அறிவித்துள்ளனர்.

அண்மையில் நெடுந்தீவுக்கு வருகை தந்த வடமாகாண முதலமைச்சருக்கும், குழுவினருக்கும் மகா வித்தியாலய முன்றிலில் வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்களால் வரவேற்பளிக்கப்பட்டதன் எதிரொலியாகவே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக வித்தியா லய அதிபர் தெரிவித்துள்ளார். (வ–7)

## மாணவர்கள், கலைஞர்கள் கௌரவிப்பு

வலி.வடக்கு, பெப்.5

மல்லாகம் கோட்டைக்காடு சைவ வாலிபர் சங்கமும், சன சமூக நிலையமும் இணைந்து கடந்தாண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரம், உயர்தரம் தரம் மற்றும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தி அடைந்த மாணவர்களையும் மற்றும் கலைத்துறை, சமூக சேவைத் துறைகளில் சேவையாற்றியவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நிலைய முன்றிலில் உள்ள திறந்தவெளி அரங்கில் எஸ்.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.சிவயோகன், பா.கஜதீபன் க.சர்வேஸ்வரன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஸ், வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (வ–86)



தைப்பூசத் திருவிழா தினத்தன்று யாழ்ப்பாணம் – பலாலி வீதி பல்கலைக்கழக சந்தியில் அமைந்துள்ள விசமப் பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சுவாமி கிராம தரிசனம் செய்து வரும் காட்சிகளைக் காணலாம். (வ–86)

# காத்தான்குடியில் டெங்கு அவசர நிலை பிரகடனம்

மட்டக்களப்பு, பெப்.5

காத்தான்குடியில் டெங்கு அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக காத்தான் குடி நகரசபை தலைவர் எஸ்.எச். அஸ்பர் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி நகரசபைப் பிரிவில் டெங்கு நோயாளர் எண்ணிக்கை தினமும் அதிகரித்துச் செல்வதால் டெங்கு அவசர நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

காத்தான்குடி நகர சபை பிரிவில் கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் திங்கட்கிழமை வரை 62 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் அதிகமானோர் 5 வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களாவர். காத்தான் குடி முதியோர் இல்ல வீதி, சின்னத் தோனா வீதி, அஸ் ஸுஹதா வீதி, புதிய காத்தான்குடி போன்ற பகுதிகளில் டெங்கின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. இதனை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வகையில் டெங்கு அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை காத்தான்குடி சுகாதார அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போதே இந்த அவசர நிலைமை பிரகடன முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்போது காத்தான் குடி நகரசபை தலைவர் மேலும் தெரிவிக்கையில்;

"உடனடியாக நடை முறைக்கு வரும் வகையில் காத்தான்குடியிலுள்ள சிறுவர்கள் கல்வி கற்கும் பாலர் பாடசாலைகள், குர்ஆன் பாடசாலைகள், பிரத்தியேக கல்வி நிலையங்கள் என்பவற்றைமூடுவதுடன் அவற்றைச் சுத்தம் செய்வதுடன் அவற்றின் சுற்றுப்புறச் சூழலையும் சுத்தம் செய்து காத்தான்குடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அதனை பரிசோதனை செய்த பின்னர் மீண்டும் திறக்கச் செய்தல், மற்றும் எதிர்வரும் செவ்வாய், புதன்கிழமை தினங்களில் வீடு வீடாகப் பொலிஸாருடன் இணைந்து டெங்குப் பரிசோதனையை மேற்கொள்ளல் என்பன இடம்பெறவுள்ளன.

டெங்கு நுளம்புகள் காணப்படும் வீடுகள் மற்றும் டெங்கு நுளம்பு குடம்பிகள் காணப்படும் வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக இதன்போது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. துப்புரவு செய்யப்படபடாத காணிகள் மற்றும் உரிமை கோராமல் துப்புரவின்றி கிடக்கும் வெற்றுக் காணிகள் என்பவற்றை காத்தான்குடி நகர சபை சொந்தமாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது"–என்றார்.

இந்தக் கூட்டத்தில் காத்தான்குடி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் யு.எல்.நசிர்தீன், மற்றும் காத்தான்குடி பொதுச் சுகாதார பரிசோதகர்கள். காத்தான்குடி நகர சபை பிரதிநிதிகள், காத்தான்குடி பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள், மற்றும் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், காத்தான்குடி பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ)

## வீட்டு வாடகை மின் பாவனை கட்டணம் வேண்டாம்

**புதிய அமைச்சர்கள் முடிவு**

கொழும்பு, பெப்.5

அமைச்சர்களுக்கு அரசால் வழங்கப்படும் வீட்டு வாடகை மற்றும் மின் பாவனைக்காக வழங்கப் படும் கொடுப்பனவை பெற்றுக் கொள்வதில்லை என புதிய அமைச்சர்கள் தீர்மானித்திருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 28 ஆம் திகதி இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து அனைத்து அமைச்சர்களும் இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பதாக வும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைவாக அமைச்சர் ஒரு வருக்கு ஒரு மாதத்துக்கு ஒதுக்கப்படும் ஒரு லட்சம் ரூபா என்ற வீட்டு வாடகை மற்றும் 50 ஆயிரம் ரூபா என்ற மின் பாவனைக்கான கொடுப்பனவையும் புதிய அரசின் அமைச்சர்கள் பெற்றுக்கொள்வதில்லை என தீர்மானித்துள்ளனர். (வ–2

## வருத்தப்படாத வாலிபர் சங்கம் முன்னெடுத்த டெங்கு ஒழிப்

யாழ்ப்பாணம், பெப்.5

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் சமூக நலத்திட்டத்தின் கீழ் தெல்லிப்பழைப் பிரதேசத்தில் டெங்கு நுளம்பை ஒழிக்கும் சிரமதானப் பணிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக சங்கத்தின் இளைஞர்கள் குழு ஒன்றிணைந்து அந்தப் பகுதியில் சிரமதானத்தை மேற்கொண்டது.

தற்போது டெங்கு நுளம்பின் ஆதிக்கம் குடாநாட்டில் பரவ ஆரம்பித்துள்ளதால் தாக்கத்துக்குள்ளாகும் பொதுமக்களைப் பாதுகாக்கும் வகையில் சூழலில் உள்ள பற்றைக் காடுகள் அழித்து எரியூட்டப்பட்டன.

ஏற்கனவே பல்வேறு சமூக நலத் திட்டங்களை முன்னெடுத்துள்ள குறித்த சங்கம் இனிவருங் காலங்களிலும் குறிக்கப்பட்ட கிராமங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு நோயற்ற சமுதாயத்தை உருவாக்க ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாகவும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (வ–14)



# தொடர்ச்சிகள்

## தமிழர் வழங்கிய

தென்னிலங்கையில் இருந்த சர்வதிகார ஆட்சி, ஊழல் ஆட்சிக்கு மக்கள் தீர்வு கண்டுள்ளார்கள். நிலம், சொத்து, நிதி ஒதுக்கீடு ஆகியவற்றில் ஏமாற்றப்பட்ட மக்கள் தொடர்ந்தும் அதே ஆட்சி தேவையில்லை என ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சர்வாதிகார ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர வேண்டும், எந்தவொரு இனப்பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட வேண்டும், மக்களது நிலங்களை விடுவிப்பு செய்ய வேண்டும், இராணுவம் அகற்றப்பட வேண்டும். என்பதற்கான எதிர்பார்ப்புகளாக இருந்தது. "– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"மஹிந்த மீண்டும் தானே ஜனாதிபதியாக வந்து 8 ஆண்டுகள் பதவியில் இருக்கலாம் எனக் கனவு கண்டார். தனது ஆட்சி முடிவடைவதற்குள் தேர்தல் அறிவிப்புகளையும் வழங்கியிருந்தார். ஆனால் தமிழ் மக்கள் முன்னர் எப்போதும் இல்லாத மாற்றத்தை உருவாக்கியுள்ளார்கள்.

2009 ஆம் ஆண்டு போரில் வெற்றி பெற்றோம், தமிழ் மக்களை தோற்கடித்து விட்டோம் என்று கூறிய அரசு கடந்த 5 வருடங்களில் என்ன செய்தது. எங்களுடைய நிலங்களில் இராணுவம் மக்களை அடக்கி ஒடுக்கி தென்னிலங்கையில் இருந்து சிங்கள குடியேற்றங்களையும், மீன்பிடித் தொழிலைப் பாதிக்கும் வகையிலும் செயற்பட்டது. இதனால் தேர்தலில் அதனை வெளிப்படுத்தியுள்ளார்கள். "– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"மீள்குடியேற்றத்துக்கு இன்று பல நாடுகள் உதவ முன்வந்துள்ளன. சர்வதேச இராஜ தந்திர சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதனை நாம் இழந்து விடக் கூடாது. ஜனநாயகத்தை நிலை நாட்ட தமிழ் மக்களின் வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ளது. வெளி நாட்டில் உள்ள மக்கள் மீளத் திரும்புவதற்கு அவர்களது காணிகள் வழங்கப்பட வேண்டும். அவர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டும். நல்லிணக்கம் உருவாக வேண்டுமானால் தமிழ் மக்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும்."–என்றும் அவர் தெரிவித்தார்.

அங்கு கருத்து தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்,

"தமிழ் மக்கள் எதிர்நோக்கக் கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் 100 நாள் வேலைத் திட்டத்தில் எதுவும் இடம்பெறவில்லை. குறிப்பாக வடக்கு மக்களுடைய பிரச்சினைகள் மீள்குடியேற்றம், காணிகளை விடுவிப்பு, கைதிகள் விடுவிப்பு, காணாமல் போனோர் விடயம் என்பன மக்களுடைய எதிர்பார்ப்பாக இருந்தது.

தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அவை எவையும் இடம்பெறவில்லை. போரின் பின்னரான பிரச்சினைகள், எதுவும் குறிப்பிடப்படவில்லை. கடந்த கால அரசு ஊழல் நிறைந்த அரசு இராணுவ சர்வாதிகாரம் நிறைந்த ஆட்சி என்பதால் தமிழ் மக்கள் எல்லோரும் இணைந்து மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்."– என்று தெரிவித்தார்.

"மாவட்ட ரீதியில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மற்றும் பிரதமர், மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோருடன் பேசியுள்ளது. பொதுமக்களுக்கு சொந்தமான காணிகள் இராணுவத்தின் வசம் தான் உள்ளது.

வலி.வடக்கில் கட்டப்பட்டிருக்கும் ஹோட்டல்கள், விளையாட்டுத்திடல்கள் யாருக்காக?. எனவே புதிய அரசு இது தொடர்பில் ஓர் அரசியல் தீர்மானத்தை எடுக்க வேண்டும். அரசியல் தீர்மானத்தை மேற்கொண்டால் இவர்களை மீளக் குடியமர்த்த முடியும்.

தென்பகுதியில் மக்களது நிலங்களை இராணுவம் வைத்திருந்தால் அவர்களது நிலைப்பாடு எப்படி இருக்கும். எனவே மக்கள் எதிர்பார்க்கக் கூடிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்"– என்றும் அவர் தெரிவித்தார். (ற–14)

## நிறைய

– இவ்வாறு அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வால் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தனது இரு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுமுன்தினம் மாலை புறப்பட்டுள்ள அவர், தனது இலங்கைப் பயணம் தொடர்பில் ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

"ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை மக்கள் வெளிப்படுத்திய மாற்றத்தை நேரடியாகக் காண்பதற்காகவே நான் இலங்கைக்குப் பயணத்தை மேற்கொண்டேன். இந்த மாற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கு என்னைச் சந்தித்த சகல தரப்பினரும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, நகர அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேவர்தன ஆகியோருடன் ஆக்கபூர்வமான சந்திப்புக்களில் நான் கலந்து கொண்டேன்,"– என்று அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"தமிழ் மக்கள் தமது அமைதியான – சிறப்பான – எதிர்காலத்தை உறுதி செய்வதற்கும், நல்லிணக்கத்துக்குமான அவர்களின் நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடனான சந்திப்பின் போது உணர்ந்து கொண்டேன்.

ஏனைய அரசியல் – சிவில் சமூக, மத மற்றும் வர்த்தக பிரமுகர்களையும் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. இந்தச் சந்திப்புக்கள் அனைத்திலும் இரு தேசங்களுக்கும் பயனளிக்கும் வகையில் அமெரிக்க – இலங்கை உறவுகள் வளர்வதனை காண்பதற்கான எமது ஆவலை நான் மீண்டும் வலியுறுத்தினேன்."– என்றும் தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி சிறிசேன, பெற்றுக் கொண்ட வெற்றிக்காக எனது வாழ்த்தைப் பரிமாறிக்கொண்டேன். அமைதியான, மற்றும் செழிப்பான இலங்கையின் எதிர்காலத்துக்காகவும் முன்னோக்கிச் செல்லும் விருப்பத்தையும் வெளிப்படுத்தினேன்.

உண்மையாக நிறைவேற்ற வேண்டியவை இன்னும் நிறையவே உள்ளன. சவால்களை எதிர்கொள்வதற்கும் இலங்கையர்கள் தமது உண்மையான ஆற்றலை அறிந்து கொள்ள உதவுவதற்கும் இலங்கை மக்களுடன் இணைந்து செயற்படுவதற்கு அமெரிக்கா எதிர்பார்த்துள்ளது."– என்றும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ற–5)

## பிரதான

குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து ஒளிபரப்பாகும் தனியார் தொலைக்காட்சி அலைவரிசையின் சிங்கள நிகழ்ச்சி ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய அரசிலுள்ள பிரதான கட்சிகள் இரண்டும், இரு வகையில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. அதில், இரு பிரதான கட்சிகளும் தனித்துப் போட்டியிடுவது ஒன்று, மற்றது இரு பிரதான கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது.

ஒரே அணியில் இருந்து தேர்தலுக்கு முகம் கொடுப்பதனால், கட்சியிலுள்ள உறுப்பினர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் சந்தர்ப்பம் வழங்குவதில் சிக்கல் தன்மைகள் உள்ளன. இருப்பினும், இந்த முறைமையை புறந்தள்ளுவது என்ற தீர்மானம் இதுவரையில் எடுக்கப்படவில்லை."– என்றும் அவர் கூறியுள்ளார்.

"எது எப்படியானாலும், தனித்தோ சேர்ந்தோ போட்டியிட்டு தேர்தலின் பின்னர், கூட்டு அரசு ஒன்றை அமைப்பதென்பது உறுதியானதாகும். நாடாளுமன்றத்தில் அதிக உறுப்பினர்களைப் பெறும் கட்சியின் ஒருவர் பிரதமராக தெரிவு செய்யப்படுவார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பின்னடைவுக்குக் காரணமாக செயற்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன் சரிசமமாக இருந்து கட்சியின் போஷகராக செயற்பட முடியாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் வழங்கப்பட்ட கட்சியின் போஷகர் பதவியிலிருந்து விலகிக் கொள்வதாக கட்சியின் தலைவரும் தற்போதைய ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் அனுப்பினேன். பின்னர் கட்சியின் பதவிகளில் விரைவில் மாற்றங்கள் இடம்பெறும் எனவும் அதுவரையில் பொறுத்திருக்குமாறும் எனக்கு ஜனாதிபதி அறிவித்திருந்தார்"– என்றும் சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (ற–5)

## கச்சதீவு

அட்டை கட்டாயமாக வைத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் விலை உயர்ந்த நகைகள் மற்றும் இந்திய ரூபாவில் 5 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான பணம் என்பன எடுத்துச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் கச்சதீவுக்கு செல்ல முடியாது என்றும் இலங்கையில் இருந்து வரும் யாத்திரிகர்களை யாரும் இந்தியாவுக்குள் அழைத்து வர முடியாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற–14)

## சொந்த

தெரிவித்தனர்.

"எங்களது சொந்தக் காணிகளில் ஹோட்டல்களையும், புத்தர் கோவில்களையும் கடந்த கால அரசு அமைத்திருப்பது எமக்கு வேதனையளிக்கிறது. இதற்கு தீர்வுகாணாவிட்டால் எங்கள் காணி எல்லைக்குள் புகுந்து போராட்டத்தை நடத்தவும் தயாராக இருக்கின்றோம்."– என்றும் அவர்கள் கூறினார்கள்.

"சுமார் 12 கிலோ மீற்றர் தொண்டமானாற்றில் இருந்து மயிலிட்டி வரையான கடற்பகுதியை இராணுவம் வைத்திருப்பதால் கடலுக்கு செல்ல முடியாத நிலையில் எமது மீனவர்கள் உள்ளனர். சொந்த நிலங்களை விட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்கள் கலாச்சார சீரழிவையும், பிள்ளைகளின் கல்வி நிலையும், தொழில் பாதிப்பு என பல்வேறு பிரச்சினைகளை நாளாந்தம் எதிர்கொள்கிறார்கள். இதற்கெல்லாம் தீர்வு காண்பதற்கு மக்கள் சொந்த நிலத்தில் குடியமர்த்தப்பட வேண்டும்"– என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (ற–14)

## சுதந்திர

நியமன நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பங்கெடுத்துள்ளனர்.

சுதந்திர தின நிகழ்வின் பிரதான நிகழ்வு நாடாளுமன்ற விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொள்ளுமாறு சகல நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்களுக்கும் அரசு அழைப்பு விடுத்திருந்தது.

தமிழ் கட்சிகளின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசா ஆகியோர் பங்கெடுத்திருந்தனர்.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த அரசியல் தலைவர்களோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தலைவர்களோ இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கெடுப்பதில்லை. தமிழ் மக்கள் போதிய உரிமை இல்லாது இன்னல்பட்டு வருகின்றனர் என்று கூறியே அவர்கள் இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கெடுக்காதிருந்தனர். எனினும் இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் சுதந்திர நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ளனர்.

அதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கெடுக்கவில்லை. "இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு முழுமையான சுதந்திரம் கிடைக்கும் வரையில் இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கெடுப்பதில்லை"– என்று அவர் கூறினார். தான் நீதியரசராகப் பதவி வகித்த காலத்திலும் கூட சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கேற்றதில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். (ற–5)

## தமிழர் மனங்களை

ளது."– என்றும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

"பயங்கரவாதப் போர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரின் தலைமையின் கீழ் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

புதியதோர் ஆட்சியை நிறுவ மக்கள் எமக்கு ஆணையை வழங்கியுள்ளனர். கடந்த காலங்களில் நாட்டு மக்களுக்கு வருமானப் பிரச்சினை முக்கியமாக காணப்பட்டது. அதனால் சந்தோசமிழந்து காணப்பட்டனர். எனினும் நாம் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளில் சிலவற்றை இந்த மூன்று கிழமைகளில் நிறைவேற்றியுள்ளோம். ஓர் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கான அடித்தளமே இதுவாகும்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"நாட்டில் புதிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதோடு தேசிய பொருளாதாரத்தையும் முன்னேற்ற வேண்டும். அதற்கு அனைவரினதும் பங்களிப்பு அவசியமாகும். கடந்த காலங்களில் காணப்பட்ட பழிவாங்கல், காட்டிக்கொடுப்பு என்பவற்றை இல்லாதொழிக்க வேண்டும். ஒருவர் மற்றையவரின் துன்பத்தை அறிந்து உதவும் மனிதாபிமானம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். எமது குறைகளை நாமே கண்டறிந்து நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும்."– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"நாட்டின் அரச சேவையை சக்திப்படுத்த வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் காணப்படும் சில குறைபாடுகளையும் நீக்க வேண்டும். தேசிய மற்றும் சர்வதேச பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்த்துகொள்வதோடு சர்வதேச நாடுகளுடன் நட்புறவைப் பேணி நாட்டை அபிவிருத்தி பாதையில் இட்டுச்செல்ல வேண்டும். எமது நாட்டை மூன்றாம் தரப்பினருக்கு விட்டுக்கொடுக்காமல் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்"– என்றும் அவர் தெரிவித்தார். (ற–5)

## மரண அறிவித்தல்

### மாணிக்கவாசகர் விக்னேஸ்வரன்

**(துரைப்பத்தர்)**



கன்னார் லேன் நல்லூரை சேர்ந்த மாணிக்கவாசகர் விக்னேஸ்வரன் நேற்று (04.02.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (05.02.2015) வியாழக் கிழமை பிற்பகல் 04.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

# செய்திகள்

## பயங்கரவாதச் சட்டம் நீக்கப்படவேண்டும்

### தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கப் பிரதிநிதி கோரிக்கை

வவுனியா, பெப். 5

கடந்த அரசு விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களைப் பக்கத்திலே வைத்துகொண்டு அப்பாவி மக்களைக் கைது செய்தது. இந்த நிலை மாறி தற்போது வந்திருக்கும் அரசு உடனடியாக அவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் காரணமாக உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்குவதற்கும் உடன் நடவடிக்கை வேண்டும் எனத் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு–கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்தார்.

காணமற்போனவர்கள் தொடர்பில் பொறுப்பு கூறுமாறு கோரி நேற்று முன்தினம் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்ற சாத்வீகப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:–

67 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடிக்கொண்டிருக்கின்றார்கள் இலங்கை மக்கள். ஆனால் தமிழ் மக்களுக்கு அந்தச் சுதந்திரம் இருக்கிறதா என்பது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. ஆட்சிக்கு வந்த எல்லாச் சிங்கள அரசுகளும் தமிழ் மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்குச் சரியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஆனால் இந்த அரசு மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

காரணம் சாதாரணமாக ஒரு போராட்டம் நடக்கப் போகின்றது என்றால் அதில் கலந்துகொள்ளும் மக்களை விட அந்த இடத்தில் இராணுவப் புலனாய்வாளர்களே நிறைந்திருப்பார்கள். ஆனால் இன்று அந்த நிலைமை மாறி மக்கள் பயமின்றிப் போராட்டத்தில் கலந்துகொள்கிறார்கள்.

சுதந்திர தினத்தை கொண்டாடும் நிலையில் இந்த நாளிலே தங்களுடைய குடும்ப உறவுகளை இழந்து தவிக்கின்ற, இன்னமும் அவர்களுக்கு என்ன நடந்தது, வெள்ளைவானில் கொண்டு சென்றவர்கள் என்ன ஆனார்கள், அவர்கள் எங்கு இருக்கின்றார்கள், என்ன நடந்தது என்பதற்கான தீர்வுகள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. காணாமல் போனவர்கள் குற்றங்கள் இழைத்திருந்தால் அவர்களை சட்ட ரீதியாகத் தண்டித்துப் பின்னர் விடுதலை வழங்கலாம்–என்றார். (த–21)

## நிறை குறைந்த பாண்; 4 பேருக்கு வழக்கு



யாழ்ப்பாணம், பெப். 5

வரையறை செய்யப்பட்ட நிறையைக் குறைத்து பாண் உற்பத்தி செய்து பொதுமக்களுக்கு விற்பனை செய்து வந்த நான்கு பாண் உற்பத்தி நிலையங்கள் கண்டறியப்பட்டுள்ளன என்று பாவனையாளர் அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் வசந்தசேகரன் தெரிவித்தார்.

பாண் ஒவ்வொன்றும் 450 கிராம் கொண்டதாக உற்பத்தி செய்யப்படவேண்டும். ஆனால் மானிப்பாய், பண்டத்தரிப்பு, தாவடி–இணுவில் பகுதி உட்பட 4 இடங்களில் இயங்கி வரும் பாண் உற்பத்தி நிலையங்கள் பாண் ஒவ்வொன்றையும் 370 கிராமுக்கும் 420 கிராமுக்கும் இடைப்பட்ட நிறையில் உற்பத்தி செய்து பொதுமக்களுக்கு விற்பனை செய்து வந்துள்ளன.

பாவனையாளர் அதிகார சபையினர் அந்த நான்கு நிலையங்களினதும் உற்பத்திகளைப் பரிசோதித்தபோதே அவர்கள் பெரிய அளவில் நிறைகுறைத்து பாண் உற்பத்தி செய்து வந்தமை கண்டறியப்பட்டது.

அவர்களில் மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட 3 பேருக்குத் தலா 4 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டனர். யாழ். நீதிமன்ற எல்லைக்குட்பட்ட நிலையத்துக்கு விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

பொதுமக்கள் தாம் வாங்கும் பாண் 450 கிராம் நிறையைக் கொண்டுள்ளனவா என்று நிறுத்துப் பார்க்க முடியும். நிறை குறைவாக இருப்பின் உடனடியாக எமக்கு அறிவியுங்கள். உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஏனையவர்களும் பாதிக்கப்படுவதிலிருந்து தவிர்த்துக்கொள்ளலாம் என்று வசந்தசேகரன் மேலும் கூறினார்.

கடந்த வருட இறுதியிலும் நான்கு பாண் உற்பத்தி நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த–4)



இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் உலகப் பெருமஞ்சத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு முருகன் வள்ளி, தெய்வயானையுடன் வெளிவீதியுலா வரும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு 7.30 மணியளவில் இடம் பெற்றது. குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்து வந்த அடியவர்களின் அரோகரா கோசத்தின் மத்தியில் பெருமஞ்சம் ஆடி அசைந்து நகர்ந்தது. (த–86)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

தென்மராட்சி, பெப் 5

பெறாமகனின் திருமண நிகழ்வில் கலந்து விட்டு காணாமற்போன குடும்பஸ்தர் வீட்டுக்கு அருகில் உள்ள பற்றைக் காட்டு மரமொன்றில் மறுநாள் காலை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த இரண்டாம் திகதி நுணாவில் மத்தியில் இடம்பெற்றது.

காலையில் நடைபெற்ற திருமண நிகழ்வில் பங்கேற்று விட்டுப் புதுமணத் தம்பதிகள் மணப்பெண் வீட்டுக்குச் சென்ற பின்னர் இவர் காணாமற் போயிருந்தார். புதுமணத் தம்பதிகள் கால் மாறி மீண்டும் இரவு 7 மணியளவில் மாப்பிள்ளை வீட்டுக்கு வந்தபோது இவர் வரவில்லை. இதனால் இவரை எல்லா இடமும் தேடிப்பார்த்தும் காணவில்லை. மறுநாள் காலை தேடிய போது இவரது வீட்டிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள பற்றைக் காட்டில் உள்ள மரமொன்றில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தைச் சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

சாவகச்சேரி பதில் நீதிவானின் பணிப்பின்பேரில் திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் விசாரணைகளை நடத்தினார். சாவகச்சேரி மருத்துவமனை பொறுப்பதிகாரியினால் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தப்பட்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (த–9)

## தேசியக்கொடி விற்பனை மந்தம்

கொழும்புத்துறை, பெப். 5

சுதந்திரதினத்தை ஒட்டி யாழ். வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைத்திருந்த தேசியக் கொடிகளின் விற்பனை இம்முறை மிகவும் மந்தமாகவே காணப்பட்டதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.



கடந்த வருடங்களில் வர்த்தக நிலையங்கள், வாகனங்கள், வீடுகளில் கட்டாயம் தேசியக் கொடிகள் பறக்கவிடப்படவேண்டும் எனப் படையினரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்துப் பெருமளவானோர் தேசியக் கொடிகளை பறக்க விட்டிருந்தனர். இம்முறை களநிலைமை மாற்றமடைந்ததைத் தொடர்ந்து தமிழ்ப் பகுதிகளில் மக்கள் தேசியக் கொடிகளை கொள்வனவு செய்வதிலும், பறக்க விடுவதிலும் ஆர்வமின்றியே காணப்பட்டனர்.

யாழ். நகரப் பகுதியில் குறைந்த அளவு கொடிகள் கட்டப்பட்டிருந்ததை இம்முறை காண முடிந்தது. (த–135)

## மகனை கட்டி வைத்து தாக்கினார் தந்தை

பாடசாலைக்குக் கொண்டுசெல்லும் தனது சைக்கிளைப் பூட்டி விட்டுச் சென்ற 13 வயது மகனைத் தூணுடன் கட்டி வைத்துக் கயிற்றினால் மோசமாகத் தாக்கியுள்ளார் பாசமிக்க தந்தை.

காயங்களுக்கு இலக்கான மாணவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மட்டுவில் வடக்கில் இடம்பெற்றது.

கள்ளுத் தவறணைக்குச் செல்வதற்குச் சைக்கிள் இல்லாததால் நடந்து சென்று கள்ளு வாங்கிக் கொண்டு வந்து வீட்டில் வைத்துள்ளார் தந்தை. இதன் பின்னர் விளையாடிக்கொண்டிருந்த மகனை அழைத்து வந்து வீட்டுத் தூணுடன் கயிற்றினால் கட்டி விட்டு சைக்கிளைப் பூட்டிவிட்டுச் சென்றதற்காகக் கயிற்றினால் சுமார் அரைமணி நேரம் கதறக் கதறத் தாக்கியுள்ளார்.

ரியூசனுக்குச் சென்ற பிள்ளையை அழைத்து வரத் தாய் சென்றிருந்த வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்கு வந்த தாய் மகனை விடுவிக்க முயற்சித்த வேளை அவரை உலக்கையை எடுத்து வந்து தாக்க முற்பட்டுள்ளார் தந்தை. அங்கிருந்து ஓடிய தாயார் சிறிது தூரத்தில் உள்ள உறவினரை அழைத்து வந்து சிறுவனை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தார். சிறுவனுக்கு முகத்தில் காயம் காணப்படுவதுடன் உடம்பில் கயிற்றினால் அடித்த தழும்புகளும், இரண்டுகைகளும் வீங்கிய நிலையிலும் காணப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த–9)

## செம்மலைக் கடற்கரையில் ஒதுங்கியது ராட்சதச் சுறா



முல்லைத்தீவு, பெப் 5

முல்லைத்தீவு செம்மலைக் கடற்பகுதியில் இறந்தநிலையில் ராட்சதச் சுறா மீன் ஒன்று நேற்று முன்தினம் கரை ஒதுங்கியுள்ளது.

மீனவர்கள் கொடுத்த தகவலை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், முல்லைத்தீவு பிரதேச செயலாளர் திரேஸ்குமார் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு அதனை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (த–435)

# மருத்துவ புறக்கணிப்புக்கு எதிராக மக்கள் கொதிப்பு

## மன்னார் வைத்தியசாலை முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டம்





மன்னார், பெப். 5

மருத்துவப் புறக்கணிப்பு தொடர்பில் சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் ஆர்ப்பாட்டம் ஒன்று மன்னாரில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

மன்னார் பிரஜைகள் அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. மன்னார் பொது வைத்தியசாலையின் மருத்துவர்கள் உரிய நேரத்தில் சிகிச்சையளிக்காது புறக்கணித்ததன் காரணத்தால் சில உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றஞ் சாட்டினார்.

ஜனவரி 29ஆம் நாள் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 29 வயதான ஆனந்தன் அனுக்சன் உயிரிழந்தமை இதன் தொடர்ச்சியே என்றும் அவர்கள் கூறுகின்றனர். இதையடுத்தே மருத்துவப் புறக்கணிப்பின் மீது சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கான ஆர்ப்பாட்டத்தில் தாங்கள் இறங்கியிருக்கிறார்கள் என்று மன்னார் பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர்.

உயிரிழந்த அனுக்சனுக்கு அஞ்சலி செலுத்தும் பதாகை ஒன்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தார்கள். மன்னார் விளையாட்டு மைதானத்தின் முன்பாக இருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட அவர்கள், பொது வைத்திய சாலையின் முன்பாக அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார், நொச்சிகுளம் கிராமத்தை சோந்தவர் ஆனந்தன் அனுக்சன். காய்ச்சல் காரணமாக பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். ஒரு நாள் அங்கு தங்கியிருந்த அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது. மறுநாள் அவர் வீடு செல்லலாம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

வீடு சென்ற அனுக்சன் சில தினங்களில் மீண்டும் கடும் சுகவீனமுற்றார். உடனடியாக அவரை மீண்டும் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்த்தனர். நிலைமை மோசமாக இருந்ததால் மருத்துவர்கள் அவரை யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர். யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்ட அனுக்சன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். "காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும் சில நாள்களுக்கு முன்பே அழைத்து வந்திருந்தால் உயிர் பிழைக்க வைத்திருக்கலாம் என்றும் யாழ்ப்பாணம் வைத்திய சாலை மருத்துவர்கள் தெரிவித்தனர்" என்று கூறுகின்றனர் உறவினர்கள்.


அனுக்சன் முதல் தடவை மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதே அவரை முறையான பரிசோதனைகளுக்கு உட்படுத்தி சிகிச்சையளித்திருந்தால் அவரைக் காப்பாற்றி இருக்க முடியும் என்று உறவினர்கள், நண்பர்கள் நம்புகின்றார்கள்.

மருத்துவப் புறக்கணிப்புக் காரணமாகவே அனுக்சன் உயிரிழந்தார் என்றும் அவர்கள் கருதுகிறார்கள். எனவேதான் இவ்வாறான மற்றொரு இழப்பு ஏற்படாமல் இருப்பதற்காக இந்த விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டு அவர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் மகளிர் அமைப்புகள், கிராமிய அமைப்புகளைச் சேர்ந்தோரும் பொது மக்களும் கலந்து கொண்டனர். தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் கையளிப்பதற்காக மாகாண சபை உறுப்பினர் பிறிமுஸ் சிராய்வாவிடம் கையளித்தனர். மன்னார் மாவட்ட வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் ரூபன் லெம்பேட்டிடமும் மனுவின் பிரதி ஒன்று கையளிக்கப்பட்டது.

"வைத்தியசாலையில் பணியாற்றுபவர்கள் தவறு இழைத்திருப்பின் விசாரணையின் பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

(உ–56)



தைப்பூசத் திருநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் நல்லூர் கந்தன் வள்ளி, தெய்வானை சமேதரராகத் திருமஞ்சத்தில் ஆரோகணித்து வீதி வலம் வந்தார். (த–17)

## ஆலயத்தில் திருட்டு

கிளிநொச்சி, பெப். 5

கிளிநொச்சி, முரசுமோட்டையில் அமைந்துள்ள ஊற்று விநாயகர் ஆலயத்திலிருந்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு பித்தளைக் குத்துவிளக்குகள் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். ஆலயத்தின் முன்பக்கக் கதவு உடைக்கப்பட்டுக் குத்து விளக்குகள் திருடப்பட்டுள்ளன.

(த)

## பலாலி இராஜராஜேஸ்வரி அம்மன்ஆலயத்தில் பூசை





வலி.வடக்கு, பெப். 5

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள பலாலி இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர். இதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

நேற்று முன்தினம் பகல் இராணுவச் சோதனைசாவடியில் இருந்து இராணுவத்தினரின் பஸ்கள் மூலம் மக்கள் ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இதில் சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்வில் மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தைப் பூசத்தையொட்டி இந்து மக்கள் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு வசதியாக இராணுவத்தினர் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி அனுமதி வழங்கியிருந்தமை குறித்து மக்கள் மகிழ்ச்சி வெளியிட்டனர். (கு–86)

# சுற்றுலாப் பயணிகள் வடக்கே படையெடுப்பு

## 2 நாள் விடுமுறையைப் பயன்படுத்தி

யாழ்ப்பாணம், பெப். 5

கடந்த இரண்டு நாள்கள் விடுமுறையைப் பயன்படுத்திப் பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் வடக்கு நோக்கிப் படையெடுத்தனர்.

நேற்றும், நேற்று முன்தினமும் கிடைத்த இரண்டு நாள் விடுமுறை காலத்தை சாதகமாக்கி 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் தெற்கில் இருந்து வடக்கே பயணித்துள்ளனர்.

இவர்களில் அநேகமான பெரும்பான்மையின மக்கள் ரயில் மூலமும் ஏனையோர் வாகனங்களிலும் வந்திருந்தனர்.

யாழ்ப்பாணம் வரை ரயில் மூலம் வந்த மக்கள் பின்னர் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி குடாநாட்டைச் சுற்றிப் பார்த்தனர். நயினாதீவு, கீரிமலை, கசூரினா கடற்கரை, யாழ். நாகவிகாரை, நிலாவரைக் கிணறு உட்படக் குடாநாட்டின் ஏனைய பகுதிகளையும் இந்தச் சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டனர்.

சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த வாகனங்களில் புதிய ஜனாதிபதி மைத்திரியின் உருவப்படங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

சுற்றுலாப் பயணிகள் யாழ்.நகரைச் சூழ்ந்து கொண்டதால் நேற்று முன்தினம் நகரில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. அத்துடன் நகரில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விற்பனையும் அதிகரித்துக் காணப்பட்டது. அதனைவிட பனங்கிழங்குக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டது. அநேகமானோர் அதை கூடுதலாகக் கொள்வனவு செய்து கொண்டு சென்றனர்.

(த–17)

# மாணவர்களிடம் நிதி சேகரிக்க உடன் தடை

## மீறும் அதிபர்கள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 5

பாடசாலைகளில் முறையற்ற வகையில் மாணவர்களிடமிருந்தோ பெற்றோர்களிடமிருந்தோ நிதி சேகரித்தல் புதிய அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப உடனடியாகத் தடைசெய்யப்படுகிறது. அவற்றை மீறினால் பாடசாலை அதிபர்கள் நேரடியாகப் பொறுப்புக்கூறவேண்டும் என்பதோடு அவர்களுக்கு எதிரான கடும் நடவடிக்கையையும் எதிர்கொள்ள வேண்டும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

கடந்த காலங்களில் பல்வேறு செயற்பாடுகளை முன்வைத்து பெற்றோர், மாணவர்களிமிருந்து நிதி சேகரித்தல் பரவலாக இடம்பெற்று வந்துள்ளது. அது முறைப்படி செயற்படுகின்றது என்பதைக் காட்டுவதற்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பனவற்றுக்கு மேலதிகமாக தரவட்டங்கள், நலன்புரிச் சங்கங்கள், போன்ற கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டமை சாதாரண விடயமாக மாறியுள்ளது. இனிமேல் இந்த நடைமுறை இடம்பெறக்கூடாது.

நிதி சேகரிப்புக்கு எந்தவொரு நபருக்கும் அங்கீகாரம் வழங்குதலை நேரடியாகவோ மறைமுகமாகவோ செய்தல் கூடாது. எதோவொரு வகையில் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் இன்றி நிதி சேகரிப்பு இடம்பெற்றால் உரிய நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

பாடசாலைகளில் தற்போதுள்ள கட்டடங்களைப் பராமரித்தல் தவிர்ந்த வேறு கட்டடங்களை நிர்மாணிக்கவோ மாற்றம் செய்யவோ கூடாது. தரமான கல்விக்குப் பாடுபடுவதனை விட்டுப் பாடசாலைச் சுற்று மதிலுக்கு அதிக நிதியைச் செலவிடல் உள்ளிட்ட பௌதீக அபிவிருத்திகளைத் தொடங்கக் கூடாது.

பாடசாலை அதிபர் ஒருவர் சட்டரீதியான பற்றுச் சீட்டு ஒன்றை வழங்கி நிதி சேகரித்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களாக, வசதிகள் சேவைக் கட்டணம், பாடசாலை அத்தியாவசிய செலவுகளைச் செலுத்துவதற்கான (மின்சாரம், தொலைபேசிக் கட்டணம், பாதுகாப்புச் செயற்பாடு) நிதி என்பனவே குறிப்பிடப்பட்டுள்ளன. இரண்டாவது விடயத்துக்கு நிதி சேகரிப்பதற்கு அதிபர்கள், பாடசாலையின் அத்தியாவசியச் செலவுகளின் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிக்க வேண்டும், அந்த மதிப்பீட்டைக் கல்வி அமைச்சின் மூலமாக அல்லது வேறு அரச நிறுவனங்களின் மூலமாகக் கிடைக்கும் நிதிகளை மதிப்பீடு மற்றும் இடையேயான வேறுபாட்டினைக் கணித்தல் வேண்டும். அந்த வேறுபாட்டின் மூலமாக பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையால் பிரித்து ஒரு மாணவருக்குரிய நிதியைக் கணித்தல். இவற்றுக்கு ஏற்ப தயார் செய்யப்பட்ட அறிக்கையைக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி ஒரு மாணவனிடமிருந்து பாடசாலையின் செலவைப் பூரணப்படுத்தத் தேவையான நிதியைச் சேகரிப்பதற்கான அங்கீகாரத் தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

அந்த அறிக்கை கல்வி அமைச்சுக்குக் கிடைக்கப்பெற்றதன் பின்னர் குழு ஒன்றின் மூலமாக ஆராயப்பட்டுத் தேசிய பாடசாலைகள் தொடர்பில் மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் மூலமாகத் தனிப்பட்ட ரீதியில் பெற்றுத் தரப்படும்.

மாகாணப் பாடசாலைகள் தொடர்பில் மாகாணக் கல்விச் செயலாளருக்கு இவ் வலுவாண்மை கிடைக்கப்பெறுவதோடு மாகாணக் கல்விச் செயலாளர் மூலமும் முறையாகக் குழுவொன்று நியமிக்கப்பட்டு சேகரிக்கப்படவுள்ள நிதி தொடர்பில் ஆராய வேண்டும்.

சட்ட ரீதியாக நிதியைச் செலுத்த வேண்டும் என்றாலும் மாணவர்களையோ பெற்றோரையோ கட்டாயப்படுத்தவோ பலவந்தப் படுத்தவோ கூடாது. அதனைச் செலுத்த வசதியற்ற மாணவர்கள் கிராம அலுவலரின் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தும் போது அனைத்துக் கட்டணங்களிலிருந்தும் விடுவித்திருப்பதாக பெற்றோருக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும். கட்டணம் செலுத்தாத மாணவர்களை எவ்வித உடல், உள ரீதியான பாதிப்புக்களுக்கும் உட்படுத்தல் கூடாது. கல்வி அமைச்சினால் பாடசாலை நிதிச் செயற்பாடுகள் தொடர்பாக விடுவிக்கப்பட்ட சுற்றறிக்கைகளில் நிதி வசூலிப்பது தொடர்பான கட்டளைகளை விஞ்சி இந்தச் சுற்றறிக்கை செல்லுபடியாகும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–4)



முல்லைத்தீவின் மூத்த புலவர் அரியான் பொய்யகையின் ( கை. செல் லத்துரை) திருவுருவச் சிலை நேற்றுக் காலை 10 மணிக்கு முள்ளியவளை அம்மன் சந்தியில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகத்தினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அரச உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், பிரதேச வாழ் மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த–433)

# இன்று மின் தடை

யாழ்ப்பாணம், பெப். 5

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழன் காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ். பிரதேசத்தில் பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், காிசன் 5 ஆவது பொறியியல் படை முகாம், காிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வு காலவிடுதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் கற்சிலைமடுவிலும், வவுனியா பிரதேசத்தில் வாரிக்குட்டியூர் – 04, 05, 06, தவசிகுளம், மதவு வைத்த குளம், தோணிக்கல், ஆலடி, பண்டாரிக்குளம், குளோப் மில் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் மன்னார் மாவட்டம், வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பம் கவுஸ், மீன்பிடிச் சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், சீனத் துறை முகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடை ஏற்படும் என இலங்கை மின்சார சபையின் வடமாகாண மின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (த)



# காணாமற்போன இளைஞர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, பெப். 5

மட்டக்களப்பு சீலமுனை வாவியிலிருந்து நேற்றுப் புதன்கிழமை காலை இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞர் சவளக்கடை பொலிஸ் பிரிவிலுள்ள கல்முனை அன்னமலை பிரதேசத்தைச் சேர்ந்த பத்திகுட்டிகே மில்ரோய் நிரஞ்சன் நோலிஸ் (வயது–26) என அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

கடந்த 2ஆம் திகதியிலிருந்து குறித்த இளைஞர் காணாமற்போன நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கல்முனை அன்னமலைப் பிரதேசத்தில் திருமணம் செய்துள்ளதாகவும், இவருக்கு ஒரு குழந்தை உண்டு எனவும் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக மட்டக்களப்பு பொலிசார் குறிப்பிட்டனர். (த)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச தனியார் உத்தியோகத்தர்கள், வெளிநாடுசெல்வோர் தொழில்தேடுவோர், வீட்டுப்பெண்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.
சனி,ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் – 07.02.2015
பிரிவு 1. காலை 08.00-10.00 பிரிவு 2.மாலை 03.00 - 05.00
அடிப்படை ஆங்கிலம்
எமது அடிப்படை ஆங்கிலப் பயிற்சிநெறியில் ஆங்கிலம் எழுத மற்றும் வாசிக்கத்தெரியாதவர்கள் மட்டுமே இணையமுடியும்.
பதிவு செய்யவேண்டிய திகதி :-07.02.2015
வாரநாள் பிரிவுகள் (திங்கள்,புதன்) ஆரம்பம் :- 09.02.2015
பிரிவு 1. காலை 08-10 பிரிவு 2. 10-12 பிரிவு 3. 3-5
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

வேலைவாய்ப்பு
கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் கீழ் காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாகக் காத்திருக்கின்றன.

| | |
|---|---|
| Plumber | - 2350+OT |
| Civil Techni/Painter/Mason | - 2020+OT |
| Heavy Duty Driver (Valid License) | - 2407+OT |
| Machanical Technician / Pump&Mortors | - 2720+OT |
| Supervisor (Cleaning) | - 3100+OT |
| Driver Light vehicle | - 1200 |
| Electrician Helper | - 900+OT |
| Painter Helper | - 900+OT |
| A/C Technician Helper | - 900+OT |

அதி உயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.
எதிர்வரும் 7ஆம் திகதி நேர்முகப்பரீட்சை கொழும்பில் நடைபெறும்.
உடன் தொடர்புகொள்ள:
Lanka Voice 077-7929475
E.mail:lankavoicenafees@gmail.com
Capital Recruitment International (Pvt) Ltd,
No:130,3/1, 3rd Floor Grandpass, Colombo - 14.
L.L No:-2248

B.B.A, B.Com (Medium Tamil)
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் (வெளிவாரி)
- A/L இல் வர்த்தகம், கலை, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க த்குதியுடையவர்கள் ஆகும்.
- இக் கற்கைநெறிகளின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்.
- பதிவுகள் நடைபெறுகின்றன.
- பதிவுத் திகதி : 25.02.2015 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
- விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
விவரங்களுக்கு: S. அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். 021 222 8148

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.02.2015 இல் ...டு வெளியிடப்பெற்றது.